ஈஸ்வரி புத்தக நிலையம்
ஸ்ரீ ஆண்டாள் சந்நதி
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.
போன் : 20149

# மெல்லத் திறந்தது கதவு

## 1

அழகிய விழிகள் அகல விரிய சற்று நேரம் எதுவும் தோன்றாமல் பேந்த விழித்தாள் சுமித்ரா.

சில நிமிடங்கள் அவள் அறியாமலே கழிந்த பின்னர் மீண்டும் அவளுக்குச் சுற்றுப்புறம் புரியத் தொடங்கியது.

ஓர் ஏளன நகை இழையோட எதிரே அமர்ந்திருந்த தங்கையின் முகமும் தெளிவாயிற்று.

சித்ரா நிஜமாய்த்தான் சொன்னாளா?

அல்லது ஒருவேளை விளையாட்டாய்த் தமக்கையைச் சீண்டிப் பார்த்திருப்பாளோ?

அவ்வப்போது சீண்டுகிறவள்தான்.

ஆசைகள் உள்ளவள். ஆசை நிறைவேறாதபோது சீற்றத்தையும், சினத்தையும் சிறு கேலியாய் இழைத்துக் காட்டுகிறவள்தான்.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து; ஆசைகளை வளர்த்தால்தானே வேதனை என்று சுமித்ரா கூறுகையில், "ஆசைகளை வளர்க்கக் கூடாது என்று நம் விஞ்ஞானிகளின் மர மண்டைக்குக் கொஞ்சமேனும் தெரிகிறதா, பாரேன்!" என்பாள்.

தமக்கை திகைத்து விழிக்கையில், "பின்னே பாரேன், அவரவர்கள் சும்மா தூங்கிக்கொண்டு இராமல், ரேடியோ, டி.வி, கலர் டி. வி., வீடியோ என்று கண்டுபிடித்துக் கொண்டு போகிறார்களே. துணியில்கூட வெறும் பருத்தியோடு நில்லாமல், நைலான், ரேயான், பாலியெஸ்டர், ஜார்ஜெட், கிரேப், சைனா சில்க் என்று எத்தனை! இதில் பிளெண்டுகள் வேறு!" என்று கண்ணை விரித்துத் தோளை உயர்த்துசிறவள் சட்டெனச் சீறுவாள்.

"அக்கா, நான் காஞ்சிபுரம் பட்டுக்கு ஆசைப்பட வில்லை. ஏன், மைசூர் கிரேப், பின்னி பட்டுகள் கூடவேண்டாம், ஒரு சைனா சில்க்... ஒரு நைலான் ஜார்ஜெட்... இதற்குக்கூட எனக்குத் தகுதியில்லையா? வீணாவைப் பார், எத்தனை கட்டுகிறாள்? அவளைவிட நான் எதில் குறைவு? அழகிலா? என்னைவிடப் பாதி மார்க் வாங்கினவள், பி.ஏ.இல் பெயில், நான் டைப் டைரட்டரோடு போராட அவள் மாருதியில் வழுக்கிக்கொண்டு போகிறாள். எனக்குக் கார் வேண்டும் என்றுகூட இல்லை அக்கா, செவலைப் பாராமல் ஓர் ஆட்டோவில் ஏறி இடபாடுகளுக்கு ஒதுங்கிப் போக முடிகிறதா?" என்று குமுறுவாள்.

பதில் கூற முடியாமல் வேறு வகையில் தங்கையைச் சமாதானப்படுத்த முயலுவாள் சுமித்ரா. "அடுத்தவரைப் பார்த்து ஏங்கக் கூடாது கண்ணம்மா. அப்புறம் பொறாமை, வெறுப்பு என்று கெட்டதெல்லாம் வந்து சேரும். பாண்டவர் மேல் கொண்ட



பொறாமையால் துரியோதனன் கூட்டமே அழிந்து விட வில்லையா? அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் என்று வள்ளுவர் கூடச் சொல்லியிருக்கிறார்."

"நம் நாடு கொஞ்சமேனும் உருப்பட வேண்டும் என்றால் இந்தப் பழைய நூல்கள் எல்லாவற்றையும் சேர்த்துத் வைத்துக் கொளுத்த வேண்டும்; ஆசைப்படக் கூடாது என்றால் யாருக்கு உழைக்கத் தோன்றும்? இருந்தால் உண்பதும், இல்லாவிட்டால் உறங்குவதும் என்று தருப்பிடித்துப் போய்விட மாட்டார்களா?"

"அதிக ஆசைப்படுவதுதான் தவறு சித்ராம்மா!"

"என் ஆசைகள் எதுவும் அதிகப்படி இல்லை!" என்று வெட்டெனப் பதில் வரும்.

"எதற்கும் தலை எழுத்து என்று இருக்கிறது இல்லையாம்மா?" என்று வேதாந்தத்தில் இறங்குவாள் தமக்கை.

"அதை மாற்றிக் காட்டுகிறேன் பார்," என்று முடிப்பாள் சித்ரா.

மாற்றிக் காட்ட எடுத்த முடிவா இது?

கடவுளே!

சட்டெனச் சிரித்தாள் சித்ரா.

"என்னக்கா, பேச்சையே காணோம்? அதிர்ச்சியில் ஊமை கீமை ஆகிவிட்டாயா?" என்றாள் முறுவலோடு.

அந்தச் சிரிப்பும் முறுவலும் நம்பிக்கை ஊட்ட, "இந்த மாதிரி யெல்லாம் பேசினால் வேறு எப்படி ஆகுமாம்; இதிலெல்லாமா விளையாடுவது?" என்று செல்லமாகக் கடிந்தாள் சுமித்ரா.

சித்ராவின் சிரிப்பு சட்டென மறைந்தது.

“விளையாடவில்லை, அக்கா. நான் சொன்னது எல்லாம் முழுக்க உண்மை!” என்றாள் அழுத்தந் திருத்தமாக.

“யோசித்துப் பேசு, சித்ரா. இதெல்லாம் இப்படி அலட்சியமாக முடிவு எடுக்கிறவிஷயம் இல்லை!” என்றாள் சுமித்ராவும் சற்றுக் கடுமையாகவே.

“நான் அலட்சியமாக முடிவு எடுக்கவில்லையே. ஒரு வாரம் முழுவதும் யோசித்தேன்; அந்தக் கம்ப்யூட்டர் கோர்ஸ் நடத்தும் ஆபீசில் போய் நன்றாக விசாரித்தேன். எந்தவித சலுகைக்கும் இடம் இல்லை. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கட்டினால்தான் வகுப்பில் சேரமுடியும் என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள். பணத்துக்கு என்ன செய்வது? என் ஆபீஸ் எம்.டி. பிசினஸ் டூர் போகும் போது உடன் சென்று அந்தப் பணத்தைச் சம்பாதிக்கப் போகிறேன். வேறு வழியிருந்தால் அந்த வழியில் முயற்சி செய்திருப்பேன்தான். ஆனால் வழி அசிங்கம் என்றாலும் செல்லத்தான் போகிறேன். ஏனென்றால் அந்தப் படிப்பை முடித்து விட்டால் உடனே வேலை - அதுவும் குறைந்த பட்சம் ஆயிரம்ரூபாய் சம்பளத்தில் - கிடைக்கும். அலவன்ஸ் வேறு.”

எம்.டி. யோடு டூர் - அதற்காக அதிகப்படியாகக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் பணம் வரும் என்றால் டூரில் தங்கையின் வேலை தட்டெழுத்து இயந்திரத்தோடு மட்டும் நிற்கப்போவது இல்லை என்பது சுமித்ராவுக்குப் புரியாமல் இல்லை.

தங்கையும் அறியாமல் போய் இதில் மாட்டிக் கொள்வதாகவும் இல்லை.



இரு கண்களையும் நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டே சகதியில் குதிக்கப் போகிறேன் என்கிறாள்.

எதெது முக்கியமானது, உயர்வானது என்பது இல்லையா?

இவளிடம் எப்படிப் பேசி எப்படிப் புரிய வைத்து, எப்படி இந்த மடத்தனத்தை நிறுத்துவது?

தங்கையைக் கூர்ந்து பார்த்தபடி, “பிறகு?” என்று ஒற்றைச் சொல்லாகக் கேட்டாள்.

தலையை நிமிர்த்தி, பிறகென்ன? இந்த எலிப் பொந்தை விட்டுவிட்டுக் கொஞ்சம் காற்று வருகிற வீட்டில் வசிப்போம். நாலு நல்ல துணிமணி கட்டுவோம். நல்லபடியாக இரண்டு கூட்டு காய்களுடன் சாப்பிடுவோம்.” என்று முடித்தாள் தங்கை.

“அதற்காக? நாளை உனக்குத் திருமணம் என்பதையே மறந்து விட நேருமே!” என்றாள் சுமித்ரா, வேதனையை உள்ளடக்கி.

தலையைச் சிலுப்பி, “இன்று மட்டும் எவன் காத்திருக்கிறானாம்!” என்று அலட்சியமாகக் கேட்டாள் சித்ரா.

“பரசு..” என்றாள் சுமி மெதுவாக.

தங்கையின் முகம் சினத்தில் சிவப்பது அந்த அரை வெளிச்சத்திலும் நன்றாகத் தெரிந்தது.

“என் தங்க நிறத் தங்கை!” என்று நினைக்கையில் உள்ளூர வலித்தது.

இந்த அழகெல்லாம் வீணாகப் போவதா?

சித்ராவின் வேகப் பேச்சு அவளுடைய சிந்தனையை இடை வெட்டியது.

"பரகவாம் பரசு. அவர் சேமித்து, அவருடைய குடும்பத்தைக் கரையேற்றி. பிறகு சேமித்து, என்னை மணந்து... பிறகு... சே. அந்தப் பேச்சை விடு அக்கா."

"நானும்கூட இந்த இரண்டு ஆண்டுகளாக உனக்காகச் சேமிக்கிறேன் சித்ராம்மா. ஆயிரம் ரூபாய் சேர்த்துவிட்டேன்!" என்று அன்றுவரை தங்கையிடம் மறைத்து வைத்திருந்த ஒரே விஷயத்தை உடைத்தாள் பெரியவள்.

சேலை, சினிமா என்று செலவு வைத்துவிடுவாளோ என்று ஒளித்து ஒளித்துச் சேர்த்தது.

ஆனால், "ஆயிரம் ரூபாய்!" என்று ஏளனமே செய்தாள் தங்கை. "இரண்டு ஆண்டுகளின் சேமிப்பு; ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் கூடச் சேர்க்க முடியவில்லை - அதுவும் இவ்வளவு சிக்கனமாய் இருந்தும்கூட."

"இனி இன்னும் கொஞ்சம் சிக்கனமாய்..." என்று தொடங்கிய சகோதரியை, "போதும், போதும்" என்று கையை உயர்த்தித் தடுத்தாள் சித்ரா.

"இந்தச் சிக்கனம், சேமிப்பு என்ற வார்த்தைகளை எல்லாம் கேட்டாலே வாந்தி வருகிறது" என்று முகத்தைச் சுளுக்கித் தோளைக் குலுக்கினாள்.

சட்டென மூண்ட ஆத்திரத்துடன், "ஒழுக்கம் என்கிற வார்த்தை?" என்று கேட்டுவிட்டாள் சுமித்ரா.

ஒருகணம் தயங்கி விட்டுக், "காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறிந்துவிட வேண்டியதுதானே!" என்றாள் சித்ரா.



"என்னவெல்லாம் பேசுகிறாய்! அம்மாவும் அப்பாவும் இருந்து கேட்டிருந்தால் எவ்வளவு வேதனைப்படுவார்கள்?" என்று வருத்தத்தை மறைக்க மாட்டாமல் வெளிக்காட்டினாள் சுமித்ரா.

"அதுதான் இல்லையே. அத்தோடு இந்த மாதிரி அவல நிலையில் விட்டுப் போன அவர்களைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட எனக்குப் பிரியம் இல்லை!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் இளையவள்.

"பாவம்! திடீரென்று விபத்தில் சாவோம் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று பெற்றோருக்குப் பரிந்து வந்தாள் பெரியவள்.

"அது தெரியாதுதான். ஆனால் ஒரு இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுத்திருக்கலாம் இல்லையா? உருப்படியாக ஒரு படிப்புக்காவது வழி கிடைத்திருக்குமே..." என்று தங்கை வாதாடினாள்.

பதில் சொல்ல வகையற்று அந்தப் பேச்சை விடுத்து, "அது எப்படியோ போகட்டும். சித்ராம்மா... இப்போது இந்தப் பைத்தியக்கார ஐடியாவை விட்டுடம்மா. எண்ணிப்பார். யாராவது சுவரை விற்றுச் சித்திரம் வாங்குவார்களா?" என்றாள் கெஞ்சும் குரலில்.

வெறித்துப் பார்த்துவிட்டு, "பாட்டிக் கிழவி மாதிரிப் பேசாதே அக்கா. நான் என்ன தொடர்ந்தா மானம்கெட்ட வாழ்வு வாழப் போகிறேன்? நல்லபடியாகப் பிழைப்பதற்கு ஒரு வாய்ப்புக்காகத் தானே இதெல்லாம்..." என்றாள் சித்ரா.

"புரியாமல் பேசுகிறாயம்மா? அப்புறம் நல்லபடியாகப் பிழைப்பது என்பது எப்படி முடியும்?" என்று அங்கலாய்த்தாள் சுமித்ரா.

"இதுக்குத்தான் நாலு சினிமா பார்க்க வேண்டும், நாலு கதை படிக்க வேண்டும் என்கிறது. ஒரு தவறில் யாருடைய வாழ்வும் இந்தக் காலத்தில் அழிந்து விடுவது இல்லை தெரியுமா? அத்தோடு இந்த 'அம்மா' போட்டுப் பேசுவதையும் விட்டுத் தொலை. உனக்கும் எனக்கும் ஒரே ஓர் ஆண்டுதானே வித்தியாசம். நீயும் கொஞ்சம் சின்னவளாகவே இருக்கப் பாரேன்."

"பரசு சினிமா கதாநாயகன் இல்லையே, சித்ரா!" என்றாள் சுமித்ரா விடாமல்.

"இன்னொரு தடவை பரசு பேரை எடுத்தால் எனக்குப் பொல்லாத கோபம் வரும் தெரியுமா? நீ சொல்லுகிற இந்தப் பரசுவுக்கு மட்டும் என்னிடம் உண்மையான பிரியம் இருந்தால் எந்தக் கோரமாய் இருந்தாலும் என் சித்திரத்தையே தன் வீட்டுச் சுவரில் மாட்டிக் கொள்வார். அந்த அளவு நாகரீகம் இல்லையென்றால் எனக்கும் அவரைப் பற்றி அக்கறை இல்லை."

கொட்டிக் கொண்டு இருந்தவளின் குரல், பக்கத்து அறையில் அரவம் கேட்டதும் சட்டென நின்றது.

அவசரமாக ஓடிச்சென்று பார்த்தாள்.

வயதுக்குச் சற்று முதுமையாகவும் சதைப் பற்று உடையவராகவும் தோன்றிய ஒரு நாற்பது வயதுப் பெண்மணி புரண்டு படுத்துக் கொண்டு இருந்தாள்.

அவள் மீண்டும் அசைவற்று ஆழ்ந்து உறங்கும் வரையும் பார்த்துவிட்டு, கதவை மெல்லச் சாத்திவிட்டுப் பூனைபோல் மெல்லத் திரும்பி வந்தாள் சித்ரா.



"பேசாமல் படுத்துத் தூங்கு அக்கா. சித்தி விழித்துக் கொண்டு விட்டால், பொழுது விடிந்த பிறகும் புலம்பலுக்கு முடிவு இராது!" என்று தன் போர்வையை எடுத்து விரிக்கலானாள்.

"ஆனால் சித்தி..."

போர்வையைப் போர்த்திவிட்டு இரு கைகளையும் உயர்த்தினாள் தங்கை.

"ப்ளீஸ் அக்கா! என்னை நிம்மதியாக இருக்கவிடேன். யோசி. நான் மட்டுமென்ன முட்டாளா? நானும் ஒரு வாரம் நன்றாக யோசித்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். இனி நீ என்ன சொன்னாலும்... ஏன், உயிரையே விட்டுவிடுவதாகச் சொன்னாலும்கூட நானும் சேர்ந்து வந்துவிடுகிறேன் என்பேன். அவ்வளவு தான். மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்' என்று மீண்டும் வள்ளுவரைத் துணைக்கு இழுத்து வந்துவிடாதே. இந்தக் காலத்துக்குக் கொஞ்சமும் ஒத்து வராத விஷயம். மேலே நீ என்ன சொன்னாலும் கொஞ்சமும் பயன் இல்லை. விடுபடுவதற்கு என்று கிடைத்திருக்கும் இந்த ஒரே ஒரு மார்க்கத்தை நான் நழுவ விடுவதாக இல்லை. அதனால் அனாவசியமாய் அலட்டிக் கொள்ளாமல் பேசாமல் படுத்துத் தூங்கு. இன்று தூங்கவில்லை என்று நாளை லீவு எடுக்க முடியுமா? வேலையில் குளறுபடி செய்ய முடியுமா? உன்னால் தடுக்கமுடியாத ஒன்றை எண்ணி ஒருநாள் தூக்கத்தை விரயம் செய்வானேன்?

"அத்தோடு உனக்குத் தூக்கம் வருகிறதோ இல்லையோ, எனக்குத் தூக்கம் வந்துவிட்டது. ஆளை விடு!" என்று படுத்துக் கண்களை இறுக மூடிக் கொண்டாள் சித்ரா.

வேறு வழியின்றிச் சுமித்ராவும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தாள்.

தூக்கம் வந்து விட்டதாகக் கூறிய போதும், அசையாமல் கிடந்த போதும், தங்கை உடனே தூங்கி விடவில்லை என்பது சுமித்ராவுக்குப் புரிந்தது.

எப்படித் தூங்க முடியும்?

ஒழுக்கத்தை அவ்வளவு அலட்சியமாக எண்ணும் விதத்தில் அவள் வளரவில்லையே.

ஆனால் வெகு நேரம் கழித்து, தங்கை மெய்யாகவே உறங்கிய பிறகும், சுமித்ராவால் தூங்க முடியவில்லை.

உறங்காதது மட்டுமின்றித் தங்கை சொன்ன சேதியின் பயங்கரத்தையும் அப்போதுதான் முழுமையாக உணர்ந்தாள்.

சூழ்ந்திருந்த இருள் மேலும் நெஞ்சப் படபடப்பைக் கூட்ட அதற்கு மேல் தாங்க மாட்டாமல் எழுந்து விட்டாள்.

இதை யெல்லாம் தங்கை உணர்ந்திருப்பாளா?

மெல்லச் சென்று விளக்கைப் போட்டு விட்டுத் தங்கை அருகில் சென்று அமர்ந்தாள்.

ஆடிக் களைத்த குழந்தை அயர்ந்து உறங்குவது போல் ஆழ்ந்து தூங்கி விட்டிருந்தாள் அவள்.

முகத்திலும் அதே கள்ளமற்ற பிள்ளைத்தனம்தான் தெரிந்தது. இவளைப் போய்.. எப்படி?

இந்த மாதிரி ஈனத்துக்கு இவளை அழைக்க அந்த மனிதனால் எப்படி முடிந்தது?



இந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தால் தப்பு எண்ணங்கள் மறந்து விடாதா?

மறக்கவில்லையே!

அரக்கன்!

இந்தப் பச்சை மண்ணைப் பாழாக்க நினைப்பவன் நிச்சயம் ஓர் அரக்கனாகத்தான் இருப்பான்.

கோரைப் பல்லும், சிங்க முகமும், பாழி வயிறுமாக ஒரு இராட்சச உருவம் மனதில் தோன்றி மிரட்டியது.

மெய்யாகவே அவன் இப்படித்தான் இருக்க வேண்டும்.

பணத்தை இறைத்துத்தான் ஒரு பெண்ணை அடைந்தாக வேண்டும் என்ற நிலையில் இருப்பவன், பார்வைக்கு வேறு எப்படி இருப்பான்!

பணம் தேவை என்று வலியவே சென்றாலும், தங்கை இன்னமும் அறியாதவள் என்பதில் சுமித்ராவுக்கு ஐயம் இல்லை.

அறிவு வருகையில் காலம் கடந்து அவனிடமிருந்து தப்பும் வழியற்றுச் சிக்கிக் கொண்டால்?

நினைக்கையில் உடல் நடுங்கிய போதும் இதைத் தடுத்தே தீரவேண்டும் என்று உள்ளத்தில் உறுதி கொண்டாள் சுமித்ரா.

## 2

எப்படித் தடுப்பது?

சித்ராவிடம் இதை மேலும் பேசினால் பயன் இருக்குமென்று தோன்றவில்லை.

ஒரு மாதிரி பிடிவாதக்காரி அவள்.

தான் நினைத்ததையே செய்து பழகிவிட்ட பிள்ளைப் பிடிவாதம்.

கடைசிக் குழந்தை என்பதால் வந்த செல்லம் வேறு.

வெகு நாட்களுக்குப் பின் மீண்டும் பெற்றோர் நினைவு பலமாகத் தாக்கியது.

ஊசிப் போகிற அளவுக்கு இல்லை என்றாலும் தாராளமாகச் செலவு செய்யும் தகப்பனார்.

'இந்த சினிமா நன்றாக இருக்கிறதாம்பா!' என்று சொன்னால் போதும்.

மாலையே சினிமா. இரவு உணவுக்கு ஓட்டல் என்று ஆனந்தமாக அன்றைய பொழுது முடிந்து போகும்.

இன்றைய நிலையை அன்று யாரேனும் ஆருடம் சொல்லியிருந்தால் குடும்பமே எள்ளி நகையாடியிருக்கும்.



'இரண்டு பெண்கள், ஏதேனும் சேர்க்க வேண்டாமா?' என்று எப்போதேனும் அம்மா சொன்னால் ராமநாதன் ஓர் அவுட்டுச் சிரிப்பு சிரிப்பார்.

"பைத்தியம்! என் பெண்களின் அழகுக்கு க்யூவில் நின்று கொத்திக் கொண்டு போவார்களடி. ஏதேதோ குரங்கு மூஞ்சிகளைப் பெற்றவள் பேச வேண்டிய பேச்சை நீ பேசுகிறாயே!" என்று கேலி செய்வார்.

"கவலைப்படாதேடி. இப்போது ஒரு சைட் பிசினஸ்சில் ஈடுபட்டிருக்கிறேன். அது தங்கமாய்க் கொட்டப் போகிறது, பார்!" என்பார்.

தங்கம் கொட்டாதது மட்டுமில்லை.

உறவினர் வீட்டு வைபவம் ஒன்றுக்குச் சென்று திரும்பியபோது அவர்கள் பயணம் செய்த ஆட்டோ, பஸ்சில் மோதிச், சிந்திச் சிதறியது. இரத்தத்தோடு அவர்களுடைய உயிர்களும்..

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போல இரு பெண்களும் திகைத்துத் திணறிப் போயினர்.

சைட் பிசினசை முழு நேர பிசினசாக்க எண்ணி வேலையை அவராகவே விட்டிருந்தார்.

அதில் வந்த பணம், பிசினசில் ஆழ்ந்து போனதோடு, கடனும் நிற்பதாகப் பிசினஸ் கூட்டாளிகள் கூறினர்.

நம்ப மாட்டாமல் திகைத்த போது, அந்த மூன்று கூட்டாளிகளில் மிகவும் நல்லவராகத் தோன்றிய ஒருவர் தனியே வந்து சொன்னார், "இன்னும் கொஞ்ச காலம் மூச்சுப் பிடித்து

நின்றால் லாபம் வரத்தான் செய்யும். அம்மா. ஆனால் இன்றைய நிலவரப்படி நஷ்டக் கணக்குதான். சந்தேகம் இருந்தால் - சந்தேகம் இல்லா விட்டாலும் கூட - ஒரு வக்கீலைக் கொண்டு சோதித்துக் கொள். பின்னர் ஒரு காலத்தில் ஏமாந்து போனோமே என்ற எண்ணம் இருக்கக் கூடாது பார்." என்றார்.

தங்கையின் எதிர் காலத்தை எண்ணிச் சுமித்ரா ஏற்பாடு செய்த வக்கீலும், ஐந்து நூறுகளை வாங்கிக் கொண்டு அதையேதான் சொன்னார்.

"எல்லாத் தொழிலும் அப்படித்தான். எடுத்த எடுப்பில் லாபம் வருவது இல்லைதான். அந்தக் காலத்தை நின்று தாங்கிக் கொண்டால் உயரலாம்தான். ஓர் ஆண்டு முன்னே இந்தத் தொழிலைத் தொடங்கியிருந்தால்... அல்லது ஓர் ஆண்டு சென்று உன் தந்தை இறந்திருந்தால் உன் தந்தையின் கணக்கில் லாபம் கண்டிருக்கும். நல்ல வேளையாகக் கடனை ஏற்கும்படி அவர்கள் உங்களைக் கேட்கவில்லையே!" என்று கூறிவிட்டுப் போனார்.

இதைக் கூட நல்ல வேளை என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா என்ற உள்ளூர வேதனைப்பட்டாலும் வெளியே காட்டாமல் மறைத்தாள் அவள்.

ஆனால் அதுவும் ஒரு வகையில் நன்மையே என்பதைப் பின்னர் அவளும் உணர வேண்டியதாய் ஆயிற்று.

கடன், வக்கீல் என்று வேசாகத் தெரியவும், வந்திருந்த உறவுக் கூட்டமெல்லாம் கல் விழுந்த காக்கைக் கூட்டமாய்க் கலைந்து போயிற்று.



ஒரே ஒரு ஆண்டுதான் வித்தியாசம் என்றாலும், கடைசிக் குழந்தையாய்ச் செல்லம் கொண்டாடிப் பழகிவிட்டிருந்த தங்கை அன்னையைத் தேடி அக்காவின் மடியில் படுத்து விசும்புவாள்.

விழித்திருந்த வேளையெல்லாம் அவளைத் தேற்றுவதும் ஆற்றுவதுமாகக் கழித்துவிட்டு அவள் உறங்கிய பிறகு உட்கார்ந்து யோசித்தாள் சுமித்ரா.

நீர ஆலோசித்த போதுதான் வக்கில் சொன்ன நல்ல வேளையும் புரிந்தது.

கடனைக் கட்டும்படி அவர்கள் கேட்டிருந்தால் அம்மாவின் நகைகளும் போயிருக்குமே.

இப்போது அந்த நகைகள், தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் விற்றுச் சேர்த்தாள்.

கணிசமாக ஒரு தொகை சேர்ந்தது.

பாங்கில் டெபாசிட் செய்தாள்.

ஒரு சிறிய வீட்டைப் பார்த்துக் குடிபோனார்கள்.

சிணுங்கிய தங்கைக்குப் பொறுமையுடன் விளக்கினாள்.

சித்ராவும் எப்போதும் சிறுமியாகவே இருக்க முடியாது அல்லவா? அத்தோடு அவளும் முட்டாள் அல்லவே! எனவே புரிந்து கொண்டாள்.

ஆனால் அவ்வப்போது ஆசைகள் தலை தூக்கும் போது கொஞ்சம் படபடப்பாள், அவ்வளவுதான்!

மற்றப்படி இந்த வாழ்வும் எப்படியோ பழகி விடலாயிற்று.

இந்தத் தலைகீழ் மாற்றமெல்லாம் நிகழ்ந்தபோது சுமித்ராவுக்கு வயது பதினெட்டு.

பி. ஏ. இரண்டாம் ஆண்டு முடித்திருந்தாள், கணிதம்.

சித்ரா எக்கொனாமிக்ஸ் முதலாம் ஆண்டு முடித்திருந்தாள்.

மூன்றாம் ஆண்டுப் படிப்பை முடித்துப், பட்டம் பெற்று, நல்ல வேலைக்காகத் தேடி அலைந்து கடைசியாக ஒன்றுமில்லாதற்கு அரை ரொட்டி மேல் என்ற முடிவுக்கு வந்து, ஏதோ ஒரு வேலையைச் சுமித்ரா ஏற்று, ஓய்வு வேளையில் டைப்பிங்கும் படித்து முடித்தபோது, பாங்க் இருப்பு வெகுவாகக் குறைந்து போயிருந்தது.

சித்ராவின் படிப்பு முடிகையில் இருப்பு தீர்ந்ததோடு கொஞ்சம் கடன் படுமாறும் நேர்ந்து விட்டது.

அந்த அளவிற்குச் சென்றிராதுதான்.

ஆனால் இருவரும் பெண்களாய்ப் பிறந்த பாவம், வேறு ஒரு சுமையையும் ஏற்கும்படி ஆயிற்று.

உதவிக்கு என்று பார்க்கையில் உறவினர் அற்றுப் போனது உண்மைதான்.

ஆனால் தனித்திருந்த பெண்கள் என்கையில் சில்லுண்டித்தனம் செய்வதற்குச் சிலர் என்ன, பலருக்கும் ஆசையாகவே இருந்தது.

"ஒரு வேலையாப் பட்டணத்துக்கு வந்தேனா, நேரமாகி விட்டது. ராத்திரிக்கு இங்கேயே தங்கிப்போகலாம்னு ஐடியா!" என்று வந்து நின்றனர்.

சுமித்ராவுக்குப் புரிந்து கொள்ள முடிந்தது.



உள்ளூர ஆத்திரமும் அழுகையும் பொங்கிக் கொண்டு வந்தாலும், காட்டிக் கொள்ளாமல், 'என் தோழியின் அம்மா வருகிறார்கள்,' என்றும், 'இடம் இராது,' என்றும் கூப்பிடும் குரலே கேளாதது போலப் பாவனை செய்தும், சில நாட்கள் சமாளித்துப் பார்த்தாள்.

பிறகு, ஊரில் ஆதரவு அற்று இருந்த ஒன்றுவிட்ட சித்தி ஒருத்தியைத் துணைக்கு இருக்குமாறு அழைத்து வந்தாள்.

முதலில் 'மூன்று வேளை உணவு' என்றவுடன் விருப்பத்துடன் வந்தாள் தங்கம்மா.

பிறகு...

சும்மாவே இன்னொருவர் சாப்பாடு, உடைச் செலவு, அது போக வீட்டுச் செலவுப் பணத்திலும் சித்தி சுரண்டுகிறாள் என்று சுமித்ராவுக்கு நன்றாகவே தெரிந்தது.

மற்றப்படி ஊரெல்லாம் தக்காளி கிலோ இரண்டு ரூபாயாக இருக்கையில் இவளுக்கு மட்டும் நாலு ரூபாய் ஆக முடியுமா?

'வரும்போது நானே வாங்கி வருகிறேன்,' என்றால், 'என்னை நம்பவில்லையா?' என்று ஒப்பாரி வைத்தாள்.

பெண்களின் வேதனையைப் புரிந்து கொண்டு, "அவ்வளவு சந்தேகம் என்றால் என்னை விட்டுவிடு, நான் ஊருக்கே போகிறேன்," என்று மிரட்டினாள்.

சுமித்ரா வாயை மூடிக் கொண்டாள்.

இவளை விட்டுவிட்டால் இன்னொரு துணைக்கு எங்கே போவது?

அத்தோடு இன்னமும் சில மாதங்களில் சித்ராவின் படிப்பு முடிந்து அவளுக்கும் வேலை கிடைத்து விட்டால் பணப்புழக்கம் தாராளமாகிவிடும் என்ற நம்பிக்கை வேறு.

யாரோ ஒருவருக்குச் சம்பளம் கொடுப்பது போல எண்ணிக் கொண்டாள்.

தனக்கு வேலை தேடி அலைந்தபோது பட்ட அனுபவத்தின் காரணமாகச் சித்ராவை முதலிலேயே டைப்பிங், சுருக்கெழுத்து எல்லாம் பயில வைத்தாள்.

ஆனால் அவளுடைய வருமானம் வரத் தொடங்கிய போதும், முதலில் சுமித்ரா நினைத்தது போலப் பிரமாதமாக ஒன்றும் சேர்த்துவிட முடியவில்லைதான்.

ஆனாலும் சிறு துளி பெரு வெள்ளம் என்று சுமித்ரா பிடிவாதத்துடன் சேர்க்கத் தொடங்கினாள்.

இன்னும் கொஞ்சம் பெரிய வேலைக்கான தேடலையும் விடவில்லை.

இருவருக்குமே நல்ல வேலை கிடைத்தால்..

வருமானம் கூடினால்..

சுமித்ரா நம்பிக்கையுடனேயே இருந்தாள்.

ஆனால் சின்னவள் சோர்ந்து விட்டாள்.

படித்து முடித்து இந்த இரண்டு ஆண்டுக் கால அனுபவத்தில், 'அக்கா வெறும் கனவைப் பற்றிக் கொண்டு தொங்குகிறாள். இதில் எதுவும் நடக்கப் போவது இல்லை' என்ற முடிவுக்கு வந்தாள்.



ஏழைக்கேற்ற எள் உருண்டையாக எட்டிப் பார்த்த காதல் இன்னமும் நிராசையைக் கூட்டி மனதை ஒடிய வைத்தது.

ஆனால் என்னதான் ஒடிந்தாலும் இந்த முடிவுக்கா வருவது?

இதை எப்படித் தடுப்பது?

இன்று தங்கையின் மனம் இருக்கும் நிலையில் சுமித்ரா என்னதான் கதறினாலும் அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளப் போவது இல்லை.

பரசுராமனிடம் இதைக் கூறுவதே தவறு.

கூறினாலும், அவன் வந்து புத்தி சொன்னாலும், சித்ரா ஏற்கப் போவது இல்லை.

பின்னே இந்தப் படு நாசத்தை எப்படித் தடுப்பது?

தீவிரமான யோசனையில் இருந்தவள் பக்கத்து அறையில் அசைவைக் கவனிக்க மறந்து விட்டாள்.

"அப்படி என்ன உலகத்தில் இல்லாத ரதி உன் தங்கச்சி! நட்ட நடு ராத்திரியிலே விளக்கைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து அழகு பார்க்கிறே!" என்ற சித்தியின் அதட்டலில் முதலில் சுமித்ராவுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது.

தங்கை விழித்து விடுவாளோ என்று, "மெல்லப் பேசுங்கள், சித்தி. சித்ரா விழித்து விடுவாள்," என்று சொல்லி விட்டு வசமாக மாட்டிக் கொண்டாள்.

"எம்மா அவள் மட்டும் தூக்கத்தில் விழித்துக் கொள்ளுவாளா? நாளெல்லாம் மரமா? மட்டையா? இந்த நேரத்தில் விளக்கைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து

இருக்கிறாயே, என் தூக்கம் கலையும் என்கிற பயம் இருந்தால் செய்வாயா? தண்ணீர் தெளித்து எழுப்புகிறது போலக் கண்ணைக் குத்துகிற மாதிரி விளக்கைப் போட்டு எழுப்பி விட்டாயே, இனி எனக்குத் தூக்கம் வருமா? பொழுதெல்லாம் மாடாக உழைக்கிறேனே, ராத்திரியாவது நிம்மதியாகத் தூங்க விடப்படாதா? கடவுளே! கிராமத்திலே நிம்மதியா உண்டு உறங்கி இருந்தேனே, இங்கே இழுத்துக் கொண்டு வந்து இந்தச் சித்திரவதை செய்கிறாயே...

"பட்டணத்திலே தனியாய் இருக்கப் பயமா இருக்கிறது என்று அழுதாயே என்று கூட வந்தேன். பாவம், அல்ப ஆயுளிலே போன அக்கா பிள்ளைகள் என்றுதானே வந்தேன்!

"இங்கேயும் சும்மாவா இருக்கிறேன்? சாமான் வாங்குகிறது என்ன, சமையல் செய்கிறது என்ன, என்று எவ்வளவு வேலை செய்கிறேன்!

"அலுத்துக் களைத்துப் போனவளுக்கு இராத் தூக்கம் இல்லாமே அடிக்கிறாயே...

"இதைச் சொல்லப் போனால், மெல்லப் பேசு என்று மிரட்டுகிறாயே! போதுமடியம்மா, போதும். இரக்கம் என்று இங்கு வந்து நான் படுகிற பாடு போதும். நாளைக்கே என்னைக் கிராமத்துக்கு அனுப்பிவிடு...

"அங்கு வீடெல்லாம் பார்ப்பார் இல்லாமல் அழிந்து கிடக்கும். அதைச் சரி பண்ண மட்டும் ஓர் ஆயிரம் ஐந்நூறு தந்து அனுப்பு, போதும். மற்றப்படி இந்த நாலு வருடம் உங்களுக்கு உழைத்துப் போட்டதைத் தர்மக் கணக்காக வைத்துக் கொள்ளுகிறேன்..."



சித்தியின் பேச்சு முடிவதாக இல்லை.

ஆனால் கிராமத்தில் 'உண்டு உறங்கி' என்றதுமே சுமித்ராவுக்குக் குமுறத் தொடங்கிவிட்டது.

பல நாள் பட்டினியும் கிழிசல் சேலையுமாக இருந்தது மெய்யாகவுமா சித்திக்கு மறந்துவிடும்?

வேலை, வேலை என்கிறாளே - காலையில் அரக்கப் பரக்கக் கிளம்பும்போதும் கிட்டத்தட்ட வீட்டு வேலைகளை முடித்து விட்டுத்தானே சித்ராவும் அவளும் வெளியே செல்கிறார்கள்?

அதோடு சாமான் வாங்க என்று பிடிவாதமாகச் சித்தி செல்லும் காரணம் தெரியாதா?

இதையெல்லாம் சித்தி மறந்தாலும், மறுத்தாலும், ஊரில், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களைக் கொண்டு நிரூபிக்க முடியும்தான்.

ஆனால், இந்தச் சாட்சிக்காரர்கள் காலில் விழுந்து இதை நிரூபித்து நிலை நிறுத்தி ஆவது என்ன?

அதைவிட...

"மன்னித்துக் கொள்ளுங்கள், சித்தி. இதோ விளக்கை அணைத்து விடுகிறேன். காலையில் வேண்டுமானால் சற்று நேரம் அதிகம் தூங்குங்களேன். நாங்கள் வெளியே கிளப்பும்போது எழுந்தால் போதும்." என்று சண்டைக்காரன் காலிலேயே விழுந்து சமாதானம் செய்தாள்.

சண்டைக்காரன் காலில் விழுந்து...

சிந்திக்குப் பணிந்து விளக்கை அணைத்துவிட்டுப் படுத்த போது வார்த்தைகள் மனதில் நெருடின.

சித்ராவிடம் என்ன கெஞ்சினாலும் கோபித்தாலும் பயனில்லை.

அதைவிட அந்தச் சண்டைக்காரனிடம் - அதாவது அந்த அரக்கனிடம் - அந்தக் கொடியவனிடம் - சித்ராவின் எம் டியிடம் பேசிப் பார்த்தால் என்ன?

பெண் என்றால் என்னென்னவோ இரங்குமாமே!

இவனும் என்னதான் வில்லன் என்றாலும் ஒரு பெண் வயிற்றில் பிறந்தவன்தானே!

இரங்க மாட்டானா?

## 3

சுமித்ரா முடிவுக்கு வந்து விட்டாள்.

சித்ராவின் அலுவலக மானேஜிங் டைரக்டரிடம் பேசிப் பார்த்தே விடுவது.

பயன் இருக்குமோ என்று சந்தேகம் தோன்றியது.

சொந்தத் தங்கையிடமே பேசி ஜயிக்க முடியவில்லை.

தலையை உலுக்கிப் பற்ற வந்த நிராசையைப் பிடிவாதமாக ஒதுக்கினாள்.



முதலில் நல்லதனமாகப் பேசிப் பார்ப்பது.

கேளாவிட்டால் ஆள் வைத்து அடிப்பேன், உதைப்பேன் என்பது.

அதற்கும் ஒதுங்காவிட்டால், 'ஒரு பெண்ணைக் கெடுக்கப் பார்க்கிறாய்!' என்று போலீசில் புகார் செய்வேன்!' என்று அச்சுறுத்துவது...

இந்த மேல் மட்ட ஆட்கள் எல்லாம் போலீஸ் கீஸ் என்றால் கொஞ்சம் ஒதுங்கத்தானே பார்ப்பார்கள்.

அதற்கும் மசியாவிட்டால்... என்று மீண்டும் மனம் கலங்கியது.

'தளராதே, மனமே! தளராதே!' என்று திரும்பத் திரும்ப, தனக்கே தைரியம் சொல்லிக் கொண்டாள்.

நல்லதற்காகத்தான் வழி தேடுகிறாள் - கிடைக்காமல் போகாது. கொஞ்சம் தீவிரமாய் யோசிக்க வேண்டும். அவ்வளவு தான்.

அவ்வளவுதான்.

அவ்..வ... அல்லது, 'உன் மனைவியிடம் விஷயத்தைச் சொல்லிக் குடும்பத்தில் தகராறு உண்டாக்குவேன்!' என்று மிரட்டினால்?

ஆகா, அதுதான் சரி.

சுமித்ராவுக்குத் தைரியம் வந்துவிட்டது.

எல்லாப் பணக்காரப் பசங்களுமே தங்கள் லீலைகள் வீடுவரை எட்டிவிடக் கூடாது என்பதில் கவனமாய்த்தான் இருப்பார்கள்.

அதிலும் மனைவி மக்கள் அறியும்படி ஆகிவிடும் என்றால் நிச்சயம் அரண்டு போவார்கள்.

இவன் என்ன விதி விலக்கா?

ஆனால் தன் எண்ணம் நிறைவேறாத ஆத்திரத்தில் சித்ராவை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்துவிட்டால்?

செய்தாலும் பரவாயில்லை.

ஏதோ வேலை போனால் இன்னொரு வேலை தேடிக் கொள்ளலாம்.

மானம் அப்படியா?

வேலை கிடைக்காமல் ஒன்றிரண்டு மாதங்கள் கஷ்டப்பட்டாலும் கூடப்பட்டுக் கொள்ளலாம்.

இதைவிடக் கஷ்டமா என்று ஒரு கனம் மனம் சோர்ந்தபோதும் பெரிய பிரச்சினைக்கு விடிவு கண்டு விட்ட நிம்மதியில் சுமித்ராவும் ஒருவாறு தூங்கிப் போனாள்.

ஒன்றில்லா விட்டால் ஒன்று என்று காலையில் சித்தி வேலைக்கு ஒதுங்கிவிடுவது வழக்கமே என்பதால், சகோதரிகள் இருவரும் வழக்கம்போல காலை வேலைகளை மடமடவென்று முடித்து அவரவர் அலுவலகத்துக்குக் கிளம்பலாயினர்.

அவ்வப்போது தங்கையின் பார்வை யோசனையோடு தன்மீது படுவதைச் சுமித்ரா கவனிக்கவே செய்தாள்.

முன்தினம் தான் போட்டு உடைத்த அணுகுண்டை அடுத்த வாக்குவாதம், புத்திமதி என்று எதுவும் தொடரவில்லை என்றால் அதிசயம்தானே.



சித்தி விழித்திருப்பதால் இந்த அமைதி என்றும் எண்ணிவிட முடியாது.

சித்தி புரிந்து கொள்ள முடியாதபடி ஆங்கிலத்தில் பேசிக் கொள்ளலாமே.

தன் மவுனம் புரியாமல் சித்ரா குழம்புவது சுமித்ராவுக்குப் புரிந்தது.

நன்றாகக் குழம்பட்டும்; குழம்பிக் கொஞ்சமேனும் கஷ்டப் படட்டும் என்று ஒரு வித ஆத்திரத்துடன் ஒன்றுமே நடவாததுபோலத் தன் போக்கில் வேலைகளைத் தொடர்ந்தாள்.

எல்லா வேலைகளும் முடித்து, சித்தியிடம் சொல்லிக் கொண்டு, ஆளுக்கு ஒரு திக்கில் கிளம்புகையில், “அக்கா! பரசுவிடம் ஏதேனும் சொல்லி என்னைத் தடுத்து விடலாம் என்று நினைத்திருந்தால் அந்த எண்ணத்தை விட்டுவிடு. பரசு என்ன, அந்தக் கடவுளே வந்து கெஞ்சினாலும்கூட என் முடிவை நான் மாற்றிக் கொள்ளப் போவது இல்லை!” என்று உறுதியான குரலில் சித்ரா கூறினாள்.

அப்போதும் சுமித்ரா ஒன்றும் சொல்லவில்லை. தங்கையை நேர்பார்வையாக வெறித்துவிட்டுத் தன் திசையில் திரும்பி நடக்கலானாள்.

அன்று முழுவதும் சுமித்ராவுக்குப் பலத்த யோசனை.

அவனை - அந்த ராட்சசனை எங்கே எப்போது சந்தித்துப் பேசுவது?

சித்ராவின் அலுவலகத்துக்குப் போகலாம்.

ஆனால் சித்ரா அறியாமல் அவனைச் சந்தித்துப் பேசுவது மேல் அல்லவா?

அவன் வீட்டைத் தேடிப் பிடித்துப் போகலாம் என்றால் அதுவும் சரியாகப் படவில்லை.

கடைசி ஆயுதமாகத்தான் அவன் மனைவியைப் பயன்படுத்த வேண்டும் என்று தோன்றியது.

மற்றப்படி அவன் தானாக - மற்ற வழிகளில் வழிக்கு வந்து விட்டால் அனாவசியமாக அவன் மனைவியைப் புண்படுத்துவானேன்? பாவம். அந்தப் பெண்மணி! இந்த ராட்சசனின் மனைவியாய் இருக்கும் துர்ப்பாக்கியம் போதாதா!

அலுவலகமும் இல்லாமல், வீடும் இல்லாமல் வேறே அவன் எங்கெங்கே செல்லக்கூடும் என்று பின்தொடர்ந்து கண்டுபிடித்துப் பேசுவது எல்லாம் நடவாத காரியம்.

முக்கியமாக அதற்கெல்லாம் செலவு செய்யும் சக்தி இல்லை.

கடைசியில் அவனுடைய அலுவலகத்தில் அவனைச் சந்திப்பதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தாள் சுமித்ரா.

எப்படியும் தன்னைத் தடைசெய்ய அக்கா ஏதேனும் செய்வாள் என்பது சித்ராவுக்குத் தெரியாமல் இராது.

காலையில்கூடக் கேட்கவில்லையா?

ஆனால் அவனிடம் இதுபற்றி சும்மாவே அருவருப்பான இந்த விஷயம் குறித்து இவள் வாதாடுகையில் அவன் சித்ராவையும் வரவழைத்துவிட்டால் நிரம்பவும் சங்கடமாகிப்



போகும். சினம் கொண்டு விட்டால் சித்ராவின் பேச்சு எங்கெங்கே போகும் என்று சொல்ல முடியாது.

பல விதமான பேச்சுகளைக் கற்பனை செய்து மனம் கூசியபோதும் செய்துதான் ஆக வேண்டும் என்ற உறுதியில் சுமித்ரா தளரவில்லை.

சாக்கடை என்றால் அசிங்கம்தான்; அருவருப்புத்தான்! எவ்வளவோ விலகித்தான் போகிறோம்.

ஆனால் பிள்ளை சாக்கடையில் விழுந்து விட்டால் விட்டுவிட முடியுமா!

இப்போதும் எத்தகைய அருவருப்பான சூழ்நிலை என்றாலும், அதைச் சகித்துத் தங்கையைக் காக்கும் பிடிவாதத்துடன் இருந்தாள் தமக்கை.

தனது அலுவலகத்தில் ஓர் அரை மணி நேரம் மட்டும் விடுப்பு எடுத்துக் கொண்டு, சித்ராவின் அலுவலகம் இருந்த பகுதியில் ஐந்து மணிக்குத் தான் இருக்குமாறு பார்த்துக் கொண்டாள். பொதுவாகச் சித்ரா கடிகாரம் பார்த்து வேலை செய்கிறவள்.

"மணி ஐந்தடிக்கையில் டைப் ரைட்டரை மூடி எழுந்து விடுவேன்!" என்பாள்.

உடனே கிளம்பி விடுவது வழக்கம்.

"இப்போது எப்படியோ?" என்று வேதனைக் குரல் கொடுத்த மனதை அடக்கியபடி சித்ராவின் அலுவலகத்துக்கு எதிர்ப்புறமாய் இருந்த ஓட்டலில் சற்று மறைவாய் அமர்ந்து கவனித்தாள்.

சித்ரா தன் வேக நடையுடன் வெளிவருவதும் செல்வதும் திருப்பத்தில் மறைவதும் தெரிந்தது.

நேரத்தைக் கழிக்க என்று வரவழைத்த காபி இப்போது தொண்டைக்குள் இறங்க மறுத்தது.

அப்படியே வைத்துவிட்டுப் பணத்தைச் செலுத்தி விட்டுக் கிளம்பினாள்.

சித்ராவின் அலுவலகப் படியேறுகையில் இன்னும் ஒரு புதுக் குழப்பம்.

இந்த மாதிரிக் கொலைகார ராட்சசன் எல்லாம் மாலையில், தன்னிடம் பணிபுரிகிறவர்கள் எல்லாம் போன பிறகுகூட இருந்து தன் வேலையைப் பார்ப்பார்களா!

பார்ப்பார்கள் என்று பிடிவாதமாய்ச் சொல்லிக் கொண்டாள்.

உள்ளத்தைக் காப்பது ஒருபுறம் இருக்க, இதுபோல் இரண்டாயிரம், மூவாயிரம் என்று அள்ளி வீசவும் வேண்டும் என்றால் ஏதோ உழைத்துதானே ஆக வேண்டும்?

காலியாகிவிட்டிருந்த ஹாலில் ஆஃபீஸ் பாய் போலத் தோன்றிய ஒருவன் சின்ன மேசைகளையும் நாற்காலிகளையும் ஒழுங்குபடுத்திப் போட்டுக் கொண்டிருந்தான்.

தன் தயக்கத்தை வெளிக்காட்டாமல் அமர்த்தலாகவே உள்ளே சென்றாள் சுமித்ரா.

அவளை யோசனையோடு பார்த்துவிட்டு, "அல்லாரும் ஊட்டுக்குப் போயிட்டாங்களேம்மா. இனிமே நாளைக்குப் பத்து மணிக்குத்தான் வருவாங்க. நீங்க போயிட்டு நாளைக்கு வாங்க."



என்றவன் ஒரு நாற்காலி அருகே சிதறிக் கிடந்த சிகரெட் துண்டுகளைப் பொறுக்கலானான்.

வேலை செய்பவர்களில் யாரையோ அவள் பார்க்க வந்திருப்பதாக அவன் எண்ணுவது புரிந்தது.

லேசான முறுவல் செய்து, "நான் உங்கள் முதலாளியைப் பார்க்க வந்தேன்," என்றவள் பார்வையில் ஹாலில் ஒரு புறமாய் 'மானேஜிங் டைரக்டர்' என்ற வெண்ணிற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கதவு பட்டது.

மேல் சுவர் வரையுமாய் அடைத்த தேக்குமர ப்ளைவுட் தடுப்பு.

அதே ப்ளைவுட் கதவின் மேல் வெண்ணிற எழுத்துக்கள் கம்பீரமாயும் அழகாயும் தோன்றின.

ஆனால் ராவணனுடைய இலங்கைகூட வெகு அழகாக இருந்ததாகத்தானே கம்பர் சொல்லுகிறார்!

தானும் ஒரு பார்வையை அந்தக் கதவின் புறம் செலுத்திவிட்டு, "அய்யா இப்ப யாரையும் பார்க்க மாட்டாங்க ளேம்மா!" என்று மறுப்புக் காட்டினான் பணியாள்.

ஆக அரக்கன் உள்ளே இருக்கிறான்.

ஒரு பிரச்சினை தீர்ந்தது.

இனி.. அவளது அறையின் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தாள்.

வேலையாள் இதற்குப் பழக்கப்பட்டவன் போல ஒரு மரியாதை முறுவலுடனேயே அவள் வழியில் இடையில் வந்து

நின்றான். "அய்யாவைப் பார்க்க வேணுமின்னா காலையிலே பதினோரு மணிக்கு வாங்கம்மா. அப்பகூட செக்ரட்ரி அம்மாகிட்டே கேட்டு ஏற்பாடு பண்ணிக் கொண்டு வாங்க. இப்ப அவரு யாரையும் பார்க்க மாட்டாரு." என்றான் திருத்தமாக.

முதலாளியின் சாமர்த்தியம் வேலையாளுக்குக் கொஞ்சம் இல்லாமலா இருக்கும்.

"வேண்டப்பட்டவங்கப்பா. ரொம்பவும் அவசரம். நான் இப்போதே பார்க்க வேண்டும்," என்று சுமித்ரா பிடிவாதமாகவே முன்னேறலானாள்.

"வேண்டப் பட்டவங்க வருவாங்கன்னா, அய்யா முதவிலேயே சொல்லியிருப்பாங்களே. டாலியம்மாகூட அப்படித்தான். சொல்வாம யாரையும் உள்ளே விடவே முடியாதும்மா. அட சொல்லிகிட்டே இருக்கிறேனில்லே! இதுக்கு மேலே ஒரு அடி நவுந்தீங்கன்னா பொண்ணுன்னு பார்க்க மாட்டேன்."

அதட்டிய அவன் குரலை அடக்கியபடி, "லிங்கம்! என்ன சத்தம் அங்கே?" என்று அதிகாரமாய்க் கேட்டது ஓர் அழுத்தமான குரல்.

குரலைத் தொடர்ந்து எம்.டியின் அறையிலிருந்து வெளி வந்தவனைக் கண்ட சுமித்ரா அயர்ந்து நின்றாள்.

கோரைப்பல்... சிங்கத்தலை... பானை வயிறு ஒன்றையும் காணோமே.

அண்ணாந்து பார்க்கும் உயரத்தில், கறுத்தடர்ந்த சிகையுடன் மாநிறத்தில் கம்பீரமும் கவர்ச்சியுமாய்...



பணத்தைக் கொட்டித்தான் பெண்களைப் பிடித்தாக வேண்டும் என்ற கட்டாயம் இவனுக்கு என்ன வந்தது?

இவன் நினைத்தால் இம்மென்று சொல்ல எத்தனை அதிநாகரீகங்கள் இருப்பார்கள்!

அதுகளில் ஒன்றைப் பார்த்துக் கொண்டு போகாமல் என் அறியாத தங்கையை நாசமாக்கப் பார்க்கிறானே என்று வெறுப்புடன் நினைத்தாள்.

"ஓ!" என்று கண்களில் சிறு வியப்புடன் அவன் தன்புறம் திரும்புவதைச் சுமித்ரா கண்டாள்.

வெகு பணிவாக நின்ற அந்த வேலையாள் - லிங்கம் - அவனிடம் விளக்கிக் கூறி முடித்து விட்டானா?

என்னவென்று சொன்னான்!

ஒரு வார்த்தைகூடக் காதில், கவனத்தில் விழாமல் என்ன ஆயிற்று?

மேலும் யோசித்துக் கொண்டு நிற்க நேரமில்லாமல் அவன் கண்கள் ஒரு வியந்த பார்வையுடன் அவளை அளந்தன.

சற்றே அதிப்படியான வியப்போ?

"நாளை பதினோரு மணிக்குள் உலகம் அழிந்து விடப் போகிறதாமா?" என்று அக்கறையாய் விசாரித்தான் அவளிடம்.

"இல்லை. ஆனால் நாளை பதினோரு மணி என்றால் எனக்கு வசதிப்படாது!" என்றாள், சுமித்ரா - வெகு கவனத்துடன் உணர்ச்சிகளைத் துடைத்த குரலில்.

உதட்டோரம் ஒரு கேலி நகை வளைய, "ம்... இப்போது எனக்கு வசதிப்படாது என்று நான் வெளியே சென்று விட்டால்?"

திக்கென்றது அவளுக்கு.

கலவரத்துடன் அவனைப் பார்த்தாள்.

சொன்னதைச் செய்ய மாட்டான் என்பதற்கு ஒருவித அறிகுறியும் இல்லை.

பயத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு முன்பு தீர்மானித்து வந்ததையெல்லாம் வேகமாக நினைவுபடுத்திக் கொண்டாள்.

அவனை மிரட்ட வந்துவிட்டு அவளே மிரண்டு போவதா? உள்ளே பயம்தான்.

ஆனால் அதை வெளிக்காட்டித்தான் ஆகவேண்டும் என்பதில்லையே!

மனதில் இல்லாத தைரியத்தைக் குரலில் காட்டி, "பிறகு நீங்கள்தான் வருத்தப்படுவீர்கள்!" என்றாள் மிடுக்காக.

"ம்ம்..." என்று இழுத்தவன் கண்களில் சிரிப்பு நன்றாகவே தெரிந்தது.

அவளுள் கோபம் குமுறியது.

சிரிக்கிறானா? நேராக அவன் மனைவியிடம் சென்றிருக்க வேண்டும். பாவம் என்று அவன் மேல் பரிதாபப்பட்டது இப்போது இவனுக்குக் கெக்கலிப்பாக இருக்கிறதாக்கும்!

தலையை நிமிர்த்தி, "மெய்யாகத்தான் சொல்கிறேன்!" என்றாள் குரலில் அழுத்தத்துடன்.

அப்போதும் அவன் முகத்தில் நகை மாறவில்லை.



"காட்டுக்குப் போ!" என்று கைகேயி சொன்னதைக் கேட்ட போதும் ராமன் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போலவே இருந்ததாம்.

அந்த மாதிரி நினைப்போ? அவர் ராமர், உன் போல ராட்சசன் இல்லை என்று ஆத்திரத்துடன் நினைத்தபோதே இவனும் தோற்றத்தில் ராட்சசனுக்கு நேர்மாறானவன் என்ற முரண்பாடு அவள் மனதில் உறுத்தியது.

தோற்றத்தில்தான் வித்தியாசம். உள்ளே அதேதானே என்று பிடிவாதமாய்க் கோபத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு அவனை உறுத்து விழித்தாள் சுமித்ரா.

அவன் தன் பாக்கெட்டில் இருந்து ஒரு சாவியை எடுத்து அந்த லிங்கத்திடம் கொடுத்தான்.

"காரில் ஏ.சி. யைப் போட்டுவிட்டு அங்கே இரு. நான் ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன்," என்று அவளை அனுப்பினான்.

"வா," என்று இவளைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்றான்.

இவளை அமரச் சொல்லிவிட்டு அந்தப் பெரிய கண்ணாடி மேசையின் மறுபுறம் சென்று தன் இருக்கையில் அமர்ந்து இங்கும் அங்குமாய் லேசாகச் சுழன்றான்.

"நாளைக் காலை பதினோரு மணிக்குள் எனக்கு வர இருக்கும் ஆபத்தைப் பற்றி நானும் அறிந்து கொள்ளலாம் இல்லையா?" என்றான் இலகுக் குரலில்.

தன்னைப் பார்த்து அவன் சிரிப்பது புரிந்து அவள் முகம் சிவந்தது.

இவனிடம் எப்படித் தொடங்குவது என்று நினைக்கையில் அந்த ஏ.சி. அறையின் இதக் குளிரிலும் அவள் முகம் வியர்த்தது.

அவள் எதிர்பார்த்து வந்தது போலப் பொல்லாத ராட்சசனாய் அவன் இருந்திருந்தால்கூட நன்றாயிருக்கும் போல ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது.

இவனுடைய தோற்றமும் சிரிப்பும் அவளைக் குழப்பி நாவைக் கட்டின.

ஆனால் அது நீடிக்காமல் அவன் சட்டென மாறினான்.

சுவரில் ஒட்டியிருந்த குவார்ட்ஸ் கடிகாரத்தைக் காட்டி, "நீ யார், ஏன் என்னிடம் வந்தாய் என்பதையெல்லாம் முழுவதும் சொல்லி முடிக்க உனக்கு அவகாசம் ஐந்து நிமிடம். அதற்கு மேல் என் கார் பாட்டரியை வீணாக்க நான்தயாரில்லை!" என்றான், கடினமான குரலில்.

இங்கே ஒரு பெண்ணின் வாழ்வு வீணானால் பரவாயில்லையாம்.

அவனுடைய கார் பாட்டரி வீணாகிவிடக் கூடாதாம்.

அவள் கற்பனை செய்து வைத்திருந்தது போல அவன் பொல்லாத ராட்சசனேதான்.

இந்தச் சிங்கத்தை அதன் குகையிலே சந்தித்தாயிற்று.

இனி வென்றாக வேண்டும்.

பூட்டிய நாணாய் நிமிர்ந்து, "நான் சித்ராவின் அக்கா!" என்றாள் இறுகிய குரலில்.



# 4

அவனது இடது புருவம் ஒருதரம் ஏறி இறங்கியது தவிர, வேறு எந்தவித மாறுதலும் அவனிடம் இல்லை.

ஒரு கணம் தாமதித்துப் பார்த்தாள் சுமித்ரா.

அவன் கல்லுளிமங்கனாய் அமர்ந்திருக்கவே, "இதோ பாருங்கள் மிஸ்டர்..." என்று தானே தொடங்கினாள்.

"சதானந்தன்!" என்று அவளது தயக்கத்தை இட்டு நிரப்பினான் அவன்.

அவன் குரலைக் கேளாதவள் போலப் பாவனையுடன், "என் தங்கை அறியாத சின்னப்பெண். அவளை இந்த மாதிரி டூருக்கு அழைத்துச் செல்கிற ஐடியாவை விட்டுவிட வேண்டும்." என்று தொடர்ந்து பேசி முடித்தாள் அவள்.

"டூர் ஐடியாவை விட்டு விடுவதா? விளையாடுகிறாயா? பிறகு என் வேலை என்ன ஆவது?"

"அதற்கு வேறு ஆளைப் பாருங்கள். இல்லாவிட்டால்..." என்று மிரட்டுவதுபோல முடிக்காமல் விட்டாள் சுமித்ரா.

"இல்லா விட்டால்?"

"இல்லாவிட்டால் போலீசில் புகார் செய்வேன்!" என்றாள் சுமித்ரா அமர்த்தலாக.

ஆனால் அவன்தான் பயப்படுவதாகத் தெரியவில்லை.

"என்னவென்று?" என்று திரும்பவும் சாவதானமாகக் கேட்டான்.

அவள் அவசரமாக யோசிக்கு முன், "இருபத்தோரு வயது நிரம்பிய என் தங்கை தன் சுய விருப்பத்தின் பேரில் தன் மானேஜிங் டைரக்டரோடு தொழில் ரீதியான பயணத்தில் உதவி செய்யப்போகிறாள் என்றா? தாராளமாகச் செய்து பார். ஆனால் ஸ்டேஷனில் உன்னை ஒரு மாதிரிப் பார்த்தால் அதற்கும் என்னைப் பிழை சொல்லாதே!" என்றான் சிறு ஏளனத்துடன்.

"அது வெறும் தொழில் ரீதியான பயணம் இல்லை!" என்றாள் சுமித்ரா வேகத்துடன்.

அவன் தோளைக் குலுக்கி விட்டுப் பேசாதிருந்தான்.

"நான்... நான் உங்கள் வீட்டுக்குப் போவேன்..." என்றாள் அவள் விடாமல்.

"போய்?"

"எல்லாவற்றையும் உங்கள் மனைவியிடம் சொல்லி விடுவேன்."

அவளது பேச்சு முடியும் முன்பே அவன் சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

உறுதியான வெண்ணிறத்து வரிசைப் பற்கள் தெரியச் சிரித்த சத்தமும் தோற்றமும் அவளைத் திகைக்க வைத்தன.

சிரித்து முடித்து அவனே சொன்னான். "நீ புகார் செய்ய வேண்டும் என்பதற்காக மின்வேகத்தில் ஒரு பெண்ணை



மணந்து மனைவியாக்கி வீட்டில் இருத்துவது என்றால் நம்மால் ஆகாது, தாயே!" என்றவனுக்கு மீண்டும் சிரிப்புப் பிறிட்டது.

மனைவியே இல்லையா?

பிரம்மாஸ்திரம் என்று அவள் எண்ணியிருந்தது பிசு பிசுத்துப் போகவும் சுமித்ரா வெலவெலத்துப் போனாள்.

திருமணம் என்கிற பந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் வகை வகையாய் ருசிக்கிறவன் அவன்.

இனி இவனிடமிருந்து சித்ராவை எப்படி மீட்பது?

கடைசி கடைசியாய் இன்னும் ஒன்று தோன்றியது.

இவனுக்குப் பெற்றவர்கள் என்று இருப்பார்கள் இல்லையா?

இருந்தாலும் தன் பிள்ளையின் லீலா விநோதங்களில் தலையிடுவார்களா? பணக்காரப் பையன் என்றால் அப்படித் தான், நீ உன் தங்கையை அடக்கிவை என்று சொல்லி விட்டால்?

ஆயினும் விடாமல், "உங்கள் பெற்றோர்களிடம்..." என்று வலுவற்ற குரலில் அவள் தொடங்கியது அவனது முறுவலில் நலிந்து ஓய்ந்து போயிற்று.

அய்யோ...! நிராசையின் தீவிரத்தில் அவளுக்குக் கண்ணைக் கரித்து நாசித் துவாரம் விரிந்து துடித்தது.

அவளை ஒரு வேடிக்கைப் புன்னகையுடன் பார்த்திருந்த அவன் முகம் தெளிவு இழக்கையில் அவன் கேட்டான். "நீ உன் தங்கையிடமே சொல்வதற்கென்ன?"

"அவள்..... அவள்தான் காது கொடுத்துக் கேட்கவே மாட்டேன் என்கிறாளே..." என்று பதிலிறுத்தாள் வேதனையை மறைக்கும் சக்தியற்று.

"ஓ! பின்னே உன் பெற்றோர்.."

அந்த நேரத்தில் வெகு அசந்தர்ப்பமான கேள்வி.

"இருவரும்... ஒருவருமே இல்லையே..." என்றவளுக்குப் பெற்றோரின் இழப்பு அப்போதுதான் நிகழ்ந்ததுபோல நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

பற்களின் அழுத்தம் உதடுகளின் நடுக்கத்தை நிறுத்திய போதும் விழிகளில் பெரிய நீர்மணிகள் திரளுவதையும் மடியில் விழுந்து சிதறுவதையும் அவளால் தடுக்க முடியவில்லை.

இவன் முன்னிலையில் கண்ணீர் வேறு வந்து கேவலப் படுத்த வேண்டுமா என்ற அவமானத்தோடு அவளுக்கு அது ஆச்சரியமும் கூடத்தான்.

அப்பா அம்மா இறந்தபோது முதல் அதிர்ச்சியில் தவிர அவள் கண்ணீர் விட்டதே இல்லை எனலாம்.

அடுத்து என்ன, அடுத்து என்ன... என்று அதே யோசனை செயல் என்று காலம் சென்ற வேகத்தில் அழுகை பற்றி எண்ணக்கூட அவளுக்கு நேரம் இல்லாது போயிற்று.

ஏன், இடையிலே கண்ணில் பட்ட ஒரு பாலைவனச் சோலை வெறுங்கானல் நீராகக் கருகியபோதுகூட அவளுக்குக் கண்ணீர் வரவில்லையே.

ஆனால் இன்று அத்தனைக்கும் சேர்த்து மொத்தமாய் விழிகளில் அருவி இறங்கியது.

விம்மாவோ விசும்பவோகூடச் சக்தியற்று ஓய்ந்து போய் வடித்த கண்ணீர்.

இடையில் அவன் எப்போது எழுந்து சென்றானோ?



ஒரு கையில் குளிர்ச்சியான ஒரு தம்ளர் தண்ணீர் திணிக்கப்பட்டது.

தண்ணீரைச் சொட்டு விடாமல் குடித்துவிட்டுத் தம்ளரை மேசை மேல் வைத்தபோது விழி நீரின் வேகம் வெகுவாகக் குறைந்திருந்தது.

"அது பாத்ரூம்!" என்று அவன் காட்ட, எழுந்து சென்று முகம் கழுவினாள்.

கண்ணில் விழுந்த கூந்தல் சுருளை ஒதுக்கி நிமிர்ந்த போது எதிரே பளபளத்த கண்ணாடியில் முகம் தெரிந்தது.

ஒரேயடியாக ஓய்ந்துவிட்ட முகம்.

மீண்டும் கண்கள் கரிக்கத் தொடங்கவும் அவசர அவசரமாய்த் தண்ணீரை முகத்தில் அடித்துக் கழுவினாள்.

அருகில் கம்பியில் கிடந்த வெண்ணிறத் தேங்காய்ப்பூ துவாலையை எடுத்தபோது அவன் பயன்படுத்தியதோ என்று ஒரு கணம் தயக்கம் வந்தது.

ஆனால் சலவையின் வெண்மை அப்படியே இருக்கவும் முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டு வெளியே வந்தாள்.

மேசை மேல் இருந்த கைப்பையை எடுத்துக்கொண்டு "நன்றி" என்ற முணுமுணுப்புடன் திரும்பி நடக்கலானாள்.

"வந்த காரியம் முடிந்து போயிற்றா?" என்று வழி மறித்தது அவன் குரல்.

முடியவில்லையா?

அவன்தான் ஒரு வகையிலும் தன்னை மிரட்ட முடியாது என்று சொல்லாமல் சொல்லித் தீர்த்துவிட்டானே.

புரியாமல் திரும்பிப் பார்த்தாள் சுமித்ரா.

"உட்கார்!" என்று சற்று முன் அவள் காலி செய்த நாற்காலியைக் காட்டினான் அவன்.

அந்த உத்தரவுக்குப் பணிய விரும்பாதது போலத் தன்னை அறியாமல் அவள் பார்வை கடிகாரத்திற்குச் சென்றது.

அந்த அறைக்குள் வந்து பத்து நிமிடங்கள்தானா ஆகின்றன என்று ஆச்சரியம்கூட இருந்தது.

அவளது பார்வையைத் தொடர்ந்தவன், "என் விருப்பத்திற்காக என்றால் எந்தச் செலவும் எனக்குத் தாங்கும்!" என்றான் ரொம்பவும் சாதாரணம் போல.

'இரண்டாயிரம் கூடத்தானே!'

உதட்டைக் கடித்த வண்ணம் பேசாமல் அமர்ந்தாள் சுமித்ரா.

ஒரு கணம் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "இப்போது இரண்டாயிரம் ரூபாய்க்கு என்ன அவசரமான அவசியம்?" என்று கேட்டான் சதானந்தன்.

"கம்ப்யூட்டர் கோர்ஸ் செய்தால் பணம் கொட்டுமாமே!" என்றாள் சுமித்ரா கசப்புடன்.

"பிடித்தம் எல்லாம் போக உன் தங்கைக்கு அறுநூறு ரூபாய் வரும். நீயும் வேலை செய்கிறாய் என்று நினைக்கிறேன். இரண்டாயிரம் சேர்க்க முடியவில்லையா?"

இரண்டாயிரமா? ஆயிரம் ரூபாய் சேர்ப்பதற்குள் அவள் பட்ட பாடு நினைவு வந்து இன்னமும் மனம் கசந்தது.



இவனைப் போலப் பணத்தில் படுத்து உருளுகிற கும்பல் என்று நினைத்தானோ?

மனத்துள் மண்டிய புகைச்சலை வெளியே காட்டாமல், "கடன் கட்ட வேண்டும். சித்தி.. துணைக்கு இருப்பவர்கள்- அந்தச் செலவு ... ச்சு.." என்றாள் அலுப்புடன் அவள்.

"நீ எங்கே என்ன வேலை பார்க்கிறாய்?"

இது எதுக்கு குறுக்கு விசாரணை என்று எரிச்சல் வந்த போதும் அவளால் வெளிக்காட்ட முடியவில்லை.

ஒரு வேளை - நூற்றில் ஒரு சதவீதமாக அவனது மனம் இளகினால்..

இளகுமா?

இவ்வளவு கேள்வி கேட்கும்போதும் குரலில் கொஞ்சமும் இளக்கம் தெரியவில்லையே.

ஆனாலும் எதையும் தானாகக் கெடுத்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் அவள் அமைதியாகவே பதில் சொன்னாள்.

பெற்றோரின் மறைவு, படிப்பை முடித்தது, வேலை தேடியது.

பொறுமையாக அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டே வந்தவள், கடைசியாக அதை இழந்து, "இந்தக் கதையெல்லாம் உங்களுக்கு எதற்கு சார்? அவசியம் இல்லாதது! இப்போதைக்கு நான் வந்த காரியத்தைச் சற்று அனுதாபத்துடன் சிந்தித்துப் பாருங்கள். என் தங்கை ஓர் இளம் குருத்து. அவளை விட்டு விடுங்கள்!" என்று வேகமாகச் சொல்லி முடித்தாள்.

"நான் இல்லாவிட்டால் இன்னொருவன்!" என்றான் அவன் விட்டேற்றியாக.

அவனுடைய அலட்சியம் தந்த வேதனையை மறைத்து, "இல்லை சார், என் குடும்பம் அப்படிப் பட்டது இல்லை. கௌரவமானது, மானம் பெரிது என்று உயிராய் மதிப்பது. இல்லாவிட்டால் இவ்வளவு பணம் வீணானாலும் பரவாயில்லை என்று சித்திரையை எங்களோடு வைத்திருப்பானேன்? இப்போது மிகவும் அலுத்து விட்டான். அவ்வளவுதான். இதுவும்கூட அவன் பெரிய மனப்போராட்டத்தின் பின் எடுத்த முடிவு. இந்த முயற்சி தோற்றுவிட்டால் அப்புறம் ஒரேயடியாய் விட்டுவிடுவான்!" என்றாள் நம்பிக்கையோடு.

"அது வாழ்க்கைக்கு அவ்வளவு நல்லதில்லையே. ஒரு முயற்சி தோற்றால் விட்டு விடுவது சரி என்றா சொல்கிறாய்?"

அவள் பேச்சை யதார்த்தமாக எடுத்து, "அதெல்லாம் அந்தந்த முயற்சி, குறிக்கோள் முதலியவற்றைப் பொறுத்தது இல்..." என்றவள் சட்டென முகம் சிவந்தாள்.

"எங்கள் குடும்ப மானப் பிரச்சினை உங்களுக்கு வேடிக்கைக்குரியதாக இருக்கிறதா! சே..!" என்று வெறுப்புடன் மொழிந்து விட்டு எழுந்தாள்.

"ஊகூம். அப்படியெல்லாம் இல்லை... ஆனால் அவள் உடன் வருவதை வைத்து நான் பல திட்டங்கள் போட்டிருந்தேன்."

என்ன திட்டமாக இருக்கும் என்ற யூகத்தில் சுமித்ராவின் முகம் கன்றியது.

அவன் தொடர்ந்தான். "நீ இவ்வளவு சொல்லும் போது ஒரேயடியாக மறுக்கவும் மனம் வரவில்லை. ஆல் ரைட் அந்தப்



பயணத்துக்கு உன் தங்கையை அழைத்துப் போகவில்லை. ஆ..."

ஸ்விட்ச் போட்டாற்போல முகமெல்லாம் மலர, "நன்றி சார், மிக மிக நன்றி சார்! மிகவும் நன்றி சார்!" என்று பூரித்துப் போனாள் சுமித்ரா.

ஆனால் அவன் அந்த நன்றியை ஏற்பதாக இல்லை.

"பொறு பொறு, அவசரப்படாதே. முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன். பொதுவாக என்னைப் பற்றி யாரைக் கேட்டாலும் நான் ஒரு நல்ல பிசினஸ்மேன் என்பார்கள்!" என்று கொஞ்சம் பீற்றிக் கொண்டான்.

"அதெல்லாம் எனக்கு என்ன வந்தது, சார்? இப்போதைக்கு என் தங்கை விஷயம் நல்லபடியாக முடிந்தது. அதுபோதும் எனக்கு. ஆயிரம் தாங்க்ஸ்!" என்று சுமித்ரா முறுவலித்தாள்.

அவள் பேசாதது போலப் பாவித்து, "நான் ஒரு பிசினஸ்மேன். ஒன்றை விட்டால் பதிலாக எனக்கு வேறு லாபம் வேண்டும். அதனால்..." என்று நிறுத்தினான் அவன்.

"என்ன...?"

"அவளுக்குப் பதிலாக நீ என்னுடன் வருகிறாயா?" என்று குண்டைத் தூக்கிப் போட்டான் சதானந்தன். தன் செவிகளையே நம்ப இயலாமல், திகைப்புடன் அவனைப் பார்த்துப் பேந்த விழித்தாள், சுமித்ரா.

# 5

விடிய விடிய ராமாயணம் கேட்டு, சீதைக்கு ராமன் சித்தப்பாவா என்று கேட்டானாம் ஒருவன்.

அவன் வழியில் பிறந்தவனோ இவன்?

இவ்வளவு நேரம் குடும்ப கவுரவம், தங்கையின் மானம் என்றெல்லாம் சொல்லித் தீர்த்திருக்கிறாள்.

மிரட்டி, அழுது கெஞ்சியிருக்கிறாள்.

அவளுக்குப்பதிலாக நீ வா என்றால் என்ன அர்த்தம்?

தங்கை தவறினால் போகும் மானம், அக்கா பிழைசெய்தால் மட்டும் அப்படியே நிற்குமாமா?

ஆக சமித்ரா தன் தங்கையின் மானம் காக்க வந்ததாகச் சதானந்தன் கருதவில்லை.

ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் தங்கை உல்லாசமாகத் தங்கியது பொறுக்காமல் தட்டிப் பறித்துக் கொள்ள வந்ததாக எண்ணியிருக்கிறான்.

"சீ!" என்றாள் உரக்கவே.

அவன் தோளைக் குலுக்கினான். "ஆல் ரைட். உன் விருப்பம்."

எரிச்சலையும் அருவருப்பையும் இயன்ற வரை மறைத்துக் கொண்டு கெஞ்சிப் பார்த்தாள் சமித்ரா.



"சார்... தயவு செய்து..." என்று மீண்டும் தொடங்கினாள்.

"என் தயவு அளவுடன் கூடியதுதான். தங்கைப் பாசம் பெரிதானால் நீ என்னுடன் வா!" என்றான் அவன் முடிவாக.

வெறுப்புடன் அவனை வெறித்து விட்டுத் திரும்பி நடந்தாள் சமித்ரா.

"என்ன, போகிறாய்?"

"எனக்கு மானம் பெரிது!" என்றாள் அவள் திரும்பிப் பாராமலே.

"உன் தங்கையின் மானம் பெரிது அல்லவா?"

"அவள் அதைச் சிறிதாக்கிக் கொள்ளத் துணிந்துவிட்டாள். நான் அப்படி அல்ல - உயிருள்ள வரையிலும்!" என்று வறண்ட குரலில் கூறிவிட்டு மேலே நடந்தாள் சமித்ரா.

"வேற, வேலை விஷயமாக உன்னை என்னோடு வரச் சொன்னால் நீ மானம், உயிர் என்று பேசுகிறாயே..." என்றான் குரல் ஒரு விதமாய் மாற.

"என்ன?"

மீண்டும் சமித்ரா திகைத்துப் போனாள்.

திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் எதையும் கண்டு கொள்ள முடியாமல் அவள் நின்றபோது, அவனே, "எனக்கு வேலை நடக்க வேண்டும், இல்லையா?" என்றான் இலகுவாக.

குழம்பிப்போய், "நா...ன்.. வந்து.. நான் சி... சித்ரா..." என்று தடுமாறினாள் அவள்.

அவன் கண்களில் சிரிப்பைக் காணவும், சினமுற்று, "உல்லாசப் பயணம் என்று சித்ரா சொன்னாளே!" என்று ஆத்திரமாகக் கேட்கும்போதே சுருதி இறங்கிப் போயிற்று அவளுக்கு.

சித்ரா பிசினஸ் டூர் என்றுதானே சொன்னாள்...

ஒருவேளை அவளும் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாளோ?

ஆனால் அந்த இரண்டாயிரம் ரூபாய்?

தலையை நிமிர்த்தி, "உங்கள் கம்பெனியில் ஒரு வாரம் வேலைக்கு இரண்டு ஆயிரம் ரூபாய் கொடுப்பீர்களோ?" என்றாள் கோபக்குரலில்.

"செலவு போக ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய் படி கொடுப்பது கம்பெனியில். ஆனால் உல்லாசப் பயணமாகவும் ஆக்க - விரும்பினால் அதிகப் பணமோ, அடியேன் ஒத்துழைப்போ எதையும் நான் மறுப்பதில்லை."

"தாராள மனதுதான்!" என்றாள் அவள் குத்தலாக.

சீண்டியது போதும் என்று சதானந்தன் நினைத்தானோ என்னவோ-

லேசாக முறுவலித்தான். "அதே சமயம் மறுப்பை எந்த வகையிலும் நான் மீறுவது இல்லை!" என்றான் அமைதியாக.

அந்தக் குரலில் தன்னுள்ளும் ஓர் அமைதி பரவுவதை அவள் உணர்ந்தாள்.

திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்து, "அந்த டூர் எத்தனை நாள்?" என்று வினவினாள்.



"ஒரு வாரம்..."

"எனக்கு முன்னூற்று ஐம்பது ரூபாய் கிடைக்கும்?"

புரிந்து கொண்டு, "உணவு, தங்குமிடம் இவைகளின் செலவு தவிர்த்து முன்னூற்று ஐம்பது ரூபாய் மட்டும் கிடைக்கும்!" என்றான் அதே முறுவலுடன் அவன்.

பழைய சேமிப்பு ஆயிரம் ரூபாய், இது ஒரு முன்னூற்றைம்பது. ஆக மொத்தம் என்று கணக்கிடும் போதே இன்னமும் அறுநூற்று ஐம்பது எப்போது சேர்ப்பது என்று மலைப்பும் உண்டாயிற்று.

கூடவே இன்னொன்றும் தோன்றிற்று.

"எனக்கு உங்கள் தொழில்முறைச் செயல்பாடுகள் எதுவும் தெரியாது. இந்த மாதிரி பிசினஸ் டூரில் நான் எந்த அளவுக்கு வேலை செய்ய முடியும்?" என்று கேட்டும் விட்டாள்.

அவன் சட்டென நகைத்தான்.

"அந்த வேலையெல்லாம் செய்ய உன் தங்கைக்கு மட்டும் என்ன தெரியுமாம்? இந்தப் பயணம் செய்வது நான் மட்டும் அல்ல. கம்பெனியின் மற்ற டைரக்டர்களும்தான். முக்கியமான தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்க கம்பெனி செகரட்டரி வருவார். அதையெல்லாம் உன் தங்கையிடம் ஒப்புவிப்பது என்றால் கம்பெனி அவ்வளவுதான்!" என்று மீண்டும் நகைத்தான்.

ஆமாமாம். அவனைப் பொறுத்த வரையில் சித்ராவின் ரோல் வேறு அல்லவா?

"ஆனால் நான் எதற்கு?" என்றாள் முகம் கறுக்க.

சிரிப்பை நிறுத்தி, "என்னுடைய தனிப்பட்ட ஐடியாக்களை, யோசனைகள், சில சொத்து விவகாரங்கள் போன்றவைகளைக் குறிப்பு எடுத்துக் கொள்ள டைப்பிங் சுருக்கெழுத்து தெரிந்த ஒருவர் எனக்க வேண்டும். உன் தங்கையைப் போல் உனக்கும்தான் இதெல்லாம் தெரிந்திருக்கிறதே. அதனால்தான் அவளுக்குப் பதில் உன்னை வரச் சொன்னேன்." என்று விவரித்தான் சதானந்தன்.

அவன் துருவித் துருவி ஏன் விசாரித்தான் என்பது புரிந்தது அவளுக்கு.

ஆனால் இவனை எப்படி நம்புவது?

அதிலும் ஓர் அறியாப் பெண்ணை வீணாக்க விரும்பி அழைத்தவனை?

நம்ப முடியாது என்று எழுந்து போய் விடலாம்தான்.

ஆனால் நாளை தங்கை கண்ணைத் திறந்து கொண்டே கிணற்றில் விழுவதைத் தடுக்க முடியாது போகும்.

அதைவிட அவளே சென்று எச்சரிக்கையுடனேயே இருந்து கொள்வது மேல்.

"என்றைக்குக் கிளம்ப வேண்டும்?" என்று மெல்லக் கேட்டாள்.

"அடுத்த புதன் கிழமை. முதலில் உன் பெயர், வயது எல்லாம் தந்தாயானால் டிக்கெட் எடுக்க வசதியாக இருக்கும்."

"எ.. எங்கே போக வேண்டும்?"



"கோவைக்கு. அதன் சுற்றுவட்டாரம். ஊட்டி என்று அந்தப் பக்கம்."

தன்னைப் பற்றித் தேவைப்பட்ட விவரங்களைச் சுமித்ரா கூறவும், சதானந்தன் கண்ணை விரித்தான்.

"சித்ராவின் வயது இருபத்தொன்று என்று சிப்பந்திகள் ஃபைலில் பார்த்தேன். உனக்கும் அவளுக்கும் ஒரு வயசுதான் வித்தியாசம். தொடங்கிய வேகத்தைப் பார்த்துத் தாமே பயந்து போய் அடியோடு நிறுத்திக் கொண்டார்களாக்கும், உன் பெற்றோர்!" என்று சிரித்தான்.

தானாக அவளுக்கு லேசாய் முறுவல் வந்தது.

"புதனன்று மாலை ஐந்தரைக்கு நீ இங்கே இருக்க வேண்டும்," என்று கூறி எழுந்தான் அவன்.

சித்ராவிடம் பெரும் சீற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த சுமித்ரா ஏமாந்து போனாள் என்றே சொல்லலாம்.

"நீ சும்மா இருக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்தான் அக்கா. ஆனால் உன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று நினைத்திருந்தேன். எப்படியோ தாராளமாய் மூச்சுவிடக் கிடைப்பதாக இருந்த ஒரு வழியையும், எனக்கு நல்லது செய்வதாக எண்ணி அடைத்து விட்டாய் இல்லையா?" என்று வருத்தம் மட்டுமே காட்டினாள் சின்னவள்.

"இவ்வளவுநாள் பொறுத்தது இன்னமும் ஓர் ஆண்டு. பிறகு நீ ஆசைப்படுவது போல அந்த கம்ப்யூட்டர் கோர்சில் சேர்ந்து விடலாம்," என்று தெம்பாகப் பேசினாள் முன்னவள்.

"ச்சு..." நம்பிக்கையற்றுத் தோளைக் குலுக்கினாள் தங்கை.

தங்கையின் வாடிச் சுருங்கிய முகம் அவளை எப்படியாவது நல்லபடியாக வாழ வைத்தே தீரவேண்டும் என்ற பிடிவாதத்தைப் பெரியவளுக்கு மீண்டும் உறுதிப்படுத்திற்று.

அலுவலகத்தில் ஒரு வார விடுமுறை பெற்றுக் கொண்டு பயணத்திற்கு ஆயத்தம் செய்தாள் சுமித்ரா.

அந்தக் கோவை, ஊட்டி பயணத்தின் போது சதானந்தனைப் பற்றிச் சுமித்ரா கொண்டிருந்த எண்ணங்கள் பெரிதும் மாறிப் போயின.

நன்றாக 'க்ரீஸ்' தடவிய மிஷினில் பாகங்கள் இலகுவாகவும் தடையின்றியும் ஓசையின்றியும் சுழல்வது போல எங்கும் எந்த விதமான தடங்கலோ, தாமதமோ இல்லாமல் வேலைகள் வெகு இயல்பாக நடந்தன.

உடன் வந்த மற்ற டைரக்டர்களோடு அவர்களில் ஒருவனாகக் கலந்துகொண்ட போதும் எம்.டி. என்ற முறையில் உடையவனாய், அவனது உபசாரமும் உள்ளுறை கருபோல நன்றாகவே தெரிந்தது.

யாருக்கும் எந்த விதமான சவுகரியக் குறைவும் நேர்ந்து விடாமல் அவனது கவனம் காத்தது.

செகரட்டரியும், அவரது உதவியாட்களும் பெரும்பான்மை விஷயங்களைக் கவனித்துகொண்ட போதும் அவர்களைப் பின்னிருந்து இயக்குபவன் அவனாகவே இருந்தான்.

கறுப்புக் காபியாகட்டும்; ஹவானா சுருட்டாகட்டும் - யாரும் எதற்கும் காத்திருக்க நேரமில்லை.



சம்பிரமான புன்னகை எந்நேரமும் தன்னோடு இணைத்துக் கொள்ள அழைத்தது.

ஆனாலும் அவனை முழுமையாக மதிக்க முடிய வில்லை அவளால்.

அவளுடைய சின்னத் தங்கையை நாசம் செய்ய முயன்றவன்தானே!

அவ்வப்போதான அவளது ஒதுக்கங்களை அவன் கவனித்தானோ என்னவோ, எதையும் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு தொழிற்சாலைக்காக விஸ்தீரமான இடங்களைப் பார்வையிடுவது அவர்களுடைய முக்கிய வேலையாக இருந்தது.

மலையடிவாரப் பகுதியில் மரங்கள் அடர்ந்த பகுதி ஒன்றைப் பார்த்தார்கள்.

"மரங்களை வெட்டி ஒதுக்கி நிலத்தைச் சீர்செய்யுமுன் தாவு தீர்ந்துவிடும்!" என்று மற்றவர்கள் பார்த்த இடத்திலேயே ஒதுக்கி விட்டார்கள்.

ஆனால் அந்த மரங்களை அருகில் உள்ள காகிதத் தொழிற்சாலைக்கு விற்பனை செய்தால் எவ்வளவு லாபம் வரும் என்ற கணக்கை இரவில் அவளிடம் சதானந்தன் டிக்டேட் செய்தபோது சுமித்ரா பிரமித்தாள்.

"இதை அப்போதே அவர்களிடம் சொல்லியிருக்கலாமே சார், எல்லோரும் இதையே முடிக்கத் துடித்திருப்பார்களே!" என்றாள் தன்னை அடக்க முடியாமல் ஆர்வத்துடன்.

"அடியோடு மறுத்திருப்பார்கள்!" என்றான் அவன் சிறு நகையுடன்.

"ஏன்? எப்படி? இவ்வளவு லாபம் வரும் என்கிற போது எப்படி மறுப்பார்கள்?"

"இந்த ஐந்து டைரக்டர்களில் சிலருக்கு நன்றாக நடந்து கொண்டு இருக்கும் தொழிற்சாலையை வாங்க வேண்டும் என்ற ஆசை.விலை கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும் உடனே லாபம் வரத் தொடங்கி விடுமல்லவா?"

சற்று யோசித்து "அதுவும் சரிதானே சார்?" என்றாள் அவள்.

முறுவலோடு அவன் தொடர்ந்தான். "சில பேருக்கு அடியிலிருந்து நாமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம். நம் விருப்பம்போல 'டிசைன்' பண்ணலாம். எத்தனையோ வகைகளில் திட்டமிட்டுச் செலவைக் குறைத்துத் தரமாகச் செய்யலாம்., கொஞ்சம் காத்திருந்தாலும் அதிகம் வரும் என்ற அபிப்ராயம்."

"அதுவும்.... நீங்கள் எந்தப் பக்கம் ஸார்....? ம்ம்.... அடியிலிருந்து நாமாகச் செய்கிற சைடு. சரிதானே, சார். இல்லாவிட்டால் மரம் பற்றித் திட்டம் போட மாட்டீர்கள்."

அவன் புன்முறுவலோடு பார்த்துக் கொண்டு இருக்க, அவளே தொடர்ந்தாள். "பின்னே சொல்லி விடுவதற்கு என்ன சார்? நீங்களே இப்படித்தான் என்று விட்டால் யார் மாறு சொல்லக் கூடும்?"

"மனதில் வேறு நினைத்திருப்பவர்கள் அத்தனை பேரும் சொல்வார்கள். அப்புறம் சின்னச் சின்ன விஷயங்களில்கூட நாம் சொல்வதைத் தவறு என்பார்கள். இடது புறமாய் இலகுவாகத் திரும்பலாமே என்றால் வலப்புறமாய் முக்கால் வட்டம் அடித்துத் திரும்புவதுதான் ராசி என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்பார்கள். இவர்களையெல்லாம் அவர்கள் போகிற போக்கில் விட்டுத்தான் திருப்ப வேண்டும்."



"எப்படி?" என்றாள் அவள் உள்ளூர வியப்புடன்.

"அதுவா, இதுவா, எதுவுமே சரியில்லையா என்று குழம்ப வைத்து, அந்த நேரத்தில் மறுப்பது போல நாம் பேசினால் நம்முடைய ஐடியாவை அவர்கள் வாயாலேயே சொல்லத் தொடங்கி விடுவார்கள்."

"குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போலவா?"

சித்ராவிடமும் இதே வழியைக் கையாண்டு இருப்பானோ?

மற்றப்படி அவளுடைய தங்கை மானத்தை அவ்வளவு அலட்சியமாக மதிப்பது எப்படி முடியும்?

குழப்பத்துடன் அவளுடைய நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டாள்.

என் மனமும் இப்போது குழம்பிப்போய் இருக்கிறதே, என்னிடம் என்ன சாதிக்கப் போகிறான்?

"இங்கு ஓர் ஆபீஸ் தொடங்க இந்தக் கட்டிடம் வசதியாக இருக்கும்.ரியல் எஸ்டேட் மதிப்பிலும் இதன் மதிப்பு பல மடங்கு சுமித்ரா!" என்று அவளது வெறித்த பார்வையில் தன் டிக்டேஷனை நிறுத்தினான், சதானந்தன்.

தலையைக் குலுக்கி விட்டுக் கொண்டு, "சரி, சார், என்ன சொன்னீர்கள்?" என்று பென்சிலையும் நோட்டுக்கையும் தயார் நிலையில் வைத்துக் கொண்டாள் அவள்.

அவள் கையிலிருந்த இரண்டையும் மெல்ல வாங்கி மேசை மேல் வைத்தான் அவன்.

"என்ன விஷயம்?" என்று கேட்டான்.

பேசாமல் தரையைப் பார்த்தாள் சுமித்ரா.

மற்றப்படி, 'நீ என் தங்கையின் மனதை எப்படிக் கலைத்தாய்?' என்று ஒருவனிடம் - அதுவும் அவளுக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளியிடம் - கேட்க முடியுமா?

அவள் பேசாதிருக்கவும், "பார் சுமித்ரா, இந்த ஐந்து நாட்களில் உன் மனதைப் பாதிக்கும்படி ஏதாவது நடந்திருக்கிறதா? பேச்சில்கூட?" வினவினான்.

"இல்லை." என்று தலையசைத்தபோதும், உடனேயே-

"ஆனால் அந்த மாதிரி ஓர் ஈனத்துக்கு என் தங்கையை அழைத்தீர்கள்தானே?" என்றாள் சுமித்ரா.

"நானா? நானா அழைத்தேன் என்கிறாய்?" என்று சதானந்தன் வெகுவாக வியக்கவும் அவளுக்குக் கோபம் மூண்டது.

சினம் துணைவர, "வியப்பானேன்? உங்களோடுதானே அவள் 'டூர்' வருவதாக இருந்தது." என்றாள் வெடுக்கென.

"நிச்சயமாய். ஆனால் அவள் டூர் வருவதாக இருந்ததற்கும், நான் அழைத்து வருவதாக இருந்தது என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது இல்லையா?"

குழம்பிப் போனாள் அவள்.



இவனிடம் குழப்பத்தைக் காட்டுவது தவறு என்ற நினைவுடன், பெரிய விழிகளை விரித்து அவனைக் கூர்மையுடன் பார்த்தாள்.

"மெய் சுமித்ரா. உன் தங்கையை நான் அழைக்கவில்லை..."

"....."

"உன் தங்கை உன்னிடம் என்ன சொல்லியிருக்கிறாளோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பயண விவரம் முடிவான பிறகு ஒரு நாள் உன் தங்கையாகத்தான் என்னிடம் வந்து, டூருக்கு என்னுடன் தான் வருவதாகவும், இரண்டாயிரம் தர வேண்டும் என்றும் கேட்டாள்." என்று விவரித்தான் அவன்.

மூச்சடைத்தது சுமித்ராவுக்கு.

முதலாளி என்கிற பதவிக்காகவும் பணத் தேவையினாலும் தங்கை இணங்கியிருப்பாள் என்று அவள் எண்ணியிருந்தது போக, இப்படி ஓர் அசிங்க யோசனையை அவளாகவே முன்வந்து கூறியிருக்கிறாள் என்றால் சுமித்ராவுக்குத் தாங்க முடியவில்லை.

அவமானத்தால் முகம் கன்றிப் போயிற்று.

அவன் பார்வை அவளிடமே இருந்தது.

"உன்னிடம் அவள் நடந்தது ஒன்றுமே சொல்லவில்லை போல் தெரிகிறது." என்றான் சதானந்தன் இரங்கிய குரலில்.

அவனுடைய இரக்கத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் நிமிர்ந்தாள் அவள்.

"அவள் சின்னப் பெண். ஏதோ அசட்டுத் துணிச்சலில்.. ஆனால் நீங்களும் சரியென்று ஒப்புக் கொண்டுதானே இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தேன். எங்கேயோ யாரோ முதலாளியுடன் சென்று சம்பாதித்தாள் என்றால், எல்லோரும் அதே போல் என்று எண்ணி விடுவதா? கொஞ்சம் அரள வைக்க வேண்டும் என்று நினைத்தேன்....." என்றவன், சிறுசிரிப்புடன், " அதற்குள் கண்ணகி போல நீ வந்து விட்டாய்!" என்று முடித்தான்.

மேலே எதையோ நினைத்து அவன் சிரித்தான்.

எதையோ என்ன?

அன்று சுமித்ரா மிரட்ட முயன்றதைத்தான் எண்ணிச் சிரிப்பு வந்திருக்கும்.

"அக்காவும் தங்கையுமாக என்னை வடிகட்டிய வில்லனாக்கிப் பேசியது வேடிக்கையாக இருந்தது!" என்று வாய்விட்டே சிரித்தான் அவன்.

உதட்டைக் கடித்துக்கொண்டு பென்சிலையும் நோட்டுப் புத்தகத்தையும் மீண்டும் கையில் எடுத்தாள் அவள்.

பயணம் திட்டமிட்டபடி நடந்தேற, கடைசி இரண்டு நாட்களையும் பொழுது போக்குக்கென ஒதுக்கி இருந்தான் சதானந்தன்.

அவரவர் விருப்பம்போல் பிரிந்து சென்றுவிட, ஊட்டியின் எழிலையெல்லாம் தானே சுமித்ராவுக்குச் சுற்றிக் காட்டினான்.



வண்ண வண்ண மலர்களையும் வானளாவிய மரங்களையும் காணக்காண வெகு காலத்திற்குப் பின் மனம் மிகவும் லேசாகி விட்டாற் போல இருந்தது சுமித்ராவுக்கு.

மாலை வரை சுற்றிவிட்டு ஓட்டலுக்குத் திரும்பி உணவெல்லாம் முடித்த பிறகு, 'சற்றுப் பேச வேண்டும்,' என்று சுமித்ராவைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான் சதானந்தன்.

வழக்கத்துக்கு விரோதமாய் அவனிடம் காணப்பட்ட அமைதியின்மை அவளுக்கு ஆச்சரியத்தை ஊட்டியது.

## 6

அந்தக் காரிடாரின் கோடியில் இருந்தது சதானந்தனின் அறை.

உட்காரும் அறை, படுக்கை அறை, சிட் அவுட் எல்லாம் கொண்ட சூட்.

சோபாவில் அவளை அமரச் சொன்னவன் தானும் உட்காருவான் என்று எதிர்பார்த்தாள் சுமித்ரா.

ஆனால் அவனோ பக்கத்து மேசை மேல் இருந்த பழத் தட்டில் ஆப்பிளையும் ஆரஞ்சையும் இடம் மாற்றி வைத்தான்.

பூக்குவளையில் கொத்து மலர்களில் ஒன்றைப் பிய்த்துப் போட்டான்.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு சன்னல் அருகே சென்று வெளியே பார்த்தான்.

ஊட்டி வண்ணமயமான அழகிய ஊர்தான். ஆனால் இருள் குவிந்துவிட்ட இந்த நேரத்தில் எதைப் பார்க்க முடியும்?

இந்த ஆறு நாட்களாகப் பார்த்த அளவில் சதானந்தனுடைய அசைவுகள் எல்லாம் அளவோடும் நிதானத்தோடும் காரணத்தோடும் இருந்ததை அவள் கண்டிருந்தாள்.

ஒரொருவர் போல் அனாவசியமாய்க் கை கால்களை ஆட்டுவதோ, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வதோ, அலட்டிக் கொள்வதோ எதுவும் இராது.

வேகம் இருந்தால் அது சீராக ஒரு கட்டுப்பாட்டுடன் கூடியதாக இருக்கும்.

ஒரு கண்ணசைவில் கூட அர்த்தம் இருக்கும்.

ஆனால் பழங்களை இடம்மாற்றி வைப்பதிலும் அழகாய் அடுக்கி வைத்திருந்த பூவைப் பிய்ப்பதிலும் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

ஒருவேளை...

"மற்ற டைரக்டர்கள் உங்கள் விருப்பத்தை ஒத்துக் கொள்ளவில்லையா, சார்?" என்று சந்தேகத்தைக் கேட்டு விட்டாள் சுமித்ரா.

"இப்போதைக்கு அவரவர் எண்ணங்கள் அவரவரோடு தான். இதையெல்லாம் மொத்த மதிப்பீடு செய்து முடிவு எடுப்பதற்கு நாளாகும்," என்றான் அவன் திரும்பாமலே.



"முடிவு செய்த பின் எனக்குத் தெரிவிப்பீர்களா, சார்?" என்று ஆர்வத்துடன் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

திரும்பி அவளைப் பார்த்தபடி சிகரெட்டை ஆழ்ந்து இழுத்து விட்டான் அவன்.

பிறகு, "அதை என்னிடமிருந்து அறியும் முதல் ஆள் நீயாகத்தான் இருப்பாய்," என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

ஆச்சரியமாக இருந்தாலும், காட்டிக்கொள்ளாமல், "நன்றி சார்!" என்று முறுவல் செய்தாள் அவள்.

அவன் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

சிறு மவுனத்தின் பின், "ஏதும் புதிதாக யோசனைகள் தோன்றியிருக்கிறதா, சார்? குறிப்பு எடுக்க வேண்டுமா?" என்று விசாரித்தாள் சுமித்ரா.

திரும்பி வந்து சிகரெட்டை ஆஷ் டிரேயில் அணைத்துப் போட்டுவிட்டு, அவள் எதிரே அமர்ந்தான் சதானந்தன்.

"உன் தங்கை கேட்டது இரண்டாயிரம் ரூபாய். இப்போது... இந்தப் பணம் போதாது இல்லையா? மீதியையும் நானே தரட்டுமா?" என்று மெதுவான குரலில் கேட்டான் அவன்.

தர்மமா?

அதை ஏற்க மனமின்றி, "வேண்டாம், சார்," என்றாள் அவள்.

"பின்னே?"

"இன்னும் ஓர் ஆண்டு கஷ்டப்பட்டுச் சேமித்து..."

"அதுவரை சித்ரா பொறுப்பாளா?"

அவளது எண்ணத்தையே அவனும் எதிரொலித்தான்.

"அவளுக்கு அவ்வளவாகப் பொறுமை இருக்கும் போலத் தோன்றவில்லையே! எத்தனை நாள் உன்னால் அவளைக் காக்க முடியும்?"

"......."

"அடுத்த தடவை என்று ஒன்று வரும் இல்லையா? ஒரே ஒரு வயதுதான் வித்தியாசம் என்றாலும் அவளைப் பாதுகாக்கும் பொறுப்பை நீ முழுமையாகவே ஏற்றிருக்கிறாய். அதனால் அந்த மாதிரி நிலைமை வராமல் பார்த்துக் கொள்வதும் உன் பொறுப்புத்தான் இல்லையா?"

எப்படிப் பாதுகாப்பது என்று மனம் சோர்ந்தாள் சுமித்ரா.

"இதுபோலத் தேவைகள் வராதபடி வளத்தை அவளுக்குக் கொடுக்க உன்னால் முடியும். உன்னால் மட்டும்தான் முடியும்!" என்றான் அவன் தொடர்ந்து.

தங்கையிடம்கூட மனமார வெளிப்படையாக ஒத்துக் கொள்ளாததை அவனிடம் சொன்னாள் சுமித்ரா. "நானும் எவ்வளவோ முயன்றுதான் பார்க்கிறேன், சார். ஆனால் வரவர சித்ராவைப் பற்றிக் கவலையாகத்தான் இருக்கிறது," என்றாள் சோர்வுடன்.

அவன் விசித்திரமாக அவளைப் பார்த்தான்.

"வேண்டுமென்றே புரிந்து கொள்ள மறுக்கிறாயா? அல்லது மனமில்லையா?"

அவள் ஒன்றும் புரியாமல் அவனை அகல விழித்துப் பார்த்தாள். "எ... என்னது சார்?"



"ஓ! மெய்யாகத்தான் உனக்குப் புரியவில்லை. ஆனால் ஏன்?" என்று ஒரு கணம் யோசித்துவிட்டு, "ஓ.கே. வெளிப்படையாகவே கேட்கிறேன். என்னை மணந்து கொள்கிறாயா?" என்று வினவினான் சதானந்தன்.

பிரமை தட்டினாற்போல அவனைப் பார்த்து விழித்தாள் சுமித்ரா.

அவன் வாயிலிருந்து வரக்கூடிய எத்தனை எத்தனையோ விஷயங்களில் இந்த வார்த்தைகளை அவள் மிகவும் அத்தமான கற்பனையில்கூட எதிர்பார்க்கவில்லை.

ஆகவே இதை முழுமையாக மனதில் வாங்கிக்கொள்ளவும் முடியாமல் அதற்கென்று ஒரு பதிலைச் சொல்லவும் தோன்றாமல் விழித்த கண் விழித்தாற் போல அப்படியே அமர்ந்திருந்தாள்.

அவ்வளவு நேரம் இயல்புக்கு மாறான ஓர் இறுக்கத்துடன் இருந்த அவன், அவளது பிரமிப்பைக் காணவும், சட்டென இலகுத் தன்மைக்குத் திரும்பினான்.

புன்னகை மலரக் கையை நீட்டி அவள் முன்னே சொடக்குப் போட்டான்.

அவள் இமை தட்டி விழித்து அவனை ஏறிட்டுப் பார்க்கவும் இளநகையுடன், "இன்னமும் உலகம் சுற்றிக் கொண்டுதான் இருக்கிறதாம், சுமித்ரா!" என்றான்.

பதிலாக ஒரு முறுவலில் உதடுகள் வளைந்த போதும் கண்களில்பிரமிப்புடனேயே, "நம்பவே முடியவில்லை சார்," என்றாள் அவள்.

"உலகம் சுற்றுவதையா? நம்பித்தான் ஆக வேண்டும் சுமித்ரா. இல்லாவிட்டால் பகல், இரவு எல்லாம் எப்படி வரும், சொல்லு." என்று சீரியஸ் போல் அவன் பேசவும் அவள் சிரித்தாள்.

வேடிக்கையாகப் பேசிய போதும் அவன் பார்வை தன் முகத்தில் பதிந்து இருப்பதைக் காணவும் அவள் சிரிப்பை நிறுத்தி, "ஏன் சார்?" என்று ஆச்சரியமாகவே கேட்டாள்.

ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அதை அடக்கிச் சில கணங்கள் பேசாமல் இருந்தான்.

பிறகு சொன்னான், "உன்னிடம் சில - ஏன், எல்லாமே எனக்குப் பிடித்திருக்கின்றன. கடமைக்காக உயிரைவிடத் தயாராக இருக்கிறாய். துன்பத்தைக் கண்டு மலைத்து விடாமல் பொறுப்பேற்று நடத்துகிறாய் உன் சக்தியை மீறிப்போகிற போதும் ஏதோ நடக்கட்டும் என்று இராமல் உன்னால் ஆன முயற்சி யெல்லாம் செய்கிறாய். மானம் பெரிதென்று போற்றுகின்றாய். செய்வதைத் திருந்தச் செய்கிறாய். இந்தக் குணங்கள் எல்லாம்.."

"குணங்கள் எல்லாம்?"

"இந்தக் குணங்கள் என் குழந்தைகளுக்கு அமைய வேண்டும் என்று விரும்புகிறேன்."

மீண்டும் அதிர்ந்தாள் அவள்.

"என்னுடைய அழகு நிறத்தோடு உன்னுடையதும் இணைந்து அமையும் நம் குழந்தை எவ்வளவு அழகாய் இருக்கும்! அதைக்கொண்டு உலகத்தையே ஆட்டிப்படைத்து விடலாம்!"



கருநிறப் பென்சில் மீசையின் கீழ் செக்கச் சிவந்த ஒரு ஜோடி உதடுகள் அன்று கூறியது இன்று போலக் காதில் கேட்டது.

இவன் தன் குழந்தையிடம் குணத்தை வேண்டுகிறானே.

சட்டென அவள் விழிகள் நீரால் நிறைந்தன.

"ஏன் சுமி?"

சுமியென்ற அந்த அழைப்பில் ஒரேயடியாய் நெகிழ்ந்தாள் அவள்.

"நான்... நான் ஒருவரை.. ஒருவர் என்னை விரும்பினார். நானும் அவரைத்தான் மணந்து கொள்ளப் போவதாக நினைத்தேன். ஆனால் சித்ராவை உதறிவிட்டு வரும்படி கூறினார். அது முடியாது என்ற போது...." அப்போதும் அவளுக்குத் தொண்டை அடைத்தது.

"என்ற போது...?" என்றான் அவன் சலனமற்று.

சமாளித்துக் கொண்டு, "என்னை உதறிவிட்டு வெளியூர் போய்விட்டார். வேறு பெண் காத்திருப்பதாகச் சொன்னார்..." என்று ஒருவாறு முடித்தாள்.

"ஒரு பெண்ணல்ல; பலர் க்யூவில் நிற்பார்கள்!" என்றான்.

"அதற்கும் என் கேள்விக்கும் என்ன தொடர்பு?" என்றான் அவன் பழைய குரலிலேயே.

விழியை அகல விழித்து விட்டுத் தலை குனிந்து, "அதற்கப்புறம் யாரையும் கணவன் என்று எண்ணிப் பார்க்கவே தோன்றவில்லை." என்றாள் அடங்கிய குரலில்.

"நண்பன் என்று?"

சட்டென நிமிர்ந்து பார்த்தபோது மீண்டும் அவள் விழிகளில் நீர் மல்கியது.

"ஷ்.... சுமித்ரா!" என்று லேசான கண்டிப்புடன் கைக்குட்டையை எடுத்து நீட்டினான் சதானந்தன்.

இவன் முன்னிலையில் ஏன் இப்படிக் கட்டுப்பாட்டை இழக்கிறேன் என்று எண்ணியபடியே அந்தக் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் சுமித்ரா.

அவள் சுதாரித்துக்கொள்ள இடம் கொடுத்துச் சற்று நேரம் பேசாதிருந்தான் அவன்.

பிறகு, "நான் இதை எதிர்பார்த்திருக்க வேண்டும்." என்றான் ஏதோ யோசனையாக.

"ஏ.. ஏன்?"

"உன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் அனைத்துமே முழுக்க முழுக்க உன் தங்கையைத்தான் மையமாகக் கொண்டிருந்தன. இந்த வயதில் ஒரு பெண், அதுவும் ஒரு புத்திசாலிப் பெண், தன்னைப்பற்றி நினைக்கவே இல்லையென்றால் அங்கே மனித இயல்பு மாறிப்போய் விடுகிறது இல்லையா? இந்த மாற்றத்துக்குக் காரணம் தேடியிருக்க வேண்டும் நான். போகட்டும்... ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்கிறாயா?" என்று வினவினான்.

தலையாட்டினாள் சுமித்ரா.

"தங்கையின் பொறுப்பை உதறிவிட்டு வரும்படி அவன் கூறியபோது ஒரு தரமேனும் அப்படிச் செய்யலாமா என்று தோன்றியதா?"



"சீச்சி..."

"ம்.." என்று அவள் கையைத் தன் கையால் ஏந்தி மேலும் கேட்டான். "இன்னொன்று, என்னிடம் ஏதும் வெறுப்புத் தோன்றவில்லையே?"

அவசரமாகத் தலையசைத்தாள் அவள்.

"ஓ. கே. இப்போது நாம் இருவரும் மணந்து கொள்வோம். முதலில் நண்பர்களாக இருப்போம். இயற்கையின் ரசவாத சக்தியைப் பிறகு பார்த்துக் கொள்வோம்."

அவன் சொல்லும்போது எல்லாமே நிரம்பவும் சாதாரணம் போலத் தோன்றியது அவளுக்கு.

ஆனால் பிற்பாடு வாழும் காலம் எத்தனை ஆண்டுகளோ?

அதைப்பற்றி அவசியமாக முடிவு எடுப்பது சரியாகுமா?

அவளது தயக்கத்தைக் கவனிக்காதவன் போல, "உன் தங்கையின் வாழ்விலும் அவளது விருப்பங்களை நிறைவேற்றலாம்," என்றான் அவன் மேலும்.

குதிரைக்குச் சாரட்டா?

உள்ளூரச் சிரிப்பு வந்தது அவளுக்கு.

அடக்கிக் கொண்டு, "எனக்குக் கொஞ்சம் யோசிக்க வேண்டும்," என்றாள்.

ஒரு கணம் அவளை ஊடுருவுவதுபோலப் பார்த்தான் அவன்.

பின்னர், "அது கொஞ்சம் கஷ்டமில்லையா?" என்றான் குரலில் கவலை தொனிக்க.

அவகாசமே இல்லாமல் என்ன அவசரம் என்று அவள் திகைக்க, "நான் யோசிப்பதைச் சொன்னேன்," என்றான் சதானந்தன்.

தொடர்ந்து, "அதற்கெல்லாம் மண்டைக்குள் கொஞ்சம் இருக்க வேண்டும். நீ என்னதான் செய்யப் போகிறாயோ என்று நினைத்தேன்," என்று அவன் இழுக்கவும் சிரிப்பு பிறிட்டது அவளுக்கு.

அவள் சிரிப்பதை ஒரு முறுவலுடன் பார்த்திருந்து விட்டு, "ஓகே, சுமித்ரா, நாளை கிளம்புகிறோம் இல்லையா? நாளை மறுநாள் இரவுவரை உனக்கு அவகாசம். என்வீட்டு நம்பர் தருகிறேன். இரவு, ஏழுமணிக்கு எனக்கு டெலிபோன் செய்து, உன் முடிவைச் சொல்லு," என்று முடித்தான் அவன்.

அவன் எளிதாகக் கூறிவிட்டான், இரண்டு நாட்களில் முடிவைச் சொல்லு என்று.

இவள் யோசிப்பதற்காக என்று வந்த வேலையை விட்டுத் தனியே ஒதுங்கி நிற்க முடியுமா?

மறுநாள் முழுவதும் உடன் பயணம் வந்தவர்கள் கூட்டத்தோடும் பயணத்திலுமாகக் கழிந்துவிடும்.

சென்னை சென்றாலோ ஒரு வாரத்திற்குப் பிறகு அங்கே வீடு. அலுவலகத்தில் எத்தனை பிரச்சினைகளோ?

எப்போது யோசிப்பது?

இதன் நன்மை தீமைகள் பின்விளைவுகளைப்பற்றி ஆற அமர இருந்து தீர யோசிக்காமல் எப்படி முடிவு எடுப்பது?



படுக்கையில் புரண்டுகொண்டே இருந்தவள் சட்டென எழுந்து அமர்ந்தாள்.

இப்போது நண்பர்களாக இருப்போம். பிறகு இயற்கையின் ரசவாதம் வேலை செய்யட்டும் என்று சுலபமாகச் சொல்லுகிறானே. ஒருவேளை அது வேலையே செய்யா விட்டால்?

அல்லது எதிர் மாறாக வேறு யாரோடேனும்... *சீச்சீ!* அப்படியெல்லாம் என் மனம் கட்டுப்பாடற்றுப் போகாது என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் சுமித்ரா.

மனோகரனுக்குப் பிறகு மற்றோர் ஆணைத் தன் மனம் அந்த மாதிரி ஏற்கும் என்ற எண்ணமே அவளுக்கு இல்லை.

ஆனால் அவன் - மனோகரன்தான் என்னவெல்லாம் நிபந்தனைகள் விதித்தான்.

'உன் வருமானத்தில் ஒரு பைசாவிடாமல் ஒட்டு மொத்தமாய் நம் குடும்பத்துக்கு மட்டும்தான் செலவாக வேண்டும்.'

'உன் தங்கையை அனாதை என்று ஹோமில் சேர்த்து விட வேண்டும்.'

'தங்கையின் படிப்புக்காக வாங்கிய கடனைத் தங்கைதான் அடைக்க வேண்டும்.' என்றெல்லாம் அவளை வேதனைப் படுத்திய எத்தனை நிபந்தனைகள்!

ஆனால் சதானந்தன் அப்படி அல்ல.

அவன் சொல்கிற மாதிரிச் சித்ராவுக்கு எவ்வளவோ செய்யலாம்தான்.

அவள் ஆசைப்படுகிற சைனா சில்க், நைலான் ஜார்ஜெட்...

ஆனால் அதற்காக மட்டும் சதானந்தனை மணப்பது என்றால் அது அவனை ஏய்ப்பது என்று ஆகாதா?

சதானந்தனைப்போல ஓர் ஆண் மகனுக்கு ஒரு நல்ல காதல் மனைவி வாய்ப்பதுதானே நியாயம்?

மனோகரனுக்கு மனதில் இடம் கொடுத்துவிட்டு, வெறும் வாழ்க்கை வளங்களுக்காக மட்டும் அவனை அவள் மணப்பது அநியாயம் ஆகாதா?

ஆனால் அவள் ஒன்றும் மனோகரனைப் பற்றிக் கூறாமல் மறைத்து வைக்கவில்லையே.

நன்மை தீமைகளும், நியாய அநியாயங்களும் அவள் மனதில் சக்கர வட்டமாடின. அலுத்துக் களைத்து வெகு நேரத்திற்குப் பிறகு ஒருவாறு தூங்கலானாள் சுமித்ரா.

மறுநாள் அவள் நினைத்தாற் போலவே கழிந்தது.

முன் தினத்துப் பேச்சு கனவோ என்பது போல அவன் ஜாடையாகக்கூட அதுபற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

ஒருவேளை, அவனுக்கே அது முட்டாள்தனம் என்று தோன்றிவிட்டதோ என்று நினைத்தபோது ஏனோ சிறுவேதனை உண்டாயிற்று அவளுக்கு.

திட்டப்படியே அதற்கு மறுநாள் சென்னையை அடைந்தார்கள்.

அவளை டாக்சியில் ஏற்றி, முகவரியை டிரைவரிடம் கூறி, டாக்சிக்குத் தேவைப்படக் கூடிய பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டுக் குனிந்து அவளைப் பார்த்தான் சதானந்தன்.



அவளை நோக்கி ஒரு முறுவல் செய்து, "மாலை ஏழு மணி," என்று மெல்லிய குரலில் கூறினான்.

கார் கதவைச் சாத்திவிட்டுப் பின்னே நகர்ந்து காரைச் செலுத்துமாறு டிரைவருக்குச் சைகை செய்தான்.

உதட்டைக் கடித்துக்கொண்டு சாலையை வெறித்தாள் சுமித்ரா.

# 7

வண்டி, எந்த வழியே செல்கிறது என்பதைக்கூட உணராமல் வீற்றிருந்தாள் சுமித்ரா.

இது போலச் செய்வது அறியாத திகைப்பை அவள் தன் வாழ்க்கையில் அன்றுவரை உணர்ந்ததே இல்லை.

மின்னாமல் முழங்காமல் தலையில் விழுந்த இடிபோலப் பெற்றோர் திடுமென மறைந்தபோதும் அவள் மலைத்துச் செய்கையற்று நிற்கவில்லை.

தங்கையா, நானா என்று மனோகரன் சிடுக்கிப் பிடி போட்டபோது விநாடித் தயக்கம்கூட உண்டாகவில்லை.

இப்போது மட்டும் ஏன் இந்தக் குழப்பம்?

கொஞ்சமும் உள்ளத்தைத் தொட்டுவிடாத சதானந்தனிடம் இல்லையென்று சொல்ல ஏன் இந்தத் தயக்கம்?

அவனும் ஒன்றும் கண்டதும் காதலில் உருகிக் கொண்டு இருக்கவில்லையே!

அன்றி மற்ற நலன்களைக் கருதிச் சம்மதிக்கலாம் என்றாலும் அது அவனுக்கு அநியாயம் ஆயிற்றே என்று இந்த மனச்சாட்சி ஏன் இப்படி இடித்து உரைக்க வேண்டும்?

கூடவே ஒரு சமாதானமும் தோன்றியது - மனோகரனைப் பற்றி அவள் சதானந்தனிடம் மறைக்கவில்லை. நல்லவேளை.

தான் குடியிருந்த சந்துக்குள் டாக்சி நுழைவது இயலாது என்று பெரிய தெருவிலேயே டாக்சியை நிறுத்தி இறங்கிக் கொண்டாள்.

கொண்டு போன பெட்டியோடு, சதானந்தன் எல்லோருக்குமாய் வாங்கிக் கொடுத்திருந்த பழக் கூடையையும் சிரமத்துடன் சுமந்தவாறு வீட்டை அடைந்த சுமித்ரா திகைத்தாள்.

இந்த நேரத்தில் வீட்டைப் பூட்டிக் கொண்டு சித்ரா எங்கே போனாள்? இந்தச் சித்திதான் எங்கே?

வீட்டுக்காரப் பாட்டியம்மாளைக் கேட்கலாம் என்றால் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள்.

தயக்கத்துடன் பொது வாயிலைப் பார்க்கையில் சித்ரா அவசரமாக ஓடிவருவது தெரிந்தது.

"அதற்குள் வந்துவிட்டாயா, அக்கா? நீ பஸ் பிடித்து வந்து சேர இன்னும் அரை மணி நேரமாவது ஆகும் என்று நினைத்தேன்" மற்றப்படி கதவை அவள் திறக்க இருவருமாய் உள்ளே சென்றனர்.



அடைத்துக் கிடந்த வீடாய் இறுக்கம் தெரிய, அவசரமாய் ஓடிச்சென்று ஜன்னலையும் திறந்தாள் தங்கை.

சுமித்ரா சென்றதிலிருந்தே அல்லது குறைந்த பட்சம் நாலு நாட்களாகவேனும் இங்கே சன்னல்கூடத் திறக்கப் படவில்லை.

ஏன்?

"என்ன விஷயம், சித்ரா?"

ஓர் இரக்க முறுவல் நெளிந்து மறையத் தோளைக் குலுக்கினாள் சித்ரா.

"இப்போதுதான் வந்து சேர்ந்திருக்கிறாய். முதலில் குளித்துவிடேன். பிறகுதான் இருக்கவே இருக்கிறது நமது ராமாயணம்" என்றாள் விட்டேற்றியாக.

ஏதோ, வேதனை தரக்கூடிய விஷயத்தைத் தங்கை தள்ளிப் போடுகிறாள் என்பது சுமித்ராவுக்குப் புரிந்தது.

ஒரு வேளை சித்தி...

ஆனால் வீட்டுக்காரப் பாட்டியின் வெறுப்புப் பார்வை நினைவுக்கு வந்து அந்த எண்ணத்தை அழித்தது.

பின் என்ன?

"என்ன விஷயம், சித்ரா? சும்மா சொல்லு. முதலில் சித்தி எங்கே?" என்று விடாப்பிடியாய் விசாரித்தாள்.

தமக்கையை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "மானங்கெட்ட ஜன்மங்களோடு வாழப் பிடிக்கவில்லையாம். ஊருக்குப் போய்விட்டார்கள்." என்றாள் தங்கை அசட்டையாக.

"என்னது?"

"ஆமாம். கண்டவனோடு ஒரு வாரம் ஊர் சுற்றி விட்டு வருகிறவர்கள் மானங் கெட்டவர்கள்தானே."

"நா... நானா?" என்றாள் சுமித்ரா மேலும் அதிர்ந்து.

"பின்னே? ஊரளவில் நீதான் மானத்தை விட்டவள் - உன் பாஷையில் சுவரை விற்றவள்!" என்று அலட்சியமாகவே கூறியவள் குனிந்து பழக்கூடையைத் திறந்து பார்த்தாள்.

"ஓ.. ஊட்டியிலிருந்தா?" என்று ஒரு வால்பேரிக்காயை எடுத்தவள் கழுவத் தண்ணீருக்காகச் சமையலறைப் பக்கம் பார்த்தாள்.

பிறகு மீண்டும் தோளைக் குலுக்கிவிட்டுக் கழுவாமலே ஒரு கடிகடித்து உண்ணலானாள்.

அதையெல்லாம் உணராமல், "ஊரளவிலா?" என்று மேலும் திகைத்தாள் சுமித்ரா.

தமக்கையின் வெளுத்த முகத்தைப் பார்த்ததும் சட்டென இளகி, "விட்டுத்தள்ளு, அக்கா. சித்திக்கு இவ்வளவு நாளில் ஒரு பால் மாடு வாங்கும் அளவுக்குப் பணம் சேர்ந்திராது? உதறிவிட்டுப் போவதற்கு ஒரு சாக்கு தேடிக்கொண்டு இருந்தார்கள். போய்விட்டார்கள். விடு." என்று தமக்கையைத் தேற்ற முயன்றாள்.

"நமக்கு ஒரு செலவு மிச்சம் என்று நினைத்துக் கொள்," என்று மேலும் சொன்னாள்.

"நான் வரும்போது வீட்டுக்காரப் பாட்டி முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள், சித்ரா," என்றாள் சுமித்ரா அடிபட்ட



குழந்தைபோல. "அப்படியென்றால் சித்தியின் பொய்யை அவர்கள் எல்லாம் நம்பியிருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்!" என்றாள் வேதனையோடு.

கனிவு காட்டி கண்டிப்பு செய்து புத்தி கூறி அடக்கி ஆறுதல் சொல்லி... என்று இப்படியெல்லாம் அறிந்திருந்த தமக்கை கலங்கவும் சித்ராவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. கையிலிருந்த வால்பேரியைப் பெட்டி மேல் போட்டுவிட்டு ஓடிவந்து சுமித்ராவின் தோளைக் கட்டிக் கொண்டாள்.

"*சீச்சீ!* என்னக்கா இது? இதுக்குப் போய் வருத்தப் படுகிறாயே. ஆதரவு இல்லாத ஏழைகளை ஆயிரம் சொல்லிப் பழிப்பது உலக இயல்பு; காலம் காலமாய் வந்த இயல்பு. அன்றைக்குப் பார், நீயும் இல்லாமல் பொழுதே போக வில்லையா? லைப்ரரிக்குப் போய்ப் பார்த்தேன். மகாபாரதத்தில் ஒரு பகுதி - விதுர நீதி என்று, அதில் கூட வருகிறது. ஒருவன் ஏழையாக இருந்தால் அவன் பிழையே செய்திராவிட்டாலும் ஊரில் உள்ள அத்தனை குற்றங்களையும் அவன்தான் செய்தான் என்றுதான் கூறுவார்களாம். யுகம் யுகமா நடக்கிற விஷயம் இன்று மட்டும் மாறிவிடுமா...? அந்த நிலைமையைத்தான் ஓரளவேனும் மாற்றலாம் என்று பார்த்தேன். நீ விடவில்லை." என்று ஆற்றத் தொடங்கி ஆதங்கத்தோடு முடித்தாள்.

"மாற்றி விடலாம்!" என்று வாய்க்குள்ளேயே முணு முணுத்தாள் மூத்தவள்.

"என்னக்கா? என்ன சொன்னாய்? என்று ஐயத்துடன் வினவிய தங்கையிடமிருந்து விலகி, "நீயும் சில தினங்களாக

இங்கே இருக்கவில்லைபோல் தெரிகிறதே? ஏன் எங்கே போயிருந்தாய்?'' என்று விசாரித்தாள்.

"வழக்கமான விவகாரம்தான். சித்தி கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்த வுடனேயே நம் நாராயண மாமாவின் பையன் அடுத்த பஸ்ஸிலேயே பட்டணம் பார்க்க வந்து விட்டான். சித்தி செய்த ரகளைக்குப் பின் இங்கே யாரைத் துணைக்கு அழைப்பது! பேசாமல் வீட்டைப் பூட்டிக் கொண்டு பரகு வீட்டுக்குப் போய்விட்டேன்."

"சரிதான்,'' என்று ஆமோதித்தாள் சுமித்ரா. "ஆனால் பரகுவின் அம்மாவிடம் என்ன சொன்னாய்?''

"உண்மையைத்தான்,'' என்றாள் சித்ரா அசட்டையாக

உடனே மாறி, "பரகு அம்மாவுக்கு மிகவும் வருத்தம் அக்கா. இரண்டு நல்ல பெண்கள் தன்னந் தனியாய் இந்தப் பாடுபடுகிறார்கள். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது இல்லாமல் இருக்கக்கூடாதா என்றார்கள். ஐந்து நாட்களும் எனக்கு ராஜ உபசாரம்தான். இந்த வீட்டுப் பக்கமே வரவிட வில்லை. அலுவலகம் சென்று வரக்கூடப் பரகுவைத் துணைக்கு அனுப்பினார்கள். இப்போதுகூடத் தெருக்கோடி வரை பரகு வந்தார். ஆனால்...'' என்று பெருமூச் செறிந்தாள்.

மறக்க விரும்புகிறவள் போலத் தலையைக் குலுக்கி விட்டுக்கொண்டு, "எதையோ மாற்றி விடலாம் என்றாயே, என்ன விஷயம்?'' என்று தன் பங்குக்கு விசாரித்தாள்.

"உட்கார், சொல்கிறேன்,'' என்றாள். சற்று நேரம் ஒன்றும் கூற முடியாமல் திகைத்தாள்.



தங்கையிடம் எந்த அளவுக்குச் சொல்லலாம்?

எல்லாமே சொல்வது என்றால், "எனக்காகத் தியாகமா? உறுதியில்லாமல் செய்யாதே,'' என்றெல்லாம் கூறக்கூடும்.

அதனால், "உனக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருக்கக் கூடும்...'' என்று தொடங்கி, சதானந்தன் மணந்து கொள்ள விரும்பியதை மட்டும் சொன்னாள்.

கடகடவென்று நகைத்தாள் சித்ரா.

"பரவாயில்லையே, அக்கா. 'கிங் சாலமனும் பிச்சைக்காரப் பெண்ணும்' கவிதை உனக்கு நினைவு இருக்கிறதா? ஆனால் இந்தக் காலத்தில்கூட அது நடக்கிறதா?'' என்று வேடிக்கையாய் வியந்தவள் சட்டெனக் கம்பீரமடைந்து, "ஆனால் குணத்தைப் பொறுத்தவரையில் நீதான் கிங் சாலமன், அக்கா!'' என்றாள் பெருமையாக.

தங்கையின் இந்தப் புகழ்ச்சி சுமித்ராவை வெகுவாக நெகிழ வைத்தது.

சித்ராவின் கையைப் பற்றி, "நாம் யாரிடமும் எதையும் பிச்சையெடுத்தது இல்லை, சித்ரா. ஆனால் அதை விடு. இனி உன்னுடைய அடக்கி வைத்த ஆசைகள் எல்லாமேகூட நிறைவேறப் போகின்றன. பின்னி பட்டும், மைசூர் கிரேப்பும் மட்டுமில்லை. காஞ்சிபுரம் கூட. இனி அந்த வீணா உன்னைப் பார்த்து வாயைப் பிளப்பாள், பார்!'' என்றாள் புன்னகையோடு.

ஒரு கணம் பதிலேதும் சொல்லாமல் பேசாதிருந்தாள் சித்ரா.

பிறகு, "வாழ்க்கைத் துணை என்று மதிப்பிடுகையில் மிஸ்டர் சதானந்தன் எப்படி, அக்கா? உனக்கு அலவரைப்

பிடித்திருக்கிறதா? அவர் உன்னை விரும்புவதில் அதிசயம் இல்லை. ஆனால் உன் மனம் எப்படி? எனக்காகத் தியாகம் செய்வதாக ஏதும் மடத்தனம் செய்து விடவில்லையே? உண்மையாகச் சொல். ஏனென்றால்... அவருடைய ஒழுக்கம் பற்றி..'' என்று தயங்கி நிறுத்தினாள்.

"அவர் மிகவும் நல்லவர், சித்ரா!'' என்றாள் சுமித்ரா அவசரமாக. "என்னைப் பொறுத்தவரை அவரை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!'' என்று எழுந்தாள் "நேரமாகி விட்டதே. வா. குளிப்பதற்குக் கொஞ்சமேனும் தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்ப்போம்,'' என்றவள் சமையலறைக்குள் சென்று வாளியை எடுத்தாள்.

ஒருவகையில் மனதுக்கு நிம்மதியாக இருந்தது.

இதுவா அதுவா, சரியா தப்பா என்ற அலைமோதல் எல்லாம் இனி இல்லை.

முடிவு எடுத்தாகி விட்டது.

இது பிற்பகல் வாழ்க்கைக்கு நன்மையா - தீமையா என்பதைக் காலம் முடிவு செய்யட்டும்.

அவளைப் பொறுத்தவரையில் முடிவு செய்தாகி விட்டது.

திடுமென இந்த முடிவை அவனிடம் சொல்ல மாலை மயங்கும் வரை காத்திருப்பானேன் என்று தோன்றியது.

குளித்து உடை மாற்றியதும், சித்ராவிடம், "நான் போய்க் காலை உணவுக்குக் கொஞ்சம் ரொட்டி வாங்கி வருகிறேன்,'' என்று கிளம்பினாள்.



"இந்தப் பழங்கள் போதாதா அக்கா?'' என்ற தங்கையின் கேள்விகளைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

பெரிய தெருவில் இருந்த டெலிஃபோன் பூத்தில் நுழைந்து நம்பர்களைச் சுழற்றி விட்டு எதிர்முனையில் அவனுக்காகக் காத்திருக்கையில்தான், ஒருவேளை அவன் மனம் மாறிவிடக் கூடாது என்று எண்ணத்தில்தான் அவசரப்படுகிறோமோ என்று தோன்றியது அவளுக்கு.

இந்த எண்ணம் தோன்றியதும் அதைத் தொடர்ந்து அவன் மனம் மாறியிருக்குமோ என்ற படபடப்பும் அப்படி மாறியிருந்தால் இந்த டெலிஃபோன் பேச்சு எவ்வளவு அவமானகரமான அசட்டுத்தனம் என்ற நினைவில், முகத்தில் கன்றலும் உண்டாயிற்று.

வைத்து விடலாம் என்று அவள் முடிவு செய்த நேரத்தில் எதிர் முனையில்: "ஹலோ சதானந்தன் ஹியர்.'' என்றது அவனது அழுத்தமான குரல்.

சற்றுமுன் தோன்றிய குழப்பங்கள் யாவும் காலைப் பனியாய் மறைய, அப்பாடி என்று சில கணங்கள் கண் மூடி நின்றாள் அவள்.

அதற்குள் 'ஹலோ ஹலோ' என்று பலமுறை படபடத்து விட்டான் அவன்.

கடைசி ஹலோவில் சிறு கோபம் தொனிக்கவும், வைத்துவிடுவானோ என்ற பயத்தில், "நான்.... நான் பேசுகிறேன்..'' என்றாள் அவள் அவசரமாக.

பெயரைச் சொல்லி நிதானமாய்ப் பேசாமல் பள்ளிச் சிறுமி போல என்ன பதற்றம் என்று தன்னையே கடிந்து கொண்டு

சுமித்ரா பேசுமுன், அவனே, "சுமித்ரா!" என்று இனம் கண்டு கேட்டான்.

ஆச்சரியப்படத்தான் செய்வான்.

மாலை ஏழுமணி வரை அவகாசம் என்றவனுக்கு ஒருமணி நேரத்துக்குள் அவள் குரலைக் கேட்க நேர்ந்தால் வேறு எப்படியிருக்கும்?

மரத்துப்போன நாவை வெகு சிரமப்பட்டுப் பணிய வைத்து அவள் பேசத் தொடங்குமுன், "என்னம்மா? என்ன விஷயம் உன் தங்கை சுகம்தானே?" என்றான் அவன் அக்கறையோடு.

"அவளுக்கு ஒன்றும் இல்லை. வந்து... வந்து... என்னை டெலிஃபோன் பண்ணச் சொன்னீங்களே. அது... தான்... நான்... நான் வந்து. அதாவது எனக்குச் சம்மதம்!"

திக்கித் திணறித் திண்டாடிய போதும் ஒருவாறு சொல்லி முடித்துப் பெருமூச்சு விட்டாள் சுமித்ரா.

ஆனால் அவன் பக்கமிருந்து சற்று நேரம் சத்தமே வராது போகவும், உடனே பயந்து போனாள். "வந்து... நீங்கள் அங்கேதானே..."

"ம்.. இருக்கிறேன். உன் பதிலில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி, ஒன்று செய்யலாம் சுமித்ரா. நீ இன்று அலுவலகம் செல்ல வேண்டாம். நான் ஒரு மணி நேரத்தில் அங்கே வந்து உன்னைச் சந்திக்கிறேன்... மற்றவை நேரில் பேசலாம்."

நேரிலா? அதற்குள்ளா? சட்டென அவள் உடல் சிலிர்த்தது.

"இல்லை. இல்லை... நான் இன்று அலுவலக..." டெலிஃபோனை வைத்துவிட்டு அவள் காற்றுடன்தான் பேசிக் கொண்டு இருந்தாள்.



"இந்தச் சந்துக்குள் அவன் கார் எப்படி நுழையுமாம்! திண்டாட்டம்" என்ற முனகியபோதும், அவன் வந்ததும் கொடுப்பதற்காக ஓர் எலுமிச்சம் பழமும் சர்க்கரையும் வாங்கி வந்து சாறு தயார் செய்து வைத்தாள்.

சித்ராவின் சிரிப்பைக் கவனியாதவள் போல், அவசர அவசரமாக அந்தச் சின்ன அறையைச் சுத்தம் செய்யலானாள்.

சிரித்தாலும் சித்ராவும் கூடச் சேர்ந்து உதவினாள்.

ஆனால் எவ்வளவுதான் ஒழுங்குபடுத்திய போதும் அந்த அறையை மேலும் சின்னதாக்கிக் கொண்டு, சதானந்தன் வந்து நின்ற போது முகம் சூடாகித்தான் போயிற்று.

முகம் சிவக்க அவள் நின்றபோது சித்ராதான் முன்னே சென்று சதானந்தனை வரவேற்றாள்.

"வாருங்கள், சார். ஆனால் எங்கள் மாளிகைக்குள் நுழையும் போது கொஞ்சம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் முன்னந் தலை புடைத்துக் கொள்ளும். ஜாக்கிரதையாக வாருங்கள். உட்காருங்கள்," என்று உபசரித்தாள்.

அவன் அமர்ந்ததும், தலையைச் சரித்து, "எனக்கு நன்றி சொல்ல வேண்டும்!" என்றான் கண்கள் பளிச்சிட.

"ஆயிரம் கோடி முறை!" என்றாள், அவளும் சிரித்தபடி...

சதானந்தனும் சித்ராவும் இலகுவாகப் பேசிச் சிரிப்பதை உள்ளூரப் பெரு வியப்புடன் கண்டாள் சுமித்ரா.

எப்படி முடிகிறது? வெட்கம், தயக்கம் ஒன்றும் வரவில்லையே!

முன்னே நடந்ததை மறப்பது அவ்வளவு சுலபமா? அப்படியானால் மனோகருடன் கைகோத்து உலாவுவதாக அவள் கனவு கண்டது எல்லாம் மறந்து போகக் கூடுமா?

சட்டென நெஞ்சு அடைக்க, அதை மறைப் பதற்காக ஜூஸை எடுத்துவரும் சாக்கில் உள்ளே சென்றாள் அவள்.

"அடுத்த ஞாயிறன்றே நல்ல நாள் தானாம். அன்றே திருமணத்தை வைத்துக் கொள்வோம். அதற்கடுத்த புதனன்று தாஜ் அல்லது சோழா போல எதிலாவது ரிசப்ஷனை நடத்திவிடலாம். கோவிலில் திருமணத்தை எளிமையாக நிறைவேற்றிவிட்டு வரவேற்பைப் பெரிய விருந்தாக வைத்துவிட்டால் சரியாகிவிடும். முதலில் உன் அலுவலகம் பற்றிச் சொல். அதன் எம்.டி.யுடன் பேசி உடனடியாக நீ வேலையை ரிசைன் பண்ண ஏற்பாடு செய்கிறேன். அப்புறம்.."

பெரிய பெரிய விஷயமென்று அவள் நினைத்தது எல்லாம் அவன் வாய் மூலம் வெளி வருகையில் வெகு எளிதாகத் தோன்றின.

பனிச் சறுக்கு விளையாட்டு இப்படித்தான் இருக்குமோ? அவ்வளவு உயரமான மலையிலிருந்து ஜில்லென்று இறங்குகிறார்களே! விளையாட்டுப் போலவேதான் என்று அவன் செய்தும் காட்டினான். இடையே அவளது விருப்பங்களுக்கு மதிப்பும் கொடுக்காமலில்லை.

மளமளவென்று அவன் திட்டமிடுகையில் அவளுக்கு உள்ளூர ஒன்று உறுத்தியது.



'சாவமனும் பிச்சைக்காரப் பெண்ணும்' கவிதையைச் சித்ரா நினைவுபடுத்தியது வேறு அதைப் பெரிது படுத்திற்று.

கிட்டத்தட்ட அது போலவேதானே- எல்லாம் அவனே செய்வது.

ஆனால் மாறு சொல்ல அவளுக்கு வக்கு ஏது?

ஆயினும் துணிந்து பாங்கில் இருந்த பணம் முழுவதோடு கையில் இருந்ததையும் சேர்த்துக் கவரில் வைத்து அவனிடம் நீட்டி, "வந்து.. தப்பாக நினைத்துக் கொள்ளக்கூடாது.." என்றாள்.

அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு வாங்கிக் கொண்டான் அவன்.

அவன் பேசாமல் வாங்கிக் கொண்டதே அவளுக்கு ஆச்சரியம்தான்.

ஆனால் மறுநாள் அவன் திருமணச் சேலையென்று மெல்லிசாக ஓர் இழைச் சரிகையுடன் அவளுக்கு ஒன்றும் அவளுடைய தங்கைக்கு ஒன்றுமாக இரு பட்டுச்சேலைகளைக் காட்டியபோது எல்லா உறுத்தல்களும் மறைந்து வானில் ஜில்லென்று பறப்பது போல உணர்ந்தாள்.

சரியாக இவள் கொடுத்த பணத்திற்குள் வாங்கி இருக்கிறானே!

தன் மனதைப் புரிந்து அதற்கு மதிப்பும் கொடுத்ததை எண்ணி வெகுவாய் மகிழ்ந்தாள்.

தன் நன்றியை அவனுக்குத் தெரிவித்துவிடும் ஆவலுடன் காரை ஓட்டிக் கொண்டு இருந்தவனிடம், "வந்து..." என்று தொடங்கினாள்.

குறுநகையுடன், "எங்கே?" என்றான் சதானந்தன்.

ஒரு கணம் திகைத்தபோதும், உடனே புரிந்து, லேசான கன்னச் சிவப்புடன், "வந்...ம்...மி...மிகவும் நன்றி!" என்றாள் சுமித்ரா.

அவனுடைய சிரிப்பு மேலும் விரிந்தது. "அது இருக்கட்டும். ஆனால் வந்து என்பதா என் பெயர்?" என்று கேட்டான் அவன்.

அவனுடைய சிரிப்பின் எதிரொலி அவள் முகத்திலும் மலர, "பின்னே எப்படி அழைப்பதாம்? மிஸ்டர் சதானந்தன் அவர்களே என்றா?" என்று வினவினாள் அவள்.

"கணவனை அதாவது இப்போதைக்கு வருங்காலக் கணவனை இப்படி நீட்டி முழக்கியா கூப்பிடுவார்கள்?"

தலையைச் சரித்து ஓரப் பார்வையுடன், "நாதா... என்றா?" என்று கீச்சுக் குரலில் கூறிச் சிரித்தாள் சுமித்ரா.

"பிராண நாதா என்பதாக ஞாபகம்!" என்று சிரித்தான் அவனும்.

பிறகு, "என் நண்பர்கள் என்னைச் 'சதா,' 'சது' என்று கூப்பிடுவார்கள். உனக்கு எது பிடிக்கிறது, சுமி?" என்று விசாரித்தான் அவன்.

நீ என் தோழர்களுக்குச் சமம் என்று சொல்லாமல் சொல்லிய விதம் அவளை மகிழ வைத்தது.

கூடவே அவனுடன் பழகத் தொடங்கிய பிறகு அதிகம் சிரிப்பது நினைவு வர, "ஆனந்த்!" என்றாள்.

அவன் முதலில் ஒன்றுமே சொல்லவில்லை.



அவனுக்குப் பெயர் பிடிக்கவில்லையோ, அதிக உரிமை எடுத்துக் கொண்டு விட்டோமோ என்று அவள் கலங்குகையில் காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான் அவன்.

திரும்பி அவள் கையைப் பற்றித் தன் உதடுகளில் லேசாக ஒற்றித் "தாங்க்யூ, டார்லிங்!" என்றான் மிருதுவாக.

காரணம் புரியாமல், கட்டுப்படுத்த முடியாமல், முகம் செக்கச் சிவந்து போயிற்று.

ரசனையுடன் நகைத்துவிட்டுக் காரை எடுத்தான் அவன்.

அவனுடைய பார்வை தன் முகத்திலிருந்து விலகிச் சாலையில் பதியவும் அப்பாடி என்று மூச்சுவிட்டாள் சுமித்ரா.

ஆனால், உடனேயே அன்று மாலையில் அவளைப் பார்க்க என்று தனது அன்னை வரப் போவதாகக் கூறி அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

"அம்மாவா!"

இவனுக்கு ஒரு தாயார் இருப்பதே அவளுக்குத் தெரியாதே.

அந்த அளவுக்கு அன்னியனான அவனுடன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

கணத்தில் கலங்கிப் போனாள் அவள்.

"பின்னே நான் என்ன முருகனா, என் அப்பாவின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறக்க? எல்லோரையும் போல நானும் அம்மா வயிற்றிலிருந்துதான் பிறந்தேனாம், தெரியுமா?"

கலக்கத்தை மீறி அவள் லேசாக முறுவல் செய்ய, 'ஸ்டியரிங் வீலில்' இருந்து கையை எடுத்து அவள் கையைப்

பற்றி அழுத்தி, "அம்மா மிகவும் நல்லவர்கள். உன்னிடம் மிகவும் பிரியமாக இருப்பார்கள், பாரேன்," என்று மென் குரலில் கூறியபோது அந்தக் கலக்கம் அடியோடு மறைந்தும் போயிற்று.

## 8

சதானந்தன் கூறியதுபோலவே அவனுடைய தாயார் நல்லவராகத் தோன்றினார்.

கணவர் மறைந்த பிறகு தன் நடவடிக்கைகள் அனைத்தையும் குறைத்துக் கொண்டு கணவர் அறையோடு ஒதுங்கிவிட்டாராம்.

எனவே வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அவருடைய தம்பியும் தம்பி மனைவியும் அந்த வீட்டிலேயே வசித்தனர்.

சதானந்தனோடு மூவரும் வந்தனர்.

சதானந்தன் முன்பே கூறியிருப்பான் போலும்.

எந்த விதமான சங்கடத்தையும் யாரும் காட்டிக் கொள்ளவில்லை.

"சீக்கிரமாக நீ வந்து எல்லாம் பழகிக் கொண்டாயென்றால் நாங்கள் ஏற்காடு சென்று விடுவோம்," என்று மெதுவான குரலில் இயம்பினார் தாயார்.



"ஏற்காடு! ஏற்காடுதான் அப்பாவின் அடித்தளம். அந்த எஸ்டேட் வருமானத்தைக் கொண்டுதான் மேலே தொழில்களையெல்லாம் தொடங்கினார். அம்மா திருமணம் ஆகிச் சென்ற இடம் ஏற்காடு என்பதால் அங்கே வசிப்பதில் அம்மாவுக்கு விருப்பம் அதிகம்," என்று விளக்கம் கூறினான் சதானந்தன்.

கோவைப் பயணம் போலவே சிம்பிளாக நடந்த திருமணம். பிரம்மாண்டமாய் நடந்த வரவேற்பு எல்லாமே எந்தவிதத் தட்டுத் தடங்கலும் இன்றி நன்றாகவே நடந்தேறின.

ஒவ்வொரு மாத வரவுக்கும் செலவுக்கும் சரிகட்டப் பட்ட பாடு அவ்வப்போது சுமித்ராவுக்கு நினைவு வந்தது.

ஒருவேளை பணம் மட்டும் வேண்டிய அளவு இருந்து விட்டால் எல்லாம் சுலபம்தானோ?

இருந்தால் கூட இவன் தனிதான் என்று உள்ளூர ஒரு குரல் கூறியது.

அதை உறுதிப்படுத்த எத்தனை! திருமணத்தை நடத்திய விதம் மட்டும் என்று இல்லை.

மற்றப்படியும், முதலில் நண்பர்களாகப் பழகுவோம் என்று அவன் முன்னரே கூறியிருந்தபடியே ஒரு சின்ன முறுவலுடன் "குட் நைட்" சொல்லிவிட்டுச் சென்றது.

வரவேற்பின் போது அறிமுகப்படுத்தப்பட்ட முகங்களையும் பெயர்களையும் அவள் நெட்டுருப் போட முயற்சித்தபோது, "இப்போது சிரமப்படாதே. பழக வேண்டியவர்களை அடுத்த முறை பார்க்கும் போது கவனப் படுத்திக் கொள்ளலாம்," என்று புன்னகை செய்தது.

முதுகுக்குப் பின்னால் நின்று, "என்ன வலை வீசினாளோ!" என்று யாரோ வம்பர்கள் பேசிய போது மாலை மறைவில் கையைப் பற்றி அழுத்தியது என்று எத்தனையோ.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பரசுவுக்கு ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்தது.

உள்ளூர மலர்ந்த உவகையுடன் சுற்றிலும் பார்த்தவளின் கண்களில் ஓர் இளம் பெண் - அழகானவள்.. அந்த இடத்திற்குப் பொருந்தாத சோகப் பார்வையுடன் தென்பட்டாள்.

இவளது பார்வையைச் சந்தித்ததும் ஒரு பெருமூச்சுடன் விலகிக் கொண்டாள்.

இது முதல் முறையல்ல.

அந்தப் பெண் வந்ததிலிருந்தே அங்கே இங்கே நின்று வருத்தம் காட்டுவதும் விலகுவதுமாகவேதான் இருந்தாள்.

சதானந்தனிடம் கேட்க எண்ணித் திரும்புகையில் சரிகைப் பட்டில் பொருத்தமான நகைகளுடன் ஜொலித்த தங்கையைக் காணவும் மற்றதை மறந்தே போனாள் அவள்.

கடந்து வந்த காலம் எப்படியோ, அவள் கூறியது போல இனி வரும் காலம் நல்லபடியாகவே நடக்கும் என்று தோன்றியது.

காற்று ஓய்ந்து அலையடங்கி அமைதியான குளம் போல நெஞ்சில் நிம்மதி பரவ இருந்தவளுக்கு முதல் அதிர்ச்சி அவளது தங்கையிடமிருந்து வந்தது.

ரிசப்ஷன் முடிவதற்காகவே காத்து இருந்தாற்போல மறுநாளே அவளுடைய மாமியார் பரபரத்து விட்டார்.



"தப்பாக நினைத்துக் கொள்ளாதேம்மா. எனக்கு அங்கேதான் நன்றாக மூச்சுவிட முடிகிறது. வீட்டுப் பொறுப்பை நீ எவ்வளவு சீக்கிரமாய் ஏற்றுக் கொள்கிறாயோ, அவ்வளவுக்கு எனக்குவிடுதலை. போ, செண்பகாவுடன் சென்று வீட்டு ரொட்டீனைக் கற்றுக் கொள்," என்று அனுப்பினார்.

மாலையானதும், "தம்பி வருகிற நேரம், போய் முகம் கழுவிச், சிங்காரித்துக் கொள்," என்று செண்பகம் கூறவும் தன் அறைக்குச் சென்று 'அட்டாச்டு பாத்ரூமில்' முகம் கழுவினாள் சுமித்ரா.

வெளியே வந்தபோது, சித்ரா முன்தினம் அணிந்திருந்த நகைகளையும் சரிகைச் சேலையையும் அடுக்கி வைப்பதைக் கண்டு முதல் முறையாக அதிர்ச்சியுற்றாள்.

"ஏன் சித்ரா, இதெல்லாம் இங்கே ஏன் கொணர்ந்தாய்? எல்லாம் உன்னுடையதுதான். உன் அறையில் அலமாரியில்...." என்றவளைச் சித்ரா இடைமறித்தாள்.

"இல்லை...." என்றாள் ஒற்றைச் சொல்லாக. ஆனால் உறுதியாக.

அந்த உறுதியில் கடைசிவரை நிற்கவும் செய்தாள்.

"இதையெல்லாம் நான் ஏற்க முடியாது, அக்கா. எனக்கு அந்தக் கம்ப்யூட்டர் கோர்சுக்கு மட்டும் கொஞ்சம் பணம் கடனாகக் கொடு. அதுவும் கடன்தான். மற்றப்படி, எதுவும் வேண்டாம்," என்றாள் பிடிவாதமாக.

சுமித்ரா எவ்வளவோ எடுத்துக் கூறியும், ஏன் - கெஞ்சிப் பார்த்தும்கூடச் சித்ரா அசைவதாக இல்லை.

"புரியவில்லையா, அக்கா? இதை யெல்லாம் நான் எடுத்துக் கொண்டால் இதற்காக உன்னை விற்பதுபோல் ஆகாதா? அதை நான் எப்படிச் சகிப்பது?" என்று தன் மறுப்புக்கு விளக்கமும் கூறினாள்.

பொறுக்கமாட்டாமல், "சில நாட்களுக்கு முன் எதற்கோ துணிந்தாயே!" என்று கேட்டு விட்டாள் தமக்கை.

முகம் கன்றியபோதும் சித்ரா அயர்ந்துவிடவில்லை.

"எனக்கு ஒன்று வேண்டும் என்கிறபோது அதன் விலையை, அது என்ன விலையென்றாலும், நானே கொடுப்பது சரிதான். ஆனால் உன்னைக் கொடுக்க வைப்பது எப்படி நியாயமாகும்? என்று அழுத்தம் திருத்தத்துடன் கேட்டாள்.

"விலையே இல்லையேடி! ஓர் ஆசையில் பிரியத்தில்..."

"அன்பை நகை துணிமணி தருவதில்தான் காட்ட முடியுமா? அதெல்லாம் இல்லாமல் உனக்கு என்னிடம் உயிர் என்று எனக்கு நன்றாகத் தெரியும் அக்கா. ஆனால் உயிர் வேறு, பணம் வேறு பார்!" என்று புன்னகை செய்தாள் சித்ரா.

"முன்னெல்லாம்...." என்று சுமித்ரா தொடங்குமுன் இடைமறித்து, "முன்னெல்லாம் நீ வெறுமனே என் அக்கா. மிசஸ் சதானந்தன் இல்லை, பார். அதனால் இத்தோடு இந்தப் பேச்சை விட்டுவிடு." என்று முடிக்க முயன்றாள்.

தங்கையின் ஆசைகளை நிறைவேற்றலாம் என்பதைப் பெரிதாகக் கருதித்தானே சுமித்ரா மிசஸ் சதானந்தன் ஆனது.

அதைக் காரணம் காட்டித் தங்கை மறுப்பது என்றால் சுமித்ராவால் முடியவில்லை.



வேதனையோடு, "உனக்காகத்தானே..." என்று தொடங்கியவள், உடன் சேர்ந்து ஒலித்த ஆண் குரலைக் கேட்டுப் பேச்சை நிறுத்தித் திரும்பிப் பார்த்தாள்.

சதானந்தன்!

சித்ராவிடம் தொடர்ந்து பேசியபடியே உள்ளே வந்தான் அவன்.

"உனக்கு ஏதேதோ செய்யவேண்டும் என்று நாங்கள் இருவருமாய் ஆயிரம் திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறோம்! நீ இந்த ஒரு சின்ன நகைசெட்டை வேண்டாம் என்றாயானால் எப்படி!" என்று லேசாகக் கடிந்தான்.

தன் பக்கம் துணை நின்று பேச ஆள் வந்ததென்பதைக் காட்டிலும், சதானந்தன் வழக்கம்போலத் தன்னைப் பார்த்துச் சிரியாததால் உண்டான உறுத்தலை அதிகமாக உணர்ந்தாள் சுமித்ரா.

ஏன் சிரிக்கவில்லை?

ஏதேனும் கோபமா?

கோபப்படும்படியாக அவள் என்ன தப்பு செய்திருக்கக் கூடும்!

ஒன்றுமே இல்லையே.

தலைவலி, அலுவலகத்தில் தொல்லை என்று இருந்தால் சித்ராவிடம் சாதாரணமாகப் பேசுகிறானே.

மண்டையைக் குடைந்தது அவளுக்கு.

"சரியில்லையே!" என்று தலையைச் சரித்துப் பார்த்தாள் சித்ரா.

"நாங்களும் அப்படித்தான் சொல்லுகிறோம்," என்று கூறிக் கட்டிலில் சாய்ந்து நின்ற மனைவியின் அருகில் சென்று அமர்ந்தான் சதானந்தன்.

புன்னகை பூத்தபடி, "திருமணமாகி ஒரு வாரம் முடியுமுன் மற்றவர்களைப் பற்றி நினைப்பதைச் சொன்னேன்!" என்றாள் சித்ரா.

"மற்றவர்களைத்தானே! நீ மற்றவர்கள் இல்லையே!" என்று பொருள் வைத்துப் பேசி மடக்கினான் அவன்.

அம்பேல் என்று கை உயர்த்திச் சிரித்தபோதும், உடனேயே, "மன்னித்துக் கொள்ளுங்கள் அத்தான். மற்ற எதுவும் எனக்கு வேண்டாம். அந்த ஃபீஸ் பணம் மட்டும் கடன் தாருங்கள் போதும்," என்று முடித்து விட்டாள் சித்ரா.

"இவ்வளவு பேசுகிறாயே, பரசுவுக்கு வேலை போட்டுக் கொடுத்தால் மட்டும் ஒத்துக் கொள்ளலாமாக்கும்?" என்று அவன் வழியிலேயே சென்று மடக்கப் பார்த்தான்.

"வேலைக்குச் சரியாகப் பரசு உழைப்பாரே.சரியாகச் சொல்வதென்றால் அவருடைய திறமைக்கும் உழைப்புக்கும் தகுதியான வேலை என்றால் உங்கள் பதவிகூடப் பலபடி குறைச்சல்தான்!" என்று ஒரு நிமிர்வுடன் பதில் கொடுத்தாள் சித்ரா.

"லக்கி பரசு!" என்று ஒரு புருவத்தை உயர்த்தி மனைவியைப் பார்த்தான் சதானந்தன்.



தங்கையைக் கேலி செய்வது போல வெளியே தோன்றினாலும் ஏதோ ஒரு வகையில் அவன் தன்னை மட்டம் தட்டுவது போல உணர்ந்தாள் சுமித்ரா.

சமாதான முயற்சியாக, "உங்களுக்குக் காபி டிபன் இங்கேயே எடுத்து வருகிறேன்," என்று கிளம்பினாள்.

"காபி அலுவலகத்திலேயே ஒரு பார்ட்டியுடன் குடிக்கும்படி ஆகிவிட்டது. டிபன் மட்டும் என் அறைக்குக் கொண்டுவா, போதும்," என்று தானும் எழுந்தான் அவன்.

அதுவரை பேசாமல் நின்ற சித்ரா, "நீங்களும் லக்கிதான் அத்தான்!" என்றாள் மெதுவாக.

திரும்பி மைத்துனியின் முகத்தைப் பார்த்த சதானந்தத்தின் பார்வை சட்டென மிருதுவாயிற்று.

புன்னகை செய்து, "மிகவும் புத்திசாலி!" என்று தொடங்கி, "உன் அக்காவைப் போல!" என்று சேர்த்துச் சொல்லி முடித்தான்.

சித்ராவின் முகம் பளிச்சென மலரவும் லேசாகத் தலையசைத்து விட்டுத் தன் அறைக்குச் சென்றான்.

ஆனால் இந்த மென்மையை அடியோடு துடைத்து விட்டாற் போல டிபனுடன் வந்த மனைவியிடம் கடுமை காட்டினான்.

"நீ உன் சகோதரிக்காக என்னை வேண்டா வெறுப்பாய் மணந்து கொண்டாய் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அதை ஊருக்கெல்லாம் பறைசாற்றித்தான் ஆகவேண்டும் என்ன கட்டாயம்?" என்றான் சீற்றத்துடன்.

அவனுக்கு என்ன கோபம் என்று சுமித்ராவுக்குப் புரிந்து விட்டது. தன்னை இழிவு படுத்தியதாக எண்ணி விட்டான்.

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை...." என்று அவள் விளக்கம் கூறத் தொடங்கியபோது, அதைக்கேட்க விரும்பாதவன்போல, அவன் இடைமறித்துப் பேசினான்.

"மற்றவர்களைப் பொறுத்தவரையில் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி மணந்தவர்கள். இதற்கு மாறான எந்தக் கருத்தும் யாருக்கும் ஏற்படுத்துவது எனக்குப் பிரியம் இல்லை. தயவுசெய்து இனிக் கவனித்து நடந்து கொள்." என்று கறாராகப் பேசியவன் மேலே பேச்சை விரும்பாதவன் போல வேகமாகத் தன் ஆபீஸ் அறைக்குச் சென்று விட்டான்.

சதானந்தனுடைய முதல் கடுமை தன்னை இவ்வளவு பாதிக்கக் கூடும் என்று சுமித்ரா எதிர்பார்க்கவே இல்லை.

ஆனால் அன்று முழுவதும் நெஞ்சில் பளு ஏறினாற் போலத் தவித்துப் போனாள்.

மறுநாள் காலையில் கணவன் இயல்பாகவே பேசிய பிறகு ஒருவாறு தேறி லேசாகப் போயிற்று.

இனிப் பேச்சில் வெகுவாய் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முடிவு எடுத்துக் கொண்டாள்.

ஆனால்...

அன்று மாலையில் சதானந்தன் பின்னேயே ஒரு பெண் வந்தாள்.

வேறு யாருமல்ல.



அந்த சோகப் பெண்.

வரவேற்பின் போது அங்கங்கே நின்று சோகம் காட்டியவள்.

பெயர் டாலி என்று அறிமுகப் படுத்திவிட்டு முகம் கழுவி வரவென்று மாடிக்குச் சென்றான் சதானந்தன்.

பாவம்! இவள் வாழ்வில் என்ன துன்பமோ என்று உள்ளுர இரங்கியபடி, "நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்? காபி டீ.... யா, குளிர் பானங்களா..." என்று ஓர் உபசரிக்கும் முறுவலோடு மென் குரலில் வினவினாள் சுமித்ரா.

சற்றும் எதிர்பாராத விதமாக, "ரொம்ப ஒன்றும் இளிக்க வேண்டாம்!" என்று முறைத்தாள் டாலி.

உடனேயே ஒரு பெருமூச்சுவிட்டு, "என் வாழ்க்கையையே 'பூ' என்று மெழுகுவத்தி அணைக்கிற மாதிரி ஊதி விட்டுச் சிரிப்பு வேறயா?" என்று மூக்கை உறிஞ்சினாள்.

ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று சுமித்ராவுக்கு.

ஆனால் அதற்கும் இடித்தாள் டாலி.

"ரொம்பத்தான் அழகாக இருக்கிறது என்று கண்ணை விரித்துக் காட்டுகிறாயாக்கும். சரியான ஆட்டு முழி மாதிரிதான் இருக்கிறது. எங்க சது என்ன இந்தக் கண்ணைப் பார்த்து ஆசைப்பட்டு விட்டார் என்றா நினைத்தாய்? நீ என்ன பெரிய பியூட்டியா? அதிலேயும் என்னைவிடப் பெரிய பியூட்டியா? என்னை நன்றாகப் பார்த்துச் சொல்லு." என்று சவால் விட்டாள்.

உடனேயே அவளாகவே பதிலும் சொன்னாள், "அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் ரொம்பப் பயப்படுவேன்.

வலின்னா ரொம்பப் பயப்படுவேன். வலிக்கும். அதனாலே பிள்ளையே பெத்துக்க மாட்டேன்னு சொன்னேனா? டபக்கென்று உன்னைப் போய்க் கட்டிக் கொண்டு விட்டார். மட்டி மாதிரி... சதுகூட அசடுதான். இல்லையா?" என்று அபிப்பிராயமும் கேட்டாள்.

அசட்டுத்தனமாக உளறுகிறாள் என்று முழுமையாகத் தள்ளிவிட முடியவில்லை சுமித்ராவுக்கு.

குழந்தைப் பேச்சுத்தானே சதானந்தன் முதலில் தொடங்கியதே. தன் குழந்தைக்குத் தைரியம் வேண்டும் என்றானே.

அத்தோடு, பிள்ளை வலியைப்பற்றிப் பேசும் அளவுக்கு இவர்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் இருந்திருக்கிறது!

அப்படியானால் இவள் சொல்வது மெய்யாக இருக்கக் கூடுமோ?

அப்படி இருந்திருந்தால் மனோகரனைப் பற்றி மறையாமல் அவள் சொன்னதுபோல அவனும் இந்த டாலி பற்றிச் சொல்லியிருக்கலாமே.

ஒருவேளை இந்த உறவு இன்னமும் முடியவில்லையா?

சேச்சே, அவர் ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை என்று தனக்குத் தானே உரைத்தபடி உட்காரும் அறைக்கு வந்தவளுக்கு மீண்டும் ஓர் அதிர்ச்சி.

சோபாவில் சதானந்தனுக்கு அருகில் - மிகவும் அருகில் - அமர்ந்து அவன் கரத்தில் மேல் கை வைத்துப் பேசிக் கொண்டிருந்தாள் டாலி.



சுள்ளென்று கோபம் வந்தது சுமித்ராவுக்கு.

தன்னை மீறி வந்துவிட்ட ஒரு வார்த்தைக்காக மற்றவர் அறியப் பறை சாற்ற வேண்டுமா என்று கண்டித்தானே. இந்தப் 'போல்' மட்டும் டமாரம் அடித்து அடுத்தவருக்கு அறிவிக்காதோ?

"சது. இந்த ஆண்டு கொடைக்கானல் வருவீர்களா? கட்டாயம் வாருங்கள். நாம் இருவரும் போன ஆண்டு மாதிரியே 'போட்டிங்' போகலாம். வாக்கிங் போகலாம். சரின்னு சொல்லுங்க சது..." சலுகையாகக் கொஞ்சுவதும் சுமித்ராவுக்கு நன்றாகவே கேட்டது.

என்ன தைரியமாய் உட்கார்ந்து குலாவிக் கொண்டு இருக்கிறார்கள்.

தகதகவென்று உலையாய் நெஞ்சு கொதித்தது அவளுக்கு.

அந்த மனநிலையில் அவர்கள் இருவரில் யாரிடமும் ஒருவார்த்தைகூடப் பேச மனமின்றித் திரும்பி நடந்து மாடிக்குத் தன் அறைக்குச் சென்றாள்.

எவ்வளவோ முயன்றும் மனது ஆற மறுத்தது.

ஏதோ நல்ல வேளையாகச் சித்ரா வெளியே சென்றிருந்தாள்.

அவள் மட்டும் காண நேர்ந்திருந்தால்...?

யாரேனும் பார்த்து விட்டால் என்கிற பயம்கூட இல்லையே.

அமைதியின்றிக் குறுக்கும் நெடுக்குமாய் அவள் நடந்து கொண்டிருந்த போது சரியான இலக்காகச் சதானந்தன் அவளைத் தேடி வந்து நின்றான்.

"டாலி கிளம்புகிறாள். வழியனுப்ப வராமல் இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?" என்று சிறு எரிச்சல் தொனிக்கக் கேட்டான்.

"ஏன் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் அவளால் கிளம்ப முடியாதாமா?" என்றாள். சுமித்ரா குத்தலாக.

"இது என்ன கேள்வி?" என்று புருவங்களை நெரித்தான் சதானந்தன்.

ஒரு கணம் உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு அசையாமல் நின்றாள் அவள்.

பிறகு, "நீங்கள் ஏன் டாலியை மணக்கவில்லை?" என்று நிதானமாகக் கேட்டாள்.

அவள் எதிர்பாராதவிதமாகச் சட்டெனச் சிரித்தான் அவன். "டாலியை மணப்பதா? ஒரு நகம் ஒடிந்தால் நாலுநாள் அழுவாள். அவளையாவது மணப்பதாவது..." என்று மேலும் நகைத்தான்.

சிரிப்பா?

சீற்றம் மிக, "அதனால்தான் ஆசைக்கு அவளை வைத்துக்கொண்டு, வாரிசுக்கு வேறு மணம் செய்தீர்களாக்கும்!" என்று கேட்டுவிட்டாள்.

"உளறாதே!" என்று ஆத்திரமாய் அதட்டினான் அவன்.

"பின்னே! பேசுவது நான்தானே; உளறலாகத்தான் கேட்கும்!" என்று எகத்தாளமாகப் பேசியபோது அசம்பாவிதமாக, 'சது...' என்று உரக்க அழைத்தாள் டாலி.



"சீக்கிரமாய் வாருங்களேன். இல்லாவிட்டால் சினிமாவுக்கு லேட்டாகிவிடுமே..."

சுமித்ரா உதட்டை ஏளனமாக வளைத்துப் பார்வையால் வெட்ட, ஒருகணம் சதானந்தன் தயங்கி நின்றான்.

எதையோ சொல்ல வாயெடுத்தவன், "சது..." என்று குரல் மீண்டும் துரத்த, "சை!" என்று திரும்பிச் சென்றான்.

அவன் பதில் பேச வாயின்றிச் செல்வது நன்றாகவே தெரிந்தது.

ஆனால் வெற்றி பெற்ற உணர்வு அணுவளவும் தோன்றவில்லை.

மாறாகத் தொண்டையை அடைத்துக் கொண்டு கண்ணைக் கரித்தது.

## 9

அறையிலிருந்து வெளியேறுகையில் கதவைச் சத்தமின்றிச் சாத்திச்செல்வது, காரை எடுக்கையில் ஓசையின்றிக் கிளப்புவது எல்லாம் சதானந்தனுடைய பழக்கங்கள்.

ஆனால் அன்றைய ஆத்திரம் அதற்கெல்லாம் இடம் தரவில்லை போலும்.

அவன் கதவைச் சாத்துகையில் அறை அதிர்ந்தது.

மாடி இறங்குகையில் படி நடநடுத்தது.

'வீர்' என்று கார் சீறிக் கிளம்பிய சத்தம் மாடி வரை செவியைப் பிளந்தது.

தப்பும் செய்துவிட்டுக் கோபம் வேறா?

கடைசியில் சதானந்தனும் இவ்வளவுதானா?

ஆனால் அவளுக்கு இதெல்லாம் வேண்டியதுதான். நன்றாக வேண்டும்தான்.

மனோகரனிடம் சுடுபடவில்லையா?

ஒரு பூனைகூட சுடுபட்டால் பிறகு ஜாக்கிரதையாய் இருக்கிறது.

ஆறறிவு படைத்த அவளுக்கு மூளை வேலை செய்ய வில்லை.

மீண்டும் ஓர் ஆண்மகன் மனதைப் பாதிக்கும் படியாக விட்டு விட்டாள்.

தூக்கி வாரிப்போட நிமிர்ந்தாள் சமித்ரா.

மனதைப் பாதிப்பதா?

அவள் தன் தங்கைக்காக ஒரு கௌரவத்துக்காகக் கண்பார்த்தமாய் அவனை மணந்தாள்.

அவனோ தன் வருங்கால சந்ததியிடம் பல குணங்கள் வேண்டும் என்று அந்தத் தேவைக்காக அவளை மணந்து கொண்டான்.



இதற்கிடையில் மனதிற்கு எங்கே இடம் வந்தது?

அதெல்லாம் ஒன்றும் இல்லை.

சதானந்தன் நல்லவன் என்று நினைத்தாள்.

ஆனால் அவனும் எல்லா ஆண்களையும்போல, நான் ஆண்பிள்ளை, என் விருப்பம்போல் எல்லாம் நான் நடப்பேன் என்பதுபோல நடந்துகொண்டது ஆத்திரமாகவும், கையாலாகாத ஆத்திரம் அழுகையாகவும் உருவெடுத்து விட்டது.

அவ்வளவேதான்.

ஆனால் இந்த ஆத்திரம், கண்ணீருக்குக்கூட அவசியம் இல்லையோ என்று மனம் விரைவிலேயே சிந்திக்கத் தொடங்கிற்று.

ஒவ்வொன்றாக யோசித்துச் சதானந்தனை நியாயப் படுத்திற்று.

அவள் - அதுதான் டாலி - அவளாகவே அவன் அருகில் உட்கார்ந்திருக்கலாம்.

அவள்தானே சதானந்தனின் கரத்தைப் பற்றியிருந்தாள்!

அவளேதானே கொஞ்சினாள்.

அவள் கணவன் ஒரு வார்த்தை பதில் சொன்னானா?

... ஆனால், 'வாயை மூடு!' என்று டாலியை அதட்டவும் இல்லையே...

...ஒருவேளை... ச்சு.

அலுத்துப் போய் எழுந்த போதுதான் சூழ்ந்திருந்த இருட்டைச் சமித்ரா உணர்ந்தாள்.

விளக்கைப் போட்டுவிட்டுப் பார்த்தால் மணி எட்டு.

இவ்வளவு நேரம் எங்கே போனான்?

ஓ! அவள் சொன்ன சினிமாவா?

எளிமையாக எண்ணமிட முயன்றும் முடியவில்லை.

காரை அவ்வளவு கோபத்தில் வேகத்தில் ஓட்டிச் சென்றானே.

செல்ல வேண்டிய இடத்துக்கு எந்த வித ஆபத்தும் இல்லாமல் சென்று அடைந்திருப்பானா?

ஏதேனும் ஆபத்தில் சிக்கி அதனால்தான் இன்னமும் வரவில்லையா?

அல்லது சினிமாவேதானா - அவளுடன்?

நல்லவேளையாகப் பைத்தியம் பிடித்துவிடுமுன் சித்ரா வந்து சேர்ந்தாள்.

"அத்தான் தந்த பீஸ் பணம் கட்டி விட்டேன், அக்கா. அருகிலேயே ஒரு பெண்கள் ஹாஸ்டலில் இடமும் பார்த்து விட்டேன். இரண்டு நாட்களில் அங்கே சென்று விடுவேன்." என்று இயம்பினாள்.

"இங்கே இருந்து படிக்கக்கூடாதா சித்ரா? ரொம்பவும் பிரித்துப் பார்க்கிறாயே!" என்றாள் சுமித்ரா வருத்தமாக.

தமக்கையின் கையைப்பற்றி லேசாக முறுவல் செய்தாள் தங்கை. "எல்லாம் சுயநலம்தான் காரணம், அக்கா. இங்கேயே இருந்துவிடலாம். ஆனால் ஏ.சி. அறை, எடுத்ததற்கெல்லாம் கார்



என்று இந்த சுகங்கள் எல்லாம் பழகிப்போகும். ஆனால் பரசு வீட்டில் வாழத் தொடங்குகிறபோது இதெல்லாம் முடியுமா...? சுகங்களுக்குப் பழகி விட்டால் விடுவது சிரமமில்லையா? அதை விடப் பழகாமலே இருந்து கொள்வது நல்லது என்பது எனது முடிவு..." என்று விளக்கினாள்.

தங்கையைத் தன்னைவிடப் பெரியவளாக உணர்ந்தாள் சுமித்ரா.

கூடவே எவ்வளவு புத்திசாலி என் தங்கை என்று பெருமிதம் உண்டாயிற்று.

பரசு மெய்யாகவே 'லக்கி' தான்.

மெல்லத் தங்கையின் கூந்தலை ஒதுக்கி விட்டு, "சாப்பிட்டாயா?" என வினவினாள்.

"அதற்குத்தான் உன்னை அழைக்க வந்தேன். அத்தான் வருவதற்காகக் காத்திருக்க வேண்டாம் என்று நம்மைச் சாப்பிட்டு விடச் சொன்னார்கள், அத்தை."

"நீ போய்ச் சாப்பிடு. டிபன் அதிகம் சாப்பிட்டதில் எனக்கு வயிறு டொம் என்று இருக்கிறது!" என்று தங்கையை அனுப்பி வைத்தாள்.

ஏன் அனுப்பினோம் என்பது போல உடனேயே மனம் அலைபாயத் தொடங்கி விட்டது.

சற்று நேரம் சகித்தவள் முடியாமல் எழுந்து வெளியே வந்தாள்.

இலக்கின்றி நடந்தபோது யாருமே எதிர்ப்படவில்லை.

சித்ரா உணவு முடிந்து படுக்கப்போயிருப்பாளோ?

அங்கே இரண்டே அறைகளில் பெருமூச்சு விட்டால் கூட என்ன என்று ஓடியது நினைவு வந்தது.

இங்கே நாலு நாள் ஒரே வீட்டில் வசிப்பது கூடத் தெரியாமல் இருந்து விடலாம் போலும்.

எண்ணமிட்டபடியே நடந்தவள் ஹாலை அடைந்த போது டெலிஃபோன் ஒலித்தது கேட்டது.

டெலிஃபோனை எடுக்க ஓடிவந்த வேலையாள், அவள் ரிசீவரை எடுக்கக் கண்டு திரும்பிச் சென்றான்.

"ஹலோ..." என்ற அவளது குரலுக்கு, "சதானந்தன் மனைவியா அம்மா? நான் டாலியின் அப்பா சொக்கேசர் பேசுகிறேன்," என்றது ஒரு கட்டைக் குரல்.

டாலியின் 'பெயர் மனதை உறுத்துகையில் அவரே தொடர்ந்தார். "இங்கே ஒரு சின்ன விபத்து நடந்து விட்டது. ..சதானந்த் ஜி ஹெச் சில், அதற்காக ஹலோ..."

எப்படி எப்போது டெலிஃபோனைக் கீழே வைத்தாள் என்பது சுமித்ராவுக்குத் தெரியாது.

டிரைவரை அழைத்தது, ஷெட்டிலிருந்து காரை எடுக்கச் சொன்னது, காரில் ஏறிக் கொண்டது எதுவுமே நினைவு இல்லை.

கார் கிளம்பும் சமயம் விசித்திரமாய்ப் பார்த்தபடி வந்த செண்பகம் அத்தையின் முகம் மட்டும் எப்படியோ மனதில் பட்டது.

மருத்துவமனையில் என்ன, எங்கே என்று விழி சுழலக் காரிடாரில் நின்று அவள் ஒரு கணம் திகைத்த போது ஒரு



டாக்டருடன் பேசியபடி சதானந்தனே எதிரில் வந்து கொண்டிருந்தான்.

சுமித்ராவின் பயந்த விழிகள் கணவனின் உடம்பில் ஒவ்வொரு அணுவையும் வெகு வேகமாய் ஆராய்ந்தன.

துணியில் கூட ஒரு சின்ன நலுங்கலைக் காண முடியவில்லை அவளால்.

பின்னே.

அதற்குள் மனைவியைக் கண்டு விட்டு சதானந்தனும் தன் பங்குக்குத் திகைத்து நின்றான்.

"நீ எங்கே இங்கே?" என்று வியப்புடன் வினவினான்.

உலர்ந்திருந்த உதடுகளைப் பிரயாசையுடன் பிரித்து, "நீங்கள்... உங்களுக்கு ... விபத்து, ஜி ஹெச். என்று டாலியின் அப்பா..." என்று தடுமாறியவள் நிறுத்தினாள்.

சதானந்தனுக்கு விபத்து என்று அவர் சொல்லவில்லையே!

"ஓ!" என்ற அவன் கண்கள் விசித்திரமாய்ப் பளபளத்தன.

அதற்குள், "உங்களுக்குத்தான் ஏதோ விபத்து என்று ஓடி வந்திருக்கிறார்கள், சதா. பாவம்! இவருக்கு ஒன்றும் இல்லை அம்மா. அது இவர் பார்க்க நடந்த வேறு ஒரு விபத்து. தெரிந்தவர் என்பதால் கூடவே வந்து, போலீஸ், அட்மிஷன்.. அதுதான் விபத்து என்றால் நிறைய விதி முறைகள் உண்டே. அதெல்லாம் ஏற்பாடு செய்யச் சதாவந்தார்..." என்று டாக்டர் விளக்கினார்.

ஒரு கணம் அரடு போல உணர்ந்தாள் சுமித்ரா.

உடனேயே இயல்பான இரக்கம் மேவிட, "உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே!" என்று கவலையுடனேயே விசாரித்தாள்.

"ஊகூம், அதெல்லாம் ஒன்றும் இல்லை. கையில் எலும்பு முறிந்து விட்டது. பிளாஸ்டர் போட்டாயிற்று. கூடி விடும். அப்போ நான் வரட்டுமா, சதா? வார்டுக்குப் போக வேண்டும். வருகிறேன் மிஸஸ் சதானந்தன்," என்று விடைபெற்றுச் சென்றார் டாக்டர்.

"சரியாக விவரம் கேட்டு வருவதற்கென்ன?" என்று கடிவாளோ என்று நினைத்தாள் சுமித்ரா.

அவனோ, "நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டான்.

இல்லை என்றதும், "நல்லது. நானும் இன்னும் சாப்பிட வில்லை. நாம் இருவருமாக வெளியே சாப்பிட்டுவிட்டு மெல்ல வீட்டுக்குப்போகலாம் வா. முதலில் டிரைவரை அனுப்பி விடலாம்," என்று அவன் கூறிய போதுதான் வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கிளம்பியது நினைவு வந்தது அவளுக்கு. தயக்கத்துடன் அவனிடம் சொன்னபோது அவனுக்கு ஏனோ சிரிப்புத்தான் வந்தது.

செண்பகத்திடம் விஷயத்தைச் சொல்லி, "வர நேரமாகும். காத்திருக்க வேண்டாம்," என்று கூறுமாறு பணித்து டிரைவரை அனுப்பி வைத்தான்.

பிறகு உணவுக்காக அவன் அழைத்துச் சென்ற ஓட்டலைப் பார்த்ததும் உடை மாற்றாமல் வந்தது உறுத்தியது அவளுக்கு.

அவள் தன் ஆடைகளை ஐயத்துடன் பார்ப்பதைக் கவனித்து, "நீ கட்டிக் கொண்டால் கண்டாங்கிச் சேலைகூடக்



காஞ்சிப் பட்டுதான்!" என்று கூசாமல் ஐஸ் வைத்தான் அவன்.

உள்ளே சென்றதும், "இந்த அரை வெளிச்சத்தில் உன் சேலை பருத்தியா, பட்டா என்று யாருக்குத் தெரியப்போகிறது. ஆனால் இதன் உள்ளே வந்ததாலேயே பட்டுதான். அதுவும் ஏதோ புதுமாதிரிப் பட்டு என்றுதான் எண்ணிக் கொள்வார்கள்!" என்று சிரிக்க வைத்தான்.

அதே சிரிப்பு நீடிக்கும்படியாகவும் பார்த்துக் கொண்டான்.

சாப்பிட்ட பிறகு சினிமாவுக்கு நேரமாகிவிட்டது என்று கடற்கரை ஓரமாய் டிரைவ் போனார்கள்.

அப்போது டாலியைப் பற்றிச் சொன்னான்.

மதுரை பார்ட்னருடைய கடைசி மகளாம்.

தந்தை தொழிலில் புதைந்து போனவர்.

தாயார் பெரிய சமூக சேவகி.

வெள்ளமா, தீயா, சம்மாவேயா - புவர்ஃபீடிங் அவர்தான், நாலுபேர் கை தட்டுவார்களே.

ஆனால் அவரது பிள்ளைகளுக்கு ஃபீடிங் வேலைக்காரர்தான்.

தவறு செய்தாலோ, அடம் பிடித்தாலோ திருத்த அவர்களுக்கு ஏது அதிகாரம்?

"நல்லது கெட்டது தெரியாமல், நடந்து கொள்ளும் விதம் அறியாமல், சிலசமயம் பார்க்க வெகு பரிதாபமாய் இருக்கும்," என்றான் சதானந்தன்.

விஷயம் தெரிந்த பிறகு அவளுக்கும் பரிதாபமாய்த்தான் இருந்தது.

மெதுவான குரலில் மாலைப் பேச்சுக்கு அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

அவன் அவளது கரத்தைப் பற்றி லேசாக ஒரு முறை அழுத்திவிட்டு, வேறு பேசத் தொடங்கினான்.

காற்று இல்லாத பவுர்ணமி இரவுகளில் சின்னச் சின்ன வெள்ளி முகடுகளாகக் கடல் ஜொலிப்பது..

அமாவாசை நாட்களில் கடல் நடுவே கட்டு மரங்களில் விளக்கொளி நகர்வது..

அந்தந்த நாட்களில் வந்து பார்க்கலாம் என்றான்.

கடைசியாக வீடு திரும்பும்போது ரொம்ப நாட்களுக்குப் பிறகு மனம் உல்லாசமாக இருந்தது அவளுக்கு.

ஈர உதடுகளில் புன்னகை பளபளக்கத் தன் அறைவாசலில் நின்று திரும்பி அவனுக்குக் "குட்நைட்" சொன்னாள்.

ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தி, "நம் திருமணத்துக்கு முன் குழந்தை பற்றி நான் சொன்னது நினைவு இருக்கிறது இல்லையா?" என்று வினவினான்.

மூச்சு தொண்டையில் சிக்கிக் கொள்ள, விழி அகல, அவனைப் பார்த்தாள் சுமித்ரா.

"நாம் இப்படியே வாழ்ந்தோமானால் அதற்கு வழியில்லை என்கிற அளவு உனக்கு விவரம் தெரியும் என்று நினைக்கிறேன்.."



இன்னமும் மூச்சு சீராக இயங்க மறுத்தது அவளுக்கு.

சிறுமுறுவலுடன், "முதல் ஸ்டெப் இன்று எடுத்து வைப்போமா?" என்றவன் குனிந்து அவளுடைய உதடுகளில் லேசாக முத்தமிட்டான்.

விலகி நின்று, "கஷ்டமாக இல்லை அல்லவா?" என்று சின்னச் சிரிப்புடன் கேட்டவன், அவளது கன்னத்தை லேசாக நிமிண்டிவிட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

எந்த வகையிலும் சற்றும் விளக்க முடியாத விதமாக அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் எதையோ இழப்பது போல உணர்ந்தாள் சுமித்ரா.

## 10

அடுத்த சில நாட்களில் அந்த வீட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டன.

முதலாவதாகச் சித்ரா ஒரு பெண்கள் ஹாஸ்டலுக்குப் பிடிவாதமாகச் சென்றுவிட்டாள்.

உன் அக்காவுக்குத் துணையாக இங்கேயே இரேன் என்று சதாசிவத்துடைய தாயார் கூடச் சொல்லிப் பார்த்தார்கள்.

சித்ரா தான் பிடித்த பிடியிலேயே நின்று விட்டாள்.

அவள் தந்த விளக்கத்திற்குப் பிறகு சுமித்ராவால் அவளை வற்புறுத்தவும் முடியவில்லை.

வற்புறுத்தினால் பலன் இருக்குமா என்பது வேறு விஷயம்.

அவள் சென்று நாலே நாட்களில் நாயகியும் செண்பகமும், சதானந்தனுடைய மாமாவும் கூட ஏற்காட்டுக்குக் கிளம்பி விட்டார்கள்.

“எங்களைவிடச் சிறப்பாகச் சுமி பார்த்துக் கொள்வாள்!” என்கிற கோரசுடன்.

“அவனுக்கு ஓய்வு கிடைக்கும்போதுஇழுத்துக் கொண்டு ஏற்காட்டுக்கு வா!” என்று மருமகளிடம் ஒரு தனிப் பேச்சோடு சென்றுவிட்டார்கள்.

ஒருவருமே இல்லாமல் பகல் பன்னிரண்டு மணி நேரம் எப்படித்தான் கழியப் போகிறதோ என்று முதலில் சுமித்ராவுக்குக் கவலைதான்.

ஆனால் சோம்பிக் கிடக்க நேரமே இல்லாமல்தான் ஒவ்வொரு நாளும் கழிந்தது.

காலையில் உடல் பயிற்சி போல நடந்து கொண்டே, தோட்டத்தைப் பார்வையிடுவது, பத்திரிகை படிப்பது, காலை உணவு என்று கணவனோடு கழிந்தது.

மதிய உணவைத் திட்டம் செய்வதோடு சிலதைத் தானே தயாரிப்பாள்.

இடையே வருகிறவர்களிடம் பேசி உபசரித்து அனுப்புவது, பூச்சாடிகளில் மலர் அடுக்குவது, பொது நிர்வாகம் என்று நேரம் நில்லாமல் சென்றது.



எல்லாவற்றையும்விட மாலைநேரம் - அத்தோடு வீடு வரும் அவளுடைய கணவன்.

இப்போது அவனை அவள் ஆனந்த் என்றே அழைக்கத் தொடங்கியிருந்தாள்.

அவனுடைய விருப்பப்படிதான்.

மாலையில் அவன் வரும் சமயம் அனேகமாக உறவினர், சிநேகிதர் என்று யாராவது வந்து போவார்கள்.

ஆனாலும் அவனோடு சேர்ந்து அமர்ந்து பேசும் போது அவளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

அதிலும் பேச்சோடு பேச்சாக ஒருவரை ஒருவர் கேலியாகக் காலை வாரும்போது மிகவும் உற்சாகமாக இருக்கும்.

யாரோ ஒரு நாள் அவளுக்குப் பாடத் தெரியுமா என்று கேட்டார்கள்.

“ம். ஒருநாள் அவள் பாடிய பிறகுதானே நம் கேட்டைப் பூட்டியே வைத்திருக்கிறோம்!” என்று சீரியஸாகச் சொன்னான் அவன்.

‘ஏன்?’ என்று எல்லோரும் திகைக்கவும், “நிறைய வெள்ளி மூக்குக் குதிரைகள் தங்கள் ஃபிரண்டைத் தேடி வந்துவிட்டன!” என்று சொல்லிச் சிரிக்க வைத்தான்.

அவன் ‘ஹும்’ செய்தால் அவள் திருப்பிவிடுவாள். ‘சலவைத் தொழிலாளி தன் சொத்தைத் தேடி வந்துவிடுவான்!’ என்று.

"போன தடவை இவள் செய்த பர்பியை வைத்து ஒரு சுவரையே கட்டிவிட்டோம்!" என்பான் அவன்.

"ஆமாமாம். இவர் தும்மியபோது விழுந்த சுவரை!" என்பாள் அவள்.

இப்படி ஏதோ ஒரு சிரிப்பு, ஒரு கேலி - பொழுது இனிமையாகவே கழியும்.

ஏதேனும் செமினார், கான்ஃபரன்ஸ் என்று சென்றாலும் கூட வந்து ஒரு பத்து நிமிடமாவது அதைப்பற்றி சுவாரசியமாக அவளிடம் சொல்லுவான்.

எல்லாவற்றுக்கும் மேலாக அந்த இரவு நேரம்.

அந்தச் சில விநாடிகளுக்காகவே அன்றையப்பொழுது விடிந்து கடந்து சென்றது போலத் தோன்றும் அவளுக்கு.

அந்த இதழ் அணைப்பு - அணைப்பு என்றுகூடச் சொல்லமுடியாது - இதழ் ஒற்றுதலுக்காகவே நாள் முழுவதும் உயிர் வாழ்வதுபோல உணர்ந்தாள்.

பின்னர் அவன் விட்டுப் பிரிந்து செல்லும்போது உயிரே போவது போல ஏக்கத்தை உணர்ந்தாலும், அந்த விநாடி கோடி கசும் பெறும் என்றே தோன்றியது.

இது ஏன் என்பது அவளுக்கும் புரியாமல் இல்லை.

ஒரு பெரும் மனப் போராட்டத்தின் பின்னர் தனக்குத் தானே அவள் ஒப்புக் கொண்டு விட்ட உண்மை.

சதானந்தனுடைய அணைப்புக்காக ஏங்கத் தொடங்கியதுமே தன் மனம் அவன் மேல் படர்ந்து விட்டதை அவள் உணரத் தொடங்கி விட்டாள்.



யோசித்துப் பார்த்தபோது...

அது அவனது உதடுகள் செய்த மாயம் என்று இல்லை என்பதும் தெரிய வந்தது.

முதன் முதலாகப் பார்த்தபோதே அவன் அவளைப் பாதிக்கத் தொடங்கியிருக்கிறான்.

மற்றப்படி முதல் முறையாகப் பார்க்கும் ஓர் அன்னியன் முன் தன் வசமிழந்து அவள் அழக்கூடுமா என்ன?

திருமணம் பற்றி அவன் பேசியதும் அவளுக்கு மறுக்க மனம் வரவே இல்லையே.

அவனை இழக்க மனம் வராமல்தானே.

பிறகு டாலியைப் பார்த்து என்னமாய் ஆத்திரம் - அல்ல பொறாமை வந்தது.

இன்னொரு பெண்ணை மணப்பேன் என்று சொன்ன போதும்கூட மனோகரன் மேல் ஆத்திரம் தோன்றவே இல்லையே.

அப்படியானால் மனோகரனிடம் அவளுக்கு இருந்தது காதலே இல்லைதானே?

ஓர் அழகிய வாலிபன் அத்தனை பெண்களிடையே தன்னை மட்டுமென்று நாடி வந்து நின்றதால் அந்தப் பெருமையோ?

பெற்றோரை இழந்து பெருஞ்சுமையைத் தாங்கி நின்றபோது பளுவைப் பகிர்ந்து கொள்வான் என்று எதிர்பார்த்ததால் வந்த இரக்கமோ?

இதையெல்லாம் காதல் என்று தவறாக எண்ணி விட்டாளே.

மற்றப்படி மனோகரைப் பற்றி ஞாபகம்கூட இத்தனை நாளாக அடியோடு மறந்துபோவது எப்படிச் சாத்தியம்?

அல்லது அவனை மீண்டும் பார்க்க நேர்ந்தால் மறுபடியும் மனம் மாறிவிடக்கூடுமா!

மாறாது என்று வெகுவாகத் தோன்றியபோதும் நூறு சதவீதமாய் நிச்சயமாய் இருக்க முடியவில்லை அவளால்.

இந்த நிலையில் தன் மனதைச் சதானந்தனிடம் முழுமையாய் வெளிப்படுத்த விரும்பவில்லை சுமித்ரா.

அத்தோடு சதானந்தனும் அவளிடம் காதலில் உருகுகிறவன் இல்லையே.

குழந்தை - அது இன்னின்ன குணங்களோடு வேண்டும் - என்பதுதானே அவனது லட்சியம்.

அவனே காதலிக்காதபோது இவளாகப் போய் நான் காதலிக்கிறேன் என்று எப்படி வெளிப்படுத்துவது!

சீச்சீ...அவமானம்.

காதலுக்கும் மான அவமானத்துக்கும் சம்பந்தமே கிடையாது என்று அறிந்திராததால் சுமித்ரா தன் நேசத்தைத் தன்னுள்ளேயே வைத்து ஏங்கிக் கொண்டு இருந்தாள்.

இந்நிலையில் ஒருநாள் இரவில் 'டீலர்ஸ் கான்ஃபரன்ஸ் இருப்பதால் திரும்பி வர வெகு நேரமாகும், காத்திராமல் உறங்கிவிடு,' என்று சொல்லிச் சென்றான் சதானந்தன்.



மெய்யாகவே அவன் வர வெகு தாமதம்தான் ஆயிற்று.

ஆனால் அவன் சொன்னதுபோல் உறங்கத்தான் அவளால் முடியவில்லை.

படுக்கவே தோன்றவில்லை.

அவனுடைய உதடு தொடாமல் எப்படித் தூங்கிப் போவது?

இவளால் முடியவில்லை.

கதைப் புத்தகத்தைப் படித்தும் பார்த்தாள்.

பிறகு மாடி வராந்தாவில் உலவலானாள்.

கடைசியாக அவன் ஒரு வழியாய் வந்து சேர்ந்த போது மணி பன்னிரண்டு.

காரை போர்டிகோவிலேயே நிறுத்திவிட்டுத் தன் சாவியைக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வேகமாக மாடியேறி வந்தவன் மேல் படியின் ஓரமாய் நின்றிருந்த மனைவியைக் கண்டதும் ஒருகணம் நின்றான்.

"கண் விழிக்க வேண்டாம்; உடம்பு கெட்டுவிடும் என்றேன், இல்லையா?" என்று லேசாகக் கடிந்தபடி மேலே ஏறிவந்து சேர்ந்தான்.

அவனோடு இணைந்து நடந்தபடி, தூக்கம் வரவில்லையே என்று முணுமுணுத்தவள், தன் அறையை அடைந்ததும் நின்று அவனுக்காக முகத்தைத் தூக்கி லேசாக அண்ணாந்தாள்.

ஒரு கணம் சலனமற்று அவளைப் பார்த்தான் சதானந்தன்.

மறுகணம் அவளை அணைத்து முத்த மழை பொழியலானான்.

அவனது அணைப்பு ஓரளவுக்கு மேலும் இறுகியபோது அவளிடம் ஒரு திகைப்பையும் தயக்கத்தையும் உணர்ந்து அவளை விடுவித்தான்,

'குட் நைட்' என்ற முணுமுணுப்புடன் வேகமாகத் தன் அறைக்குள் சென்று மறைந்தான்.

பிரமை தட்டினாற் போல வெகு நேரம் அப்படியே நின்றுவிட்டு மெல்லத் தன் கட்டிலில் போய் விழுந்தாள் சுமித்ரா.

காதல் செய்வது என்றால் இப்படித்தான் இருக்குமா?

காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக் கொள்வது போல! ஆனால் அறியாத தன்மையினால் ஒரு பயம் உண்டான போதும்கூட அவன் விலகிச் சென்றபோது தாங்க முடிய வில்லையே.

ஓர் உறுப்பையே பிரிப்பதுபோல என்ன வேதனை!

போகாதீர்கள் என்று வெட்கமின்றிச் சொல்வது எப்படி?

அவனிடம் அவளுக்குக் கோபம்கூட வந்தது.

அவளிடம் மட்டும் அவ்வளவு அளந்தானே. வெறும் முத்தங்களினால் மட்டும் பிள்ளை வராது என்று அவனுக்குத் தெரியாதா?

இருந்திருந்து அவள் யார்?

இவனுடைய மனைவிதானே!

அவளை அணைக்கும் உரிமை அவனுக்கு உண்டு தானே? தன் உரிமையை அவன் எடுத்துக் கொண்டால் அவனை யார் குறை சொல்ல முடியும்...?



தன் எண்ணம் செல்லும் விதத்தைக் கண்டு தனிமையில் கூட வெட்கத்தில் முகம் சிவந்து போயிற்று அவளுக்கு.

கூடவே வருத்தமும் உண்டாயிற்று.

அவளுக்கிருந்த வேகமும் வேட்கையும் அவனுக்கு இல்லையா?

இருந்திருந்தால் அவள் இவ்வளவு தவிக்கையில் அவனால் மட்டும் எப்படி விலகிச் செல்ல முடிந்தது?

ஒருவேளை மனதில் இருந்தது காதல் இல்லையோ என்று ஏக்கத்தோடு நினைத்தாள் சுமித்ரா.

இரவு தாமதமாய்த் தூங்கியது காலையில் அவள் விழிக்கையிலும் லேட்டாகி விட்டிருந்தது.

மடமடவென்று குளித்து விட்டு அவள் ஓடியபோது காலை உணவு உட்கொள்ளும் வேளையாகி விட்டது.

சாப்பாட்டு மேசை முன் ஒரு பத்திரிகையோடு அவள் வரவுக்காகச் சதானந்தன் காத்துக் கொண்டிருந்தான்.

அவசர அவசரமாக அவன் தட்டில் பரிமாறி விட்டுத் தனக்கும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு எதிரே அமர்ந்தாள்.

அவ்வளவு நேரம் ஓடு ஓடு என்று ஓடி முடித்து உட்கார்ந்தால் உணவு இறங்க மறுத்தது.

முன்நாள் இரவு நிகழ்ந்தது தவிர ஒன்றும் புத்தியில் தோன்ற மறுத்தது.

அவன் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறானோ என்று இருந்தது.

ஆனால் நிமிர்ந்து பார்க்க முடியாமல் கூச்சம் தடுக்கத்தலை குனிந்தபடியே தட்டில் அளைந்தாள் அவள்.

"இப்போது கொடைக்கானலில் 'செகண்ட் சீசன்' சமயம். நன்றாக இருக்கும். நாலு நாள் போய் வருவோமா?" என்று கேட்டான் அவன்.

இவனால் எப்படிச் சாதாரணமாய்ப் பேச முடிகிறது என்று யோசித்தபடி நிமிர்ந்து பாராமலே தலையசைத்தாள் சுமித்ரா.

உடனே ஒன்று தோன்ற, "ஓய்வு கிடைத்தால் அத்தை ஏற்காட்டுக்கு வரச் சொன்னார்களே!" என்று அவனுக்கு நினைவுபடுத்தினாள்.

"ஓய்வு என்று இல்லையே. மதுரையில் 'அக்கவுண்ட்ஸ்' பார்க்க வேண்டும். கொடைக்கானலுக்கு ஃபைல்களைக் கொண்டு வரச் சொல்லி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் தட்டலாம்... அங்கே இந்த சீசனில் தேனிலவுக்கு என்று நிறையப் பேர் வருவார்கள்." என்று சேர்த்துச் சொன்னான் அவன்.

இரண்டாவது மாங்காய் என்னவென்று கோடிட்டுக் காட்டுகிறான்.

அவள் நிமிராத போதும் காதுமடல் வரை சிவப்பதைக் காணவும் அவன் முகம் மலர்ந்தது.

கோடை செல்லும் வழியில் மதுரையில் சொக்கேசர் வீட்டுக்குச் சென்றனர்.

வேலையாட்கள் சூழ டாலி தனியாக இருப்பதைக் காண மனம் இரங்கியது சுமித்ராவுக்கு.



பாவாடை பறக்க ஒரு சுற்றுச் சுற்றி அவள் நிற்கவும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டு இருந்த வேலையாட்கள் எல்லோரும் கை தட்டினார்கள்.

"ரொம்பவும் பிரமாதம், சின்னம்மா!" என்றாள் ஒரு கெட்டிக்காரச் சிறுமி.

"ஏய், கை தட்டினவர்கள் எல்லோரும் வரிசையாக வாங்க. இந்தாங்க. ஆளுக்கு இரண்டு சாக்லேட், பத்துக் குட்டி, என் டான்ஸ் பிரமாதம் என்றாயில்லையா? உனக்கு நாலு, இந்தா." என்று பட்டுவாடா செய்தாள் டாலி.

ஓரக் கண்ணால் கணவன் முகத்தைப் பார்த்தாள் சுமித்ரா.

அவன் முகம் இறுகியிருந்தது.

"சோமு, ஹாலில் என்னடா கூட்டம்? ஒருவருக்கும் வேலை கீலை இல்லை?" என்று அவன் அதட்டவும் அத்தனை பேரும் விநாடியில் மாயமாயினர்.

ஒரு சாக்லேட்டைப் பிரித்துத் தன் வாயில் திணித்துக் கொண்டிருந்த டாலி சதானந்தனைக் கண்டதும் மலர்ந்து ஓடி வந்தாள்.

அவனது இரு கரங்களையும் பற்றி, "என்னைப் பார்க்கத்தானே வந்தீர்கள், சதூ?" என்று சாக்லேட்டைக் கன்னத்தில் ஒதுக்கிக் கொண்டு கொஞ்சிப் பேசினாள்.

முன்பு கொதித்திருப்பாள். இப்போது சுமித்ராவுக்குப் பரிதாபம்தான் தோன்றியது.

சதானந்தனுடைய விரலில் அணிந்திருந்த கார்னட் மோதிரத்தைத் திருப்பியபடி, "உங்களுக்குத் தெரியுமா, சது.

சாயங்காலம் கலெக்டர் மகள் டான்ஸ் கச்சேரியாம். அதற்கு ஏற்பாடு செய்ய அம்மா இப்போதே அங்கு ஆஜர். நான் ஆடிக் காட்டினால் பார்க்க நேரம் இல்லையாம்!'' என்று உதட்டைப் பிதுக்கினான் டாலி.

சுமித்ராவைப் பார்த்து ஒரு தரம் தலையை வெட்டிக் கொண்டாள்.

"இவளை வேறு ஏன் கூட்டி வந்தீர்கள், சதூ?'' என்று எம்பி அவன் காதில் தெளிவாகக் கிசுகிசுத்தாள்.

எதையும் கவனியதவள்போல, "ஆடும்போது அழகாக "பாலன்ஸ்" பண்ணினாயே டாலி, ரொம்ப நாளாய் டான்ஸ் படித்தாயா?'' மெச்சுவதுபோலக் காட்டி விசாரித்தாள் சுமித்ரா.

ஸ்விட்சைப் போட்டாற்போல டாலியின் முகம் மலர்ந்தது. "நிஜமாகவா? நீ உண்மையாகத்தானே சொல்கிறாய்? ஆனால் இந்த அம்மாவைப் பாரேன். 'உனக்கு டான்சே வராது!' என்று டீச்சரை நிறுத்தி விட்டார்கள். திட்டினார்கள் தெரியுமா? உனக்குப் படிப்பும் வரவில்லை. பாட்டு டான்ஸ் எதுவும் வரவில்லை, சரியான மக்கு என்றார்கள். பேப்பர் திருத்துகிறவன் மார்க் போடாவிட்டால் நான் என்ன செய்யட்டும்?'' என்று சுமித்ராவிடம் நியாயம் கேட்டாள்.

அவள் பதில் கூறுமுன், "அய்யோ! யாரும் வந்தால் கூல்டிரிங்ஸ் கொடுக்கணும் என்று அம்மா சொல்லி... மங்களம்! ஏய் மங்களம்..!'' என்று கூவி அழைத்தபடி உள்ளே சென்று மறைந்தாள்.

"குளிர்பானம் சொல்லச் சென்றவளுக்கு உட்காரச் சொல்லத் தெரியவில்லை பார். மிஸஸ் சொக்கேசன் கொஞ்சம்



அநாகரீகம். பெருமை காட்டுகிற டைப். டாலிக்குச் சின்ன வயதிலிருந்தே படிப்பு வரவில்லை. மகளைப் பற்றிப் பெருமையாகக் காட்ட முடியவில்லை என்று அசடு மக்கு என்று சொல்லிச் சொல்லி அவளை அப்படியே ஆக்கி விட்டார்கள் மிசஸ் சொக்கேசன்!'' என்று ஒரு கோபத்துடன் கூறினான் சதானந்தன்.

அவனோடு சோபாவில் அமர்ந்தபடி, "நீங்கள் சொன்னால் என்ன ஆனந்த்? மிஸ்டர் சொக்கேசன் உங்களுடைய பார்ட்னர்தானே!'' என்று வினவினாள் சுமித்ரா.

"இப்போது நீயும் டாலி மாதிரிப் பேசுகிறாய் தொழிலில் பங்காளி என்றால் குடும்ப விஷயத்தில் என் பொண்டாட்டியைப் பற்றி நீ என்ன பேசுவது என்று கேட்டுவிட்டால்..?''

"அதெப்படிக் கேட்பார்?''

"ஏன் கேட்க மாட்டார்? யாருக்கும் தன் மனைவியைக் குறை கூறினால் கோபம் வரத்தான் செய்யும்.''

சட்டெனக் கண்களில் குறும்பு மிளிர, "ம்ஹூம்?''என்று வினவினாள் சுமித்ரா.

"ம்க்கும். பின்னே, உன்னைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு யாரும் பிழைக்க முடியும் என்றா நினைத்தாய்?'' என்றான், சட்டெனப் பூத்த முறுவலுடன் அவனும்.

டாலியின் பிரச்சினை மறந்துவிட, அந்த நிமிடத்தில் அவர்கள் இருவரும் மட்டுமாய் இனிமையாய்த் தனித்தனர்.

பழச்சாறு நிரம்பிய மூன்று தம்ளர்கள் அடுக்கிய தட்டுடன் வேலைக்காரி பின் தொடர, டாலி வந்த போது, இருவர் முகத்திலும் முறுவல் இருந்தது.

"சது விட் அடித்தாரா, சுமித்ரா? என்ன விட்?" என்று வினவிய டாலி இப்போது சுமித்ராவின் அருகில் அமர்ந்தாள்.

ஒரு ஜூஸ் தம்ளரை முதலில் எடுத்துக் கொண்டு, "கொடு, கொடு! இரண்டு பேருக்கும் கொடு!" என்று வேலைக்காரியை விரட்டினாள்.

ஒரு மிடறு விழுங்கி விட்டு, "நன்றாய் இருக்கிறதா, சுமித்ராக்கா? ஒரு ஸ்பூன் சர்க்கரை அதிகம் போடச் சொன்னேன்!" என்று மேலும் ரசித்துக் குடித்தாள்.

வர வர மரியாதை ஏறுவதைக் கண்டும் வெளியே காட்டிக் கொள்ளாமல், "நன்றாக இருக்கிறது!" என்று சொல்லிவைத்தாள் சுமித்ரா.

திடுமெனத் திரும்பி அமர்ந்து, "நீங்கள் இரண்டு பேரும் மட்டும் கொடைக்கானல் போகிறீர்களாமே, சுமித்ராக்கா? அம்மா சொன்னார்கள். நானும் போகிறேன் என்றால் 'ஹனிமூன்' போது கூடப் போகக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். சரியான குண்டம்மா. பின்னே நான் எப்போ போகிறதாம்?" என்று கோபம் காட்டினாள் டாலி.

ஒரு சமாதானப் புன்னகையுடன், "உனக்குத் திருமணம் ஆகட்டும். அப்புறமாப்.." என்று தொடங்கினாள் சுமித்ரா.

இடையிட்டு, "நான் ஒரு டெலிபோன் செய்துவிட்டு வருகிறேன்," என்று ஒரு ஜூஸ் தம்ளருடன் எழுந்து சென்று விட்டான் சதானந்தன்.

அவன் முதுகைச் சோகமாய்ப் பார்த்து, "நான் யாரைத் திருமணம் செய்து கொள்வதாம்? சதுவைத்தான் நீ பண்ணிக்



கொண்டு விட்டாயே!" என்று விழிகளில் நீர்த் திரையிட வருத்தப்பட்டாள் டாலி.

இவ்வளவு பைத்தியமாய் இருக்கிறாளே, ஒருவேளை சதானந்தனை மணக்க நேர்ந்திருந்தால் இவள் நல்லபடி ஆகிவிட்டிருப்பாளோ என்று தோன்றியது சுமித்ராவுக்கு.

ஆனால் டாலியின் முகம் உடனேயே பிரகாசமடைந்தது. "ஒரு ரகசியம் சொல்லட்டுமா, அக்கா? இங்கே ஒருத்தர் உன் மேலேதான்.. அதாவது என்மேலேதான் தன் உயிர் என்கிறார்.." என்று சந்தோஷமாய்ச் சொல்லத் தொடங்கினாள்.

# 11

"நீ யார்கிட்டேயும் சொல்லக் கூடாது, சுமிக்கா. அவர் கூட அப்படித்தான் சொல்லுகிறார். இப்போதெல்லாம் யாருக்கும் சொல்லவே கூடாதாம். சரின்னு சொல்லிவிட்டேன். அதனால் தான் யார்கிட்டேயும் சொல்லாமல் உன்னிடம் மட்டும் சொல்லுகிறேன். அவர் எப்படி இருப்பார் தெரியுமா?" என்ற டாலி குரல் மேலும் தணிந்தது.

"உன்னை மாதிரி ரொம்ப வெள்ளை அக்கா. ஆனால் சது மாதிரி உயரம் இல்லை. அப்புறம் கண்ணும் ரொம்பச் சின்னது. நன்றாகவே இல்லை. சது மாதிரி விட் அடிக்கவும் தெரியாது. அவர் பேர் வந்து.." என்றவள் கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

விரல்களின் ஊடே, "அச்சச்சோ! அது மட்டும் சொல்லவே கூடாது என்றாரே!" என்று மறு கையையும் மேலே இறுக மூடினாள்.

வயிற்றுக்குள் பிசைந்தது சுமித்ராவுக்கு.

காட்டிக் கொள்ளாமல், "நீதான் சொல்லவே இல்லையே. ஆனால் ஒன்று டாலி. ஆண் பிள்ளைகள் என்றால் கல்யாணம் ஆகிறவரையில் கையைக் கூடத் தொடவிடக் கூடாது. தெரியுமா! அட, உன்னைப் போலக் கெட்டிக்காரிக்கு இதெல்லாம் நான் கற்றுத் தர வேண்டுமா, என்ன? உனக்கேதான் நன்றாகத் தெரியுமே!" என்று ஐஸ் வைத்து விஷயத்தை இழுத்துப் பதிய வைத்தாள்.

"நிச்சயமாய்!" என்றாள் டாலி பெருமையாக.

"அன்றைக்குக்கூட அவன் கன்னத்தைத் தடவினானா? விட்டேன் பார். எங்கள் சது இப்படித் தொடவே மாட்டார் தெரியுமான்னு சுளீர் என்று அடித்து விட்டேன். பிறகு ரொம்ப சாரி சொன்னான். பாவம்!" என்றாள்.

"போகட்டும். இனிமேலும் இப்படியே நடந்து கொள்ள வேண்டும். ப்ராமிஸ்?" என்று உறுதி பெற்றுக் கொண்டாள் சுமித்ரா.

"நமக்குக் கார் ரெடியாகிவிட்டது, சுமித்ரா," என்று வந்தான் சதானந்தன். "நாம் முதலில் கிளம்புகிறோம்.. பைல்களை வேறு ஒருவரிடம்கொடுத்து பஸ்ஸில் அனுப்பி விட்டார்களாம். ரெடிதானே? வரட்டுமா டாலி?" என்று கிளம்பினான்.

காரில் செல்லும்போது டாலி விஷயம் பற்றிக் கணவனிடம் சொன்னாள் சுமித்ரா.



"யாரோ இந்தக் குழந்தைப் பெண்ணிடம் நெருங்க முயல்வது போலத் தெரிகிறது, ஆனந்த். இன்னும் இதில் தலையிடாமல் நீங்கள் ஒதுங்குவது சரியாகுமா?" என்று கேட்டாள்.

ஒரு சிறு மவுனத்தின் பின், "சொல்லுகிறேன்," என்றான் சதானந்தன். "ஏதேனும் செய்துதான் ஆக வேண்டும்."

கொஞ்ச தூரம் ஏதும் பேசாமல் காரை ஓட்டிக் கொண்டு இருந்தான்.

சில பெட்டிக்கடைகள் கண்ணில் பட்டன.

காரின் வேகத்தைக் குறைத்து, "ஐஸ் கோல்ட் லிம்கா வேண்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டும்," என்று ஆவலாகக் கூறிவிட்டு, "இங்கே கூட பிரிட்ஜ் எல்லாம் வைத்திருப்பார்களோ..?" என வினவினாள் சுமித்ரா.

"இல்லை. ஆனால், பார்.." என்று காரை நிறுத்தி லிம்கா கொண்டு வரச் சொன்னான் அவன்.

ஒரு வாண்டு எதிர்ப்புறமாய் ஓடிற்று.

பாறையில் முட்டிக் கொள்வான்போல ஓடியவன் அங்கே சலசலவென்று ஓடிய சிற்றோடையுள்ளிருந்து இரு பாட்டில்களைக் கொண்டு வந்து கொடுத்தான்.

லிம்காவின் சுவையோடு குளிர்ச்சியையும் ஆச்சரியத்தோடு அனுபவித்துக் குடித்தாள் சுமித்ரா.

இவர்களது கம்பெனிக்குச் சொந்தமானதாகக் கொடைக்கானலில் இருந்த ஓய்வு விடுதி இவர்களுக்காகச் சுத்தப்படுத்தப்பட்டிருந்தது.

அந்த விடுதியைப் பராமரிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த ஒரு முதிய தம்பதியர் மாதனும் - பாருவும் பணிவுடன் சதானந்தனையும் அவன் மனைவியையும் வரவேற்றனர்.

"பெரியம்மா அனுப்பின ஆளுங்க, நேத்து வந்து அலங்காரம் எல்லாம் பண்ணிவிட்டுப் போனாங்க, சாமி. மத்தப்படிக்கு ஏற்பாடு எல்லாம் அவங்க டெலிபோனிலே சொன்னபடிக்கு செய்திருக்கமுங்க. இப்ப அய்யாவுக்கும் அம்மாளுக்கும் டீத் தண்ணி ரெடியாக்கலாமுங்களா?" என்று வாக்கியத்துக்கு ஒரு 'ங்க' போட்டு விசாரித்தான் மாதன்.

சுமித்ராவைப் பார்த்துவிட்டு, "கொஞ்ச நேரம் ஆகட்டும், மாதன். முதலில் நாங்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறோம். பிறகு டீ." என்றான் சதானந்தன்.

இருவருமாக வீட்டைச் சுற்றிப் பார்க்கவெனக் கிளம்பிய போது, "சின்ன விஷயமுங்கோ" என்று நிறுத்தினான் மாதன்.

"அய்யாவுக்கும், அம்மாவுக்கும் பிடித்த சாப்பாடு வகையறா எல்லாம் ஓட்டலிலேருந்து எடுத்தாரச் சொல்லிப் பெரியம்மா சொன்னாங்கய்யா. ஆனா பெரிய பக்குவம் தவிர சாதாரணமா எல்லாம் எங்க வூட்டுக்காரியே செய்வாளுங்க. உங்க பிரியம் எப்படியோ அதுபோலச் செய்யலாமுங்க."

இருவர் முகத்திலும் திருப்திப்படுத்தும் ஆவல் நன்றாகவே தெரிந்தது.

"சாதாரணமாய் வீட்டில் ஏதாவது சாப்பிட்டுக் கொள்ளலாமே ஆனந்த்." என்றாள் சுமித்ரா ஆங்கிலத்தில்.

"ஓகே." என்று சொல்லிவிட்டு, பாருவிடம், "சிம்பிளாக நீயே ஏதாவது செய்துவிடு. பாரு. உனக்கும் மாதனுக்கும்



சேர்த்தே ஒன்றாகவே செய்துவிடு." என்று சதானந்தன் கூறவும் இருவரும் முகம் மலரச் சென்றனர்.

"பெரியம்மா என்றால் தெரிகிறதில்லையா, சுமி! மிசஸ் சொக்கேசன், இங்கே அவ்வப்போது வந்து தங்குவார்கள். நான் வந்தால் வசதியாக ஜெயராஜில் ரூம்போட்டு விடுவேன். இந்த ஹாலுக்கு அந்தப் பக்கம் ஒரு ரூம். இந்தப்புறம் ஒரு கெஸ்ட்ரூம். அந்தக் காரிடாரின் எதிர்ப்புறம் சாப்பாட்டு அறை. நமக்கு மாடியில் ரூம் தயார் செய்து இருப்பதாகச் சொக்கேசர் சொன்னார்..." என்று மாடிக்கு அழைத்துச் சென்றவன், அறைக் கதவைத் திறந்ததும், 'வாவ்!' என்று பிரமித்தான்.

நிஜமாகவே அறை பிரமாதமாய்த்தான் இருந்தது.

இளஞ் சிவப்பு வண்ணத்துக்குப் பின்னால் திரைகள் சன்னல்களை அரைகுறையாய் மறைக்க, பிங்க் ஷேட் உள்ள விளக்குகள் எதிர் எதிர்ச் சுவர்களில் பளபளக்க.. ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் வைக்கப்பட்டிருந்த பூக் குவளைகளில் வண்ண வண்ண மலர்கள் மணம் பரப்ப..

எல்லாவற்றுக்கும் மேலாகப் பத்துப்பேர் புரளலாம் போலப் பெரிய படுக்கை லேஸ் விரிப்பும் பிங்க் கொசுவலையுமாய்க் கண்ணைப் பறித்தது.

சொல்லப்போனால் வேறு எதையும் கவனிக்க மாட்டாமல் கருத்தை ஈர்த்தது எனலாம்.

துருவிப் பார்த்தால்கூடச் சிறு குறைகூடக் காணமுடியாதபடி. சின்னச் சின்ன விஷயங்கள்கூட நேர்த்தியாய்க் கவனிக்கப் பட்டிருந்தன.

"மிசஸ் சொக்கேசன் மிகவும் பிரமாதமாய்த்தான் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!" என்று ஒரு பூக்குவளையிடம் சென்றான் சதானந்தன்.

இந்த 'ஷோ'வுக்கும் டாலியின் தன்மைக்கும் எப்படிச் சரிவரும் என்று தோன்றிய எண்ணம் மனதிலேயே மறைய அவன் ஒரு இளமஞ்சள் மலருடன் திரும்பி அவளிடம் வந்தான்.

"இங்கே கொத்துக் கொத்தாய்ப் பூக்கும் பூ இது. வாசம் பார்," என்று அவளிடம் அளித்தான்.

அவளது தோள்களைப் பற்றிக் கழுத்தோரமாய்க் குனிந்து "உன்னிடமும் அதே வாசனைதான்!" என்று லேசாக முத்தமிட்டான்.

நெஞ்சு படபடக்கச் செழுங்கொழுந்தாக அவள் நின்ற போது பாலைத் துரும்பாக சிவபூஜைக் கரடியாக மாதனுடைய அழைப்புக்குரல் மாடிப்படியிலிருந்து கேட்டது.

"அய்யா, மதுரையிலேருந்து பைலுங்க எல்லாம் கொணாந்து இருக்கிறாங்க!" என்று குரல் கொடுத்தான் அவன்.

"ஹாலில் உட்கார வை மாதன். நான் இதோ வருகிறேன்." அவனுக்கு உரக்கப் பதில் கூறிவிட்டு, மனைவியிடம், "நல்ல வேளை! இப்போதே வந்து சேர்ந்தாரே. உடனே வேலையைத் தொடங்கிவிட்டால் இரவுக்குள் முடித்துவிடலாம்," என்று மெதுவான குரலில் கூறியவன், குரலை மேலும் தணித்து, "முடித்துவிட வேண்டுந்தானே?" என்று கிசுகிசுத்து மீண்டும் அவளைச் சிவக்க வைத்துச் சிரித்தான்.



"பாவம். வெகுநேரம் பஸ்சில் பிரயாணம் செய்திருப்பார் வந்தவர். டீ, பிஸ்கட் ஏற்பாடு செய். நமக்கும் சேர்த்துத்தான்.." என்றவன் மீண்டும் ஒருதரம் அவளை இறுக அணைத்துப் பின் விட்டுச் சென்றான்.

கணவனுடைய கொஞ்சலும் அணைப்புமாகச் சொர்க்க லோகத்தில் மிதந்தாள் சுமித்ரா.

டீ, ட்ரேயுடன் பாரு முன் செல்ல, சிற்றுண்டித் தட்டுகளோடு அவளைத் தொடர்ந்து ஹாலுக்கு வந்தவள் சட்டெனச் செயலற்றுப் போனாள்,

வானில் மிதந்தவள், தரையில் கூட இல்லாமல் அதளபாதாளத்தில் விழுவது என்றால் எப்படியிருக்கும்.

சுமித்ரா அனுபவித்துக்கொண்டு இருந்தாள்.

கையில் இருந்த சிற்றுண்டித் தட்டுகள் நழுவி விழாமல் இருந்ததே அதிசயம் என்று தோன்றியது.

ஏனெனில் சதானந்தனோடு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தவன் மனோகரன்.

முன் பிறவி போலத் தோன்றிய மூன்று ஆண்டுகளுக்கு முன் பொறுப்பை உதறிவிட்டு வருமாறு அவளை வற்புறுத்திய அதே மனோகரன்.

இருந்திருந்து இன்றைக்கு என்று, அதுவும் இந்த நேரத்தில் என்று அவன் இங்கே வந்து சேர வேண்டுமா!

மனோகரனுடைய பார்வை தன்னைத் தாண்டிச் செல்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான் சதானந்தன்.

"வா, சுமி!" என்று அழைத்தான்.

அவள் அருகில் வந்ததும், "மிஸ்டர் மனோகரன், மீட் மை வைஃப் சுமித்ரா. சுமி, இவர் மதுரையில் அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்டில் இருக்கிறார்."

எழுந்து நின்று, "வணக்கம் மேடம்" என்று மனோகரன் மரியாதை செய்ய இயந்திரமாய்க் கை குவித்தாள் சுமித்ரா.

அதற்கு மேல் என்ன செய்ய வேண்டும், என்ன பேச வேண்டும் என்று எதுவும் தோன்றவில்லை.

இருநூற்று நாற்பத்து ஏழு எழுத்துக்களைக் கொண்டு எத்தனை ஆயிரம் வார்த்தைகள்!

எதுவும் நினைவு வராமல் பாரு டீயைக் கப்புகளில் ஊற்றுவதை வெறித்தபடி அசையாமல் நின்றாள் அவள்.

தன் வேலை முடிந்து பாரு திரும்பிச் செல்வதுகூடக் கண்ணில் பட்டதே தவிரக் கருத்தில் பதிவாகவில்லை.

சர்வநாசம் செய்யும் சக்தி உள்ள ஏதோ ஒன்று அவளை விழுங்க வருவது போன்ற உருவகத்தில் சில்லிட்டுப்போய் நின்றாள்.

மனோகரனைப் பற்றிக் கணவனிடம் மறைத்து ஒளித்து வைக்கவில்லை; ஏற்கெனவே அவனை மணக்க விரும்பியதைக் கூடச் சதானந்தனிடம் வெளிப்படையாகச் சொல்லியாயிற்று என்ற உண்மை சற்றும் அவளுக்குத் தெம்பளிப்பதாக இல்லை.

அன்றைய நிலை வேறு, இன்று கணவன் எப்படி எடுத்துக் கொள்ளக் கூடும்?



நிச்சயமாகத் தவறாகத்தான் என்று மனம் அடித்துப் பேசிற்று

அவளைக் காதலித்து மணந்தவன் என்றால் வேறு விதம்.

எப்படியோ அவன் சொன்ன இயற்கையின் ரசவாதமோ என்னவோ, எல்லாம் சரியாகிப் போயிற்று என்று நிம்மதி அடைந்தாளே.

அதற்குள் இப்படியா?

எண்ணி எண்ணி அவள் உள்ளம் மருகியது.

சட்டென உள்ளத்தில் ஒரு நம்பிக்கைப் பொறி.

அவன் - மனோகரன், அவளை அறிந்தவனாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அப்படியே இருந்துவிட்டுச் சென்றும் விடுவானோ?

பயந்த மனம் அப்படியே போய்விட மாட்டானா என்று ஏங்கியது.

கூடவே இன்னொன்றும் தோன்றியது. இப்படி மணிக் கணக்காய் நின்று கொண்டு இருக்கிறாளே அவள், கணவன் தவறாக எண்ண மாட்டானா?

கணவனைப் பார்த்தாள்.

அவனோ, சென்ற காலம் விநாடி போலப் பாவித்து (விநாடிதானோ?), "உட்காரேன், சுமி!" என்று அருகே சோபாவைத் தட்டிக் காட்டினான்.

பேசாமலே அவள் அமர்கையில் முன் அறையில் டெலிஃபோன் ஒலித்தது.

"பேசிக் கொண்டு இருங்கள், இதோ வந்துவிடுகிறேன்," என்று டீ கப்பைக் கையில் எடுத்துக்கொண்டு அறைக்குள் சென்று மறைந்தான் சதானந்தன்.

அவன் செல்லக் காத்திருந்தாற்போல, "தலையில் கல்லைப் போட்டுவிட்டாயே, சுமி!" என்று கண்ணீர் வடிக்கலானான் மனோகரன். "இரண்டு ஆண்டுகளாக உன்னை எண்ணி ஏங்கிக்கொண்டு இருக்கிறேன்; திரும்பி வந்து பார்க்க வேண்டும்; மணந்து கொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டு இருக்கும்போது இடியைத் தலைமேலேயே போட்டுவிட்டாயே!" என்று நாகுக்காகக் கண்ணீரைச் சுண்டிவிட்டான்.

விட்டுச் சென்றவன் குற்றம் சாட்டிப் பேசவும் ஆத்திரம் வந்தது சுமித்ராவுக்கு.

அச்சத்தை ஆத்திரம் மீற, "இரண்டு ஆண்டுகளாக ஒரு கடிதம்கூடவா எழுத முடியாமல் போயிற்று?" என்று கேட்டாள்.

"கடிதம் இப்படிக் கண்ணீர் விடுமா?" என்றுபதிலுக்குக் கேட்டான் மனோகரன். "கடிதம் விம்முமா? வேதனைப்படுமா? ஆனால் நீ இப்படிச் செய்வாய் என்று நான் கனவிலும் கருதவில்லையே. ஒரு வேளை... உன் தங்கைக்காக உயிரையும் தியாகம் செய்வேன் என்பாயே. அவளுக்காக உன் வாழ்வையே பலி கொடுத்தாயே, சுமி? ஷ்...எல்லாம் பிறகு தனியே பேசலாம். உன் கணவர் திரும்பி வருகிறார்," என்று குரலைத் தணித்துப் பேசினான்.

சதானந்தன் திரும்பி வரும் அரவம் தெரிந்தது.

மனோகரனின் பேச்சைக் கேட்டிருப்பானோ?



நிச்சயம் கேட்டுத்தான் இருப்பான் - சும்மாவே அவனுக்குக் காதுகளில்... ஏன், கண், மூக்கு என்று எல்லாவற்றிலும் கூர்மை அதிகம்.

மனோகரனும் நாடக மேடை ரகசியமாய்க் குரலைத் தணித்தபோதும் தெளிவாகத்தான் பேசினான்.

வேண்டுமென்றே செய்தானோ என்ற சந்தேகம் வரச் சட்டென மனோகரனை ஆராய்ந்தாள் சுமித்ரா.

டாலி வர்ணித்தது போலவே இவனுக்கும் சின்னக் கண்கள். அவை தந்திரத்தைக் காட்டுகின்றனவோ?

நேர்பார்வையாய்ப் பாராமல் இங்கும் அங்குமாய் அவன் பார்வை சலிப்பது லேசாக வெறுப்பூட்டியது.

கீழ் வளைந்த உதடுகள் குறைகூறத் துடித்தன.

சதானந்தனின் - அவளுடைய ஆனந்தனின் நடுநிறத் தோடு பார்க்கையில் அவனுடைய வெளுப்பு இரத்தமிழந்த சோகை போல ஆரோக்கியக் குறையைக் காட்டியது.

ஆராய்ச்சி நோக்குடன் பார்க்கையில், இவனைப் போய் ஒரு காலத்தில் உலகத்தில் சிறந்தவன் என்று நினைத்ததும் நேசித்ததும் ஆச்சரியத்தை அளித்தன.

நல்ல வேளை, இவனைப் பற்றிக் கணவனிடம் மறைக்க வில்லை. ஏதேனும் குள்ளநரித்தனம் செய்தாலும் சொல்லி விடலாம்.

மனோகரன் நரி என்பதில் இப்போது சந்தேகம் இல்லை.

குனிந்து காலி டீ கப்பை டீபாய்மேல் வைத்துவிட்டு, "வெல், மிஸ்டர் மனோகரன், ஒரு பர்ச்சேஸ் ஃபைல்விட்டுப் போயிற்று என்று டெலிஃபோன் செய்தார்கள். பரவாயில்லை. உங்களுக்கு ஓட்டலில் ரூம் ஏற்பாடு செய்யச் சொன்னார்களாமே. செய்து விட்டீர்களா? இல்லையென்றால் இங்கேயே 'கெஸ்ட்ரூம்' மில் தங்கிக் கொள்ளலாம். ஓர் இரவுதானே...ம்... இப்பொழுது வேலையில் இறங்கப் போகிறேன். நீங்கள் வேண்டுமானால் ஒரு வாக்... அப்படியே ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்களேன்," என்றான் சதானந்தன் சரளமாக.

"சரி, சார்," என்று எழுந்தான் மனோகரன்.

"வந்து... நீங்கள் ஃபைல் பார்க்கும்போது உங்கள் மனைவி போரடித்துப் போவார்களே சார். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் அழைத்துப் போய்ஊர் சுற்றிக் காட்டி வரவா சார்?" என்று வெகு பணிவான குரலில் கேட்டான்.

"என்ன தைரியம்!" என்று உள்ளூரச் சினந்தாள் சுமித்ரா.

ஆனால் சதானந்தன், "போகிறாயா?" என்று வெகு சாதாரணமாகக் கேட்கவும் அவள் மேலும் ஆத்திரம் வந்தது.

கோபத்தைக் காட்ட மனமின்றி, "இல்லை, எனக்கு வேலை இருக்கிறது," என்று மறுத்துரைத்தாள்.

"ஓ கே. நீங்கள் மட்டும் போய் வாருங்கள், மனோகரன். அப்படியே உணவையும் முடித்துக் கொண்டு வந்துவிடுங்கள். இங்கே இன்னொருவருக்குச் சேர்த்து உணவு போதுமானதாய் இராது என்று நினைக்கிறேன்," என்று மனோகரனை அனுப்பி வைத்தான் சதானந்தன்.



ஃபைல் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு, "எனக்கு வேலை இருக்கிறது, சுமித்ரா," என்று கூறி மாடிக்குச் சென்றான்.

சுமி, சுமித்ரா ஆகிவிட்டதே என்று கலங்கினாள் அவள்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் அவனைப் பின்தொடர்ந்தாள்.

மாடியில் படுக்கை அறையை அடுத்து இரு அறைகள் இருந்தன.

அவற்றுள் ஒன்றில் இருந்த மேசை மேல் பெட்டியை வைத்தான்.

அவன் பின்னோடு அறையில் நுழைந்த சுமித்ரா, "உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்," என்றாள் மொட்டையாக.

தன் வேலையை நிறுத்தாமல் பெட்டியில் இருந்த ஃபைல்களை எடுத்துத் தேதி வாரியாக அடுக்கியபடி, "ம்..." என்றான் அவன்.

ஒரு கணம் தயங்கிவிட்டு, "இது... இவர்... அந்த மனோகரன்.." என்றாள் அவள் சிறு குரலில்.

"ஊகித்தேன்!" என்றான் அவன், சலனமற்று. "எதையும் தெளிவாகப் பேசிக் கொள்ள வாய்ப்புத் தருவதற்காகத்தான் உடனே போகிறாயா என்றேன்."

"பேச ஒன்றும் இல்லை," என்றாள் அவள் பளிச்சென.

அவன் தோளைக் குலுக்கினான்.

"உன் இஷ்டம். எனக்கு இப்போது வேலை இருக்கிறது சுமித்ரா. தோட்டத்தில் நடப்பதோ, கதைப் புத்தகம் படிப்பதோ,

நீ தனியாகத்தான் பொழுதைப் போக்கிக் கொள்ள வேண்டும்.'' என்றவன் மேலே பேச்சை விரும்பாதவன் போல் அமர்ந்து ஒரு ஃபைலையும் பிரித்தான்.

தட்டிக் கழிக்கிறான் என்ற உணர்வில் சுருக்கென அவளுக்கும் ஆத்திரம் வரச் சட்டெனத் திரும்பிச் சென்றாள்.

எப்படித் தொடங்கிய பயணம் இப்படியா முடியவேண்டும் என்று அவள் மனம் தவியாய்த் தவித்தது.

## 12

நோயாளிக்கு வைத்தியம் செய்கையில் கடைசி மூச்சு இருக்கும்வரை நம்பிக்கையோடு பாடுபட வேண்டும் என்பார்கள்.

யோசிக்க யோசிக்க சுமித்ராவுக்கு நம்பிக்கை சற்றே தலை தூக்கியது.

அவளைத் தட்டிக் கழிக்க எண்ணுகிறவன் இவ்வளவு மும்முரமாய் வேலையில் இறங்குவானா?

இரவுக்குள் முடிப்பதற்காக அல்லவா அவன் அப்போதே வேலையைத் தொடங்கியது.

ஆனால் சுமித்ரா என்றானே.



அதுபோல முழுப் பெயர் சொல்லி அவன் அழைத்து எத்தனையோ நாட்கள் ஆயினவே.

இன்று இந்தப் பத்து நிமிடங்களுக்குள் இரண்டு தடவை 'சமி' மறந்து விட்டதே.

மறந்ததா? வேண்டுமென்றே சொன்னதா?

திரும்பிச் சென்று அவனிடம் பிடிவாதமாக எதையும் கேட்கும் பிரியமும் இல்லை; கேட்கும் தைரியமும் வரவில்லை.

சஞ்சலப்பட்டபடியே தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தாள்.

அது பிடிக்காமல் கதைப் புத்தகத்தைத் தூக்கினால் ஒரு வரிகூடப் படிக்கத் தோன்றவில்லை.

உதவிக்குச் சென்றாலோ, பாரு வேலையெல்லாம் முடிந்து விட்டது என்றாள்.

சும்மாவேனும் பாருவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

அவள் சொக்கேசர் குடும்பம் பற்றிக் குறைவாகப் பேசத் தொடங்கவும், இதேதடா வம்பு என்று, ''அய்யா கூப்பிடுகிற சத்தம் கேட்கிறது,' என்று மேலே சென்றாள்.

அவன் அறைக்குள் சென்று சற்றுநேரம் நின்று பார்த்தாள்.

அவள் வந்த அவசரம் அவனுக்குக் கேட்டுத்தான் இருக்கும்.

ஆனால் அவன் கண்டுகொள்வதாக இல்லை எனவும், நெஞ்சில் இன்னமும் பாரம் ஏறிற்று.

அவனுடைய பாரா முகமும் - அலட்சியம், வெறுப்பு என்றுகூடச் சொல்வதற்கு இல்லை, - வேலையில் தீவிர கவனமாகக்கூட இருக்கலாம். ஆனால் பாராமுகம் காட்டுகிறானோ என்ற நினைவிலேயே இவ்வளவு வேதனையாக இருக்கிறதே, மனோகரன் கண்ணீரைச் சிந்தியபோதும் கடுகளவு இரக்கம்கூடத் தோன்றவில்லையே ஏன் என்று எண்ணிப் பார்த்தாள்.

நூறு சதவீதமாய் மனம் தெளிந்தது.

ஆனால் அதை அவளுடைய கணவனுக்கு எப்படிப் புரிய வைப்பது?

உணவு வேளையிலாவது ஏதாவது பேசலாம் என்று சாப்பிட வருமாறு அழைத்தாள்.

"பிசைந்து கிண்ணங்களில் ஸ்பூன் போட்டுத் தந்து விடு. இங்கேயே சாப்பிட்டு விடுகிறேன்," என்றான் அவன் திரும்பிப் பாராமலே.

சென்னையிலும் இதுகூட அவ்வப்போது நடப்பதுதான்.

அதிக வேலை என்று வீட்டுக்கு எடுத்து வந்திருந்தால் இப்படித்தான் உணவைக் கேட்பான்.

ஆனால் கலங்கி விட்டிருந்தமனம். வேலைக்காகவா அல்லது என் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமலா என்று ஐயப்பட்டது.

அவன் சொன்னது போலவே உணவைக் கலந்து எடுத்துக் கொண்டு வைத்தபோதும், "நீ சாப்பிட்டுவிட்டு மீதியைப்



பாருவிடம் கொடுத்து அனுப்பிவிடு. காலை ஏழு மணிக்கு வரச்சொல். நாளை நான் அழைத்து வருவதாகச் சொல்லு," என்றான் கணக்கிலிருந்து நிமிராமலே.

அவள் திரும்பிச் சென்று அறைவாயிலை நெருங்கவும், "சாப்பிட்டதும் நீ தூங்கிவிடு, சமித்ரா. இது இழுக்கும் போலத் தெரிகிறது," என்றான் ஒரு உணர்ச்சியும் இல்லாத ஒரு வரட்டுக் குரலில்.

"வேண்டாம், வேண்டாம், வேலையை மூடி வைத்து விட்டு என்னை அணைக்க வா!" என்று அவனிடம் எப்படிச் சொல்வது?

ஒருவரை ஒருவர் நேசித்த மனமொத்த ஜோடி என்றால் கூட ஒரு பெண்ணுக்கு இது கடினம்.

இவர்களுடைய விசித்திர உறவில் நடக்கிற காரியமா?

தூங்கு என்று விட்டேந்தியாய்ச் சொல்லி விட்டானே, வழக்கமான முத்தம்கூட மறந்து விட்டதா?

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு திரும்பிச் சென்றாள் சமித்ரா.

பாருவின் மனம் வருந்தக் கூடாதே என்று கொஞ்சம் கொறித்தாள்.

அவளையும் மாதனையும்அனுப்பிவிட்டு உள்ளே தாழிட்டுவிட்டு மேலே சென்றாள்.

அவன் அறையில் எட்டிப் பார்த்தாள்.

இடது கையால் ஸ்பூனில் எடுத்து உண்டபடி வலது கையால் கணக்கில் 'டிக்' செய்து கொண்டிருந்தான் சதானந்தன்.

பேசாமல் படுக்கை அறைக்குள் சென்று சன்னல் ஓரமாய் நின்று இரவை வெறித்தாள்.

சற்றுப் பொறுத்து அழைப்பு மணி ஓசை கேட்டது.

மனோகரன் திரும்பிவிட்டான் போலும்.

அவனுக்குக் கதவைத் திறக்க இவள் செல்ல வேண்டுமா?

அவசரமாகப் படுக்கையில் படுத்துக் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

சற்றுப் பொறுத்து இரண்டாம் முறையாக மணி ஒலிக்கவும், "சுமித்ரா!" என்று குரல் கொடுத்தான் சதானந்தன்.

அவளிடம் மூச்சுப் பேச்சே இல்லை.

சதானந்தன் எழுந்து செல்வது தெரிந்தது.

ஆனால் மனோகரன் அவளிடம் ஏதாவது விஷம் ஊட்டுவானா?

ஓசையின்றி எழுந்து ஓடிச்சென்று மாடிப்படி ஓரமாய் நின்று கவனித்தாள். ஒட்டுக் கேட்டாள்.

அதிகம் பேச்சின்றிச் சதானந்தன் "குட்நைட்" சொல்லிவிட்டுத் திரும்பவும், குடுகுடுவென்று ஓடிச்சென்று மீண்டும் படுக்கையில் விழுந்தாள்.

நிதானமாக மாடி ஏறி வந்த அவள் கணவன் மீண்டும்தான் அலுவல் பார்த்து வந்த அறைக்குச் செல்லவில்லை.

பதிலாகச் சுமித்ரா படுத்திருந்த அறைக்குள் வந்தான்

படுக்கையின் அருகே வந்து அவன் நிற்பது புரிந்தது.



எவ்வளவு நேரம் பாசாங்கு செய்வது?

தூங்குகிறவள் போல நிதானமாக மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவது கடினமாயிற்று.

திடீரென்று அவன் பேசினான்.

"வாழ்க்கையில் எத்தனையோ சிக்கல்களைச் சமாளித்தவள்... அந்தத் தைரியமும் உறுதியும் இப்போது எங்கே போயின? நிமிர்ந்து நில்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றான்.

சுவரோடு பதித்திருந்த வார்ட்ரோபை அவன் திறப்பது அரையிருளில் தெரிந்தது.

ஒரு முழுக்கை ஸ்வெட்டரை எடுத்து அணிந்து கொண்டு அவன் வெளியே செல்லத் திரும்பினான்.

பாசாங்கெல்லாம் மறந்துவிட, "எங்கே போகிறீர்கள்?" என்று அவசரமாக எழுந்து கேட்டாள் சுமித்ரா.

"வாக்கிங், வெளியே நாய்கள் நிற்பதால் நீ வந்து பூட்டிக் கொள்ளத் தேவை இல்லை," என்று கண்டிப்பான குரலில் கூறியபடியே நடந்தான் அவன்.

"வேலை?" என்றாள் அவள் விடாமல்.

"முடிந்து விட்டது. குட்நைட்!" என்று வெளியேறி விட்டான் அவன்.

அவன் சற்று அழுத்தமான காலடிகளுடன் கீழே இறங்கிச் சென்றது கேட்டது. சற்றுப் பொறுத்து வெளிக்கதவு சற்று ஓசையுடன் மூடப்பட்டுவது கேட்டது.

இடி விழுந்தாற் போலச் செய்கையற்று அமர்ந்திருந்தாள், சுமித்ரா.

வேலை முடிந்த பிறகும் வெளியே- அதுவும் குறிப்பாக இன்றைக்கு வெளியே போவது என்றால் உன்னுடன் உறவே வேண்டாம் என்று அவன் உறுதியாகச் சொல்வது போலத்தானே.

இடிந்து போய் அமர்ந்திருந்த அந்த நேரத்திலும் இரவில் தனியாகப் போகிறானே. ஏதேனும் பூச்சி பொட்டு கடித்துவிடக் கூடாதே என்ற பயம் வந்தது.

தானும் அவன் பின்னே செல்லலாமோ என்று எழுந்தவள் அவன் எந்தப் பக்கம் சென்றான் என்று தெரியாமல் எப்படிப் போவது என்று மலைத்தாள்.

சன்னல் வழியே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இருளைத் துழாவியபோது சட்டென அறை ஒளி பெற்றது.

திகைப்புடன் திரும்பினாள். மனோகரன் நின்றான்.

சதானந்தன் வீட்டில் இல்லாத நேரத்தில் இவன் இங்கே. என்ற அச்சம் ஒரே கணம்தான் இருந்தது.

'நிமிர்ந்து நில்!' என்றானே!

தலை நிமிர்ந்து, "என்ன?" என்றாள், அதட்டலாக.

அவன் இந்த அதட்டலை எதிர்பார்க்கவில்லை போலும்.

சற்றுத் திகைத்துவிட்டு, "உன்னிடம்.. உன்னிடம் என் மனம் படும் வேதனை பற்றிச் சொல்ல வந்தேன். சுமி...." என்று இழுத்தான் அவன்.



"காலையில் சொல்லுங்கள்...." என்ற அவளது உத்தரவைக் கவனியாதவன், "இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருக்கக் கூடாதா, சுமி? ஒரு நிலைக்கு வளர்ந்து வந்த பிறகுதான் உன்னை வந்து பார்க்க வேண்டும் என்று..." நிறுத்தாமல் ஏதேதோ பேசியவனைச், சுமித்ரா இடைமறித்தாள்.

"அது முடிந்துவிட்ட விஷயம். அதைப்பற்றிப் பேச வந்திருந்தால் நீங்கள் போகலாம்," என்றாள் கறாராக.

"அது மட்டும் இல்லை, சுமிக் கண்ணு.." என்று குழைவாகத் தொடங்கினான் மனோகரன்.

ஆனால், "என் பெயர் சுமித்ரா!" என்று குறுக்கிட்டுச் சொன்னாள் அவள்.

"நான் எப்போதும் அப்படித்தானே சுமிக்க.." என்று அவன் மீண்டும் தொடங்கவும் பொறுமை இழந்தாள் சுமித்ரா.

"பழைய கதை ஏதும் வேண்டாம் மிஸ்டர் மனோகரன். இனி நீங்கள் என்னை மிஸஸ் சதானந்தன் என்று.. அதை விடவும் மாலையில் அழைத்தீர்களே.. அதைப் போல் 'மேடம்' என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்!" என்றாள் ஒரு குரூரத்துடன்.

முகம் கன்ற உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு வினாடி நின்றான் மனோகரன்.

"உன் கோபம் எனக்குப் புரிகிறது சும்..சுமித்ரா. ஆனால் பதிலுக்கு உன் மேல் எனக்குக் கொஞ்சம் கூடக் கோபம் வரவில்லை. தெரியுமா? மிகவும் பரிதாபமாய்த்தான் இருக்கிறது." என்று வேறு தொடங்கினான் அவன்.

"எதற்கு?" என்றாள் அவள் வெட்டென.

"பின் என்ன? நாம் கண்ட குழந்தைக் கனவு நினைவில்லையா... சமித்ரா? ஆனால், அதெல்லாம் எப்படி மறக்கும்? நம் இருவரையும் போலப் பசுந்தங்கம் போல என்று. ஊம்... இப்போது இந்த சதானந்தனைப் போலப் பிள்ளை பிறந்தால் எப்படிச் சகிப்பாய்? உன் தந்தக்கைகளில் கரிக்கட்டை போல... சீச்சீ. எப்படிச் சகிப்பாய்? ஒரு நாளும் பிள்ளையே பெற்றுக் கொள்ளாதே!"

மனோகரனுக்குத் தன் நிறத்தைப் பற்றி அலாதிப் பெருமை! கர்வம்!

பாவம்.கணவனோடு ஒத்திட்டு மனோகரனைச் சோகை என்று அவள் நினைத்தது அவனுக்குத் தெரியுமா?

அலட்சியமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "அவருடைய கம்பீரத்துடன் பிள்ளை பெறக் கொடுத்துவைக்கவேண்டும்!" என்றாள் கண்களில் கனவு மிதக்க.

அவன் முகம் செங்குரங்காய்ச் சிவந்தது.

ஆத்திரத்தை அடக்கமாட்டாமல், "எவனைப் பார்த்தாலும் அவனிடம் என்ன மயக்கம்? என்னைவிடப் பணம் தவிர அவனிடம் என்ன இருக்கிறது?" என்று சீறினான்.

"ஆண்மை..." என்றாள் சுமித்ரா ஒரு துச்சமான பார்வையுடன்.

கொதித்துப் போய், "ஆண்மையா? ஆண்மையா..? இதோ என்னைப் பற்றியும் தெரிந்து கொண்டு பேசடி..." என்று விரைந்து அவளை அணுகிக் கையைப் பற்றினான் அவன்.



வினாடிக்குள் கையை உதறி விடுவித்துக்கொண்டவள் சுர்லென்று அறைந்துவிட்டாள் சுமித்ரா.

"முட்டாள், ஆண்மையென்றால் உன் மட்டப் புத்திக்கு இதுதான் தோன்றுமா? அவருடைய ஆண்மை அவருடைய மனதில் இருக்கும்; பேச்சில் இருக்கும். நடப்பில் இருக்கும். பார்த்து நீயும் படித்துக் கொள். முதலில் இங்கிருந்து வெளியே போ!" என்றாள் அதிகாரமாக.

எதிர்பாராமல் அறை விழுந்த வேகத்தில் தடுமாறிய மனோகரன் சமாளித்துக் கொண்டு கோபாவேசமாகத் திரும்பினான்.

"என்னடி எவளைப் பார்த்தாலும்சொல்லி வைத்தது போல ஒரே மாதிரி அறைகிறீர்கள்! இதற்கு உன்னைக் கதறடித்து என் காலில் விழவைக்காவிட்டால் நான் என்னடி ஆண் பிள்ளை?" என்று அவளை நோக்கிப் பாய்ந்தான்.

"முட்டாள், போடா வெளியே. அவர் வந்து உன்னை இங்கே பார்த்தால் துவம்சம் பண்ணிடுவார்!" என்று மிரட்டினாள் அவள்.

"ஆமாம், பெரிய ஆண் மகன் ஆயிற்றே. துவம்சம் பண்ணி விடுவான்தான். ஆனால் அவன் எப்படியடி உள்ளே வருவான்? பூட்டிய கதவைத் தாண்டி வர அவன் மந்திரவாதியும் கூடவா? ஒரு வழியாகக் கதவை உடைத்து அவன் உள்ளே வரட்டும். வந்து நீ இருக்கிற நிலைமையை ஆசை ஆசையாகப் பார்க்கட்டும்... மகா ஆண்மை உள்ள அந்தப் பயல்!" என்று மீண்டும் அவள் மீது பாய்ந்தான் அவன்.

மனோகரன் முதலில் எந்தவிதமான பெரிய திட்டத்துடனும் சுமித்ராவின் அறைக்குச் செல்லவில்லை.

ஒரு காலத்தில் தான் விரும்பிய பணவசதிக்காக விட்டுச் சென்ற ஒருத்தி, தன் முதலாளியின் மனைவியாக வந்து நின்றது அவன் மனதைக் குமைய வைத்திருந்தது.

முதலில் அவர்களிடையே கலகமூட்ட மட்டுமே எண்ணினான்.

சதானந்தன் இரவில் வெளியே செல்லவும் ஏதோ தனக்கு ஒரு வாய்ப்பு என்று நினைத்தான்.

சுமித்ராவிடம் பழைய உணர்வுகளைத் தூண்டி வசப் படுத்திக்கொண்டால் அவள்மூலம் பல வசதிகளைப் பெறக் கூடுமோ என்று ஓர் எண்ணம்.

அவளோ பழைய கதையைப் பேசவும் இடம் தராததோடு அவனை மட்டம் தட்டவும் தயங்கவில்லை.

குழந்தை என்ற எண்ணமே கசந்து போய்விட, அவள் தன் கணவனிடமிருந்து விலகி நிற்கும்படியேனும் செய்யத் திட்டமிட்டான்.

ஆனால் அவள் தன் கணவனிடம் மயங்கி நின்றதைத் தனக்கு அவள் செய்த அவமானமாய் உணர்ந்தான்.

மதுரையில் தான் நெருங்க முயன்ற டாலி இதே சதானந்தனையே அளவு கோலாக வைத்துத் தன்னை மட்டம் தட்டியது போலவே இவளும் அறையவும் தன்னை மீறிய ஆத்திரத்தில் அறிவிழந்து போனான்.



ஆனால் வெறிகொண்டு பாய்ந்தவன் இலக்கை எட்டவே இல்லை.

பின்னிருந்து தன்னைப் பற்றியது என்ன என்பதை அறியுமுன்னரே மூச்சு வாங்கிக் கொண்டு தரையில் கிடந்தான்.

உடம்பில் ஒவ்வொரு அங்கமும் கழன்று விடுவது போல வலித்தது.

அருகே கால்களைச் சற்று அகற்றி நின்று கொண்டிருந்த சதானந்தத்தைப் பார்த்து அச்சத்துடனும் திகைப்புடனும் விழித்தான்.

ஒரு தலையசைவால் அவனை எழச் சொன்னான் சதானந்தன்.

உடம்பெல்லாம் வலித்த போதும் அந்த உத்தரவை மீறப் பயந்து எழுந்தான் மனோகரன்.

"நீ நாளைக்கு வேலையை ராஜினாமா செய்கிறாய்!" என்றான் சதானந்தன்.

"சரி, சார்!" என்றான் மனோகரன் அவசரமாக.

"மதுரையில் டாலி இருக்கும் பக்கம்கூடத் திரும்புவது இல்லை."

"ச.. சரி, சார்."

"இப்போது நேராகச் சென்று உன் அறையில் முடங்குகிறாய்.."

மனோகரனின் பின்னாலேயே சென்று அவன் தங்கியிருந்த அறையை வெளியே பூட்டிக் கொண்டு திரும்பினான், சதானந்தன்.

சமயத்தில் கணவன் வந்து காத்தது பெரிதாகத் தோன்றவில்லை சுமித்ராவுக்கு.

முதலில் விட்டுவிட்டுப் போவானேன்?

இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சிக்கு இடம் தருவானேன்?

மனைவியைத் தவறாக எண்ணி, ஒளிந்து மறைந்து, வில்லனுக்கு இடம் கொடுத்து வேவு பார்க்கும் கேவலமான புத்தி உடையவன் அவன் அல்ல.

பின் ஏன் சென்றான்?

அதுவும் கதவை மனோகரன் உள்ளே தாழிட்டு விட்ட பிறகு?

ஸ்வெட்டரைக் கழற்றியபடியே உள்ளே வந்த கணவனின் வரிசைப் பல் சிரிப்புக்குப் பதில் தராமல் சுருக்கமாகக் கேட்டாள் "ஏன்?" என்று.

"உனக்காகத்தான்!" என்று உடனேயே பதில் வந்தது. "நீ ஐயம் திரிபற உணர வேண்டும் என்றுதான். அவ்வப் போது தோன்றிய ஐந்து சதவீதச் சந்தேகம் கூட இல்லாமல் தெளிய வேண்டும் என்றுதான். அவன் பார்வையே திருட்டு முழி கமி. சிறு வாய்ப்புக் கிடைத்தாலும் ஏதாவது சின்னத் தனம் செய்வான் என்று நிச்சயமாய் நம்பினேன்.



அதனால்தான் அவன் அறியக் கதவைச் சாத்திவிட்டுச் சென்றேன்."

"கதவை உள்ளே தாழிட்டுவிட்டு வந்தேன் என்றாளே."

"அவன் புத்தி தெரிந்துதான் முதலில் சத்தமின்றிப் பின் கதவைத் திறந்து வைத்துவிட்டு முன் வழியே ஓசையுடன் சென்றேன். நான் செல்வதை அவன் அறிய வேண்டும் அல்லவா?"

"நான்... நான்..."

"சொல்லு. எதையும் வாய்விட்டுச் சொல்லிவிடுவதுதான் நல்லது."

"நீங்கள் விட்டு விலகிப் போகிறீர்கள் என்று நினைத்தேன்." என்றாள் அப்போது வெதும்பிய குரலில்.

அவன் மீண்டும் புன்னகை செய்தான்.

"விட்டு விலகுவதா? உன்னையா? முதல்நாள்லேயே முடியவில்லையே! மிரட்டிக் கொண்டு போய்... இப்போது முடியுமா! நடந்தது எல்லாம் உன் மனம் தெளிவதற்காகத்தான். தெளிவாக உணர்ந்து விட்டாயல்லவா, டார்லிங்?"

"உம்."

"நன்றாக? அந்த ஐந்து சதவீதச் சந்தேகம்கூட இல்லையே..."

நூறு சதவீதமாய் நிச்சயமாய் இருக்க முடியவில்லையே என்று முன்பு தடுமாறியது அவளுக்கு நினைவு வந்தது.

அவளுடைய அந்தக் கலக்கத்தைக்கூட உணர்ந்து அதை அவனாகவே நீக்கியும் இருக்கிறானே.

ஊற்றாய்ப் பெருகிய குதூகலத்துடன், "இல்லை, ஆனந்த்!" என்று முறுவலித்தாள் அவள்.

"அதை அங்கேயே நின்று சொன்னால் எப்படி?" நகைத்தபடி கைகளை விரித்தான் சதானந்தன்.

செக்கர் வானமாய் முகம் சிவந்த போதும் ஓடி வந்து அந்தக் கைகளுக்குள் சிறைப்படச் சற்றும் தயங்கவில்லை, சுமித்ரா.